கே.ரீ.கணேசலிங்கம்



# சர்வதேச அரசியல்
## சில பார்வைகள்

சேமமடு

சேமமடு பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச அரசியல்
# சில பார்வைகள்

கே.ரீ.கணேசலிங்கம்

சேமமடு
சேமமடு பதிப்பகம்
2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூற் தலைப்பு | : | சர்வதேச அரசியல் சில பார்வைகள் |
| நூலாசிரியர் | : | கே.ரீ.கணேசலிங்கம் © |
| பதிப்பாளர் | : | சதபூ.பத்மசீலன் |
| பதிப்பாண்டு | : | 2010 |
| எழுத்து | : | 11 புள்ளி |
| பக்கங்கள் | : | 80 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | ரூ. 200.00 |
| அச்சிடல் | : | சேமமடு பதிப்பகம், கொழும்பு -11.<br>தொ.பே: 0777 345 666. |
| வெளியீடு | : | சேமமடு பொத்தகசாலை,<br>யுஜி.50, பீப்பள்ஸ் பார்க், கொழும்பு-11.<br>தொ.பே:011-2472362, 2321905. |
| **ISBN - NO** | : | **978- 955- 1857- 74- 5** |

| | | |
|---|---|---|
| Title | : | SARVATHESA AARASIYAL<br>SILA PARVAIKAL |
| Author | : | K.T.Kanesalingam © |
| Edition | : | 2010 |
| Price | : | Rs. 200.00 |
| Published by | : | Chemamadu Poththakasalai<br>UG.50, People's Park,<br>Colombo -11.<br>T.P : 011-2472362, 2321905. |
| Printed by | : | Chemamadu Pathippakam,<br>Colombo -11.<br>T.P 0777 345 666.<br>E-mail : *Chemamadu@yahoo.com*<br>Web : www.Chemamadu.com |
| வெளியீட்டு எண் | : | CBCN : 2010- 05- 02- 075 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையில் இதுவரையான அரசியல் அனுபவம், அரசியல் பாடம் மற்றும் அரசியல் வரலாறு நமக்கு பலநிலைப்பட்ட, பல தளப்பட்ட அரசியல்சுற்று சுழலோட்டங்களை அறிமுகம் செய்துள்ளன. இதன்மூலம் பன்னாட்டு அரசியல் முறைமையின் இயக்கத்தை முன்னிலைப்படுத்திய உரையாடலின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளன.

இன்று ஒரு நாட்டின் அரசியலை சர்வதேச அரசியலுடன் தொடர்புபடுத்தும் செயல்முறை விரிவாக்கமடைந்து வருகின்றது. "அரசியல்" என்னும் எண்ணக்கருவின் கோட்பாட்டாக்கம் பல்லினத்தன்மை உடையதாக விருத்தி பெறுகின்றது. அரசியல் என்பது நலன்கள் மோதல்கள் அதிகாரம் என்னும் புள்ளிகளில் மையம் கொண்டு இயங்கி வருகின்றது. அதாவது, இறைமையுடைய அரசுகள் தங்களுடைய தேசிய நலன்களை அடைவதற்காக ஒன்றுடனொன்று மோதலில் ஈடுபடுகின்றன. இதற்காக அதிகாரத்தினை பொதுவாக அரசுகள் பயன்படுத்துகின்றன.

ஆக, சர்வதேச அரசியல் என்பது இறைமையுடைய அரசுகளுக்கிடையிலான உறவுகள், உள்தொடர்புகள் என்பவற்றின் வழி ஏற்படுத்தப்படும் நலன்களுக்கான மோதல்கள் ஆகும். இவற்றை இன்றைய சர்வதேச புவிசார் சமூக அரசியல் முறைமையும் பிராந்திய அரசியல் செல்நெறிப் போக்குகளும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இன்னொரு வார்த்தையில் கூறுவதாயின் சர்வதேச அரசியல் என்பது இறைமையுடைய அரசுகளுக்கிடையிலான பரஸ்பர உறவு நிலைகளைக் குறித்து நிற்கின்றது. இவை உலகம் முழுவதும் - பன்னாட்டு உறவுகளின் நட்புறவுகளை அல்லது பகைமை உறவுகளை பரஸ்பரம் செயல்படுத்துவதை சுட்டிநிற்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகாலத்தில் சர்வதேச அரசியல் என்பது அரசு, அரசாங்கம், தேசம், தேசியம் தொடர்பில் பல்வேறு சிக்கல்பாடுகளையும் பிரச்சினைப்பாடுகளையும் தோற்றுவித்துள்ளன. அதிகாரம், ஆதிக்கம் தொடர்பில் பின்னப்படும் நலன்கள் தேவைகள் சார்ந்த அணுகுமுறைக்கான விமர்சனங்களையும் ஆழமாக்கியுள்ளன. ஒரு வகையில் இவை குழப்பமாகவும் சிக்கலானதாகவும் சர்வதேச அரசியலை விளங்கிக்கொள்ளத் தூண்டுகின்றது. இந்த இக்கட்டு நிலையைக் கடந்து ஓரளவு அரசியல் ஓட்டங்களை நலன்களை அவற்றின் பன்முகத் தன்மைகளை புரிந்துகொள்வதற்கான விளங்கிக்கொள்வதற்கான முயற்சியாகவே இந்த நூல் வெளிவருகின்றது.

இந்த நூலில் இழையோடும் தர்கிக்கப்படும் கருத்தியல் முடிந்த முடிபானது அல்ல. இவை மாற்றங்களுக்கும் புதிய தோற்றங்களுக்கும் உரித்தானவை. இந்த எச்சரிக்கையுணர்வுடன் நாம் இந்த நூலை வாசிக்க வேண்டும். சமகால தேவை கருதி இதனைப் பயன்படுத்த வேண்டும்.

சமகால அரசியல், சர்வதேச அரசியல் போன்ற விவகாரங்களை கருத்துரைக்கும் நடைமுறையில் கே.ரீ.கணேசலிங்கம் முனைப்பாகவும் தனித்துவமாகவும் விளங்குபவர். இதற்கு இவரது நூல்களே சாட்சி இந்நூலும் சமூக முக்கியத்துவம் கருதிய நூலாகவே வெளிவருகின்றது. அரசியல் மாணவர்கள் மட்டுமல்ல அரசியல் ஆர்வமிக்க சாதாரண வாசகர்களும் இந்நூலை பயன்படுத்த முடியும்.

நூலாசிரியருக்கு எமது வாழ்த்துக்கள்.

**தமிழாகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் உரை

அரசியல் என்ற அம்சம் ஒவ்வொரு நாட்டின் அரசியல் வாழ்வுடன் பின்னிப்பிணைந்துள்ளது. உலகில் எந்த அரசும் தனியனாகவோ, அல்லது தனித்துவமாகவோ செயல்பட முடியாத இயங்கியலுக்குள் வாழ்கின்றன. ஆனால் இன்றுமே "அரசு" என்ற அமைப்புக்குள் அகப்பட்ட விதத்தில் இயங்கும் அரசியல் தன்மையை சர்வதேச அரசியலில் காணமுடிகிறது. சர்வதேச அரசியல் கோட்பாட்டினை உருக்கிய காலம் முதல் மாறுதலுக்குரிய அம்சமாக செயல் பட்டுவரும் அரசுகளும் அவற்றின் தொழில்பாடுகளும் தனித்துவமிக்க ஒழுங்கை பேணுகின்றன. சர்வதேச அரசியல் என்ற சொற்பிரயோகத்தில் உள்ள வலிமை சற்று தணிந்து உலக அரசியல் என்ற முக்கியத்துவம் எல்லாக் கோட்பாட்டு ஆய்வுகளாலும் ஆய்வாளர்களாலும் சுட்டப்படுகிறது. ஆனால் அவ்வகை சொல்லாடலின் பிரயோகம் தமிழில் மிக அரிதாகவே பிரயோகிக்கப்படுகின்றது. உலகத்தின் போக்கினை அளவீடு செய்வதும் அதற்கேற்ப கொள்கை வகுப்பதும் அரசியல் மட்டத்திற்குட்பட்ட விடயம் மாத்திரமன்று அது சாதாரண பிரஜையின் வாழ்வியலுடன் இரண்டறக் கலந்ததொன்றாக உலக அரசியல் மாறிவிட்டது. இதனால் எல்லா பிரஜைகளும் உலக அரசியலை தெரிந்தும், விளங்கியும் அதற்கு ஏற்ப மாற்றங்களை முன்வைப்பதும் தவிர்க்க முடியாதது.

"அதிகாரம்" உலக மட்டத்தில் அரசுகளை மையப்படுத்தியதாக கொள்ளப்படும் நிலை காணப்படுகிறது. அதிகாரமே உலக அரசியலில் பிரதான இலக்காக உள்ளது. அவ்வகை அதிகாரங்கள் நிலையற்றவை என்ற பொதுப்போக்கினை அரசுகளுக்குள் மாற்றிக்கொள்ளும் பொதுப்போக்காக இனங்காணமுடியும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் வலுமிக்கதாக அமைந்திருந்த "அரசியல் அதிகாரம" இன்னோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் பிற அரசு ஒன்றிடம் கைமாற்றப்படும். அப்படியான உலகப்போக்கினை கண்டுவந்த சூழல் தற்போது மேலும் ஒரு புதிய மாறுதலை எட்டியுள்ளது. அவ்வகை மாறுதலை இனங்காண்பது மட்டுமன்றி அதற்கான இயங்கியல் விதிமுறை எவ்வாறு செயல்படு கின்றதென்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். இவ்வாறான அடையாளத்தை உணர்ந்து. "காற்புள்ளி" ஒன்றில் "இலங்கை ஆட்சி பரப்பு" மையவாத தன்மையை எடுத்துள்ளது. அதனை புரியவைக்க முயலும் இந்நூலில் அதன் போக்கு எவ்வகை நெருக்கடியையும் மாற்றங்களையும் தரும் என்பதை புறவயமாக உணரவைக்க முயலுகிறது.

பனிப்போர் முடிந்த உலக ஒழுங்கு ஒரு தசாப்தகாலம் நிலைத் திருக்கவில்லை 1989 - 2001 வரையான காலம் அமெரிக்க மேலாதிக்க காலமாக அமைந்திருந்தது. இது செப்ரெம்பர் தாக்குதலுக்கு பின்பு கரடுமுரடான பாதைக்குள் வேகமாக நகர்ந்தது. அதன் எல்லை அதிக காலம் நீடிக்கவில்லை. அக்காலத்தில் அமெரிக்கா நெருக்கடியை எதிர்கொண்டாலும் சாதனைகளை நிகழ்த்தியது. துணிகரப் பொருளா தாரத்தையும், அரசியல் தந்திரத்தையும் பயன்படுத்தி உலக ஒழுங்கில் தனது பங்கினை நிலைநிறுத்தியது. இது 2008ஆம் ஆண்டுடன் செப்ரெம்பர் 15 முதல் மேலும் ஒரு மாறுதல் காலத்தினை ஏற்படுத்தியது. அமெரிக்கப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட நிதிநெருக்கடி உலகப் பொருளாதார நெருக்கடியாக பரிமாணம் எடுக்கத்தொடங்கியது. இதன் விளைவாக உலகப் பொருளாதார மந்தம் படிப்படியாக அரசியல் ஒழுங்கில் புதிய சக்திகளின் வரவுக்கு வித்திட்டது.

அரசியல் எப்போதும் பல்துறைசார் பரிமாணமிக்கதொரு கற்கையாகும். அரசியலின் வெளிப்பாடு பொருளாதாரம் சார்ந்தும், புவியியல் சார்ந்தும், சமூகவியல் சார்ந்தும், மொழி, பண்பாடு, வரலாறு, தொல்லியல், தத்துவவியல் என பல்வேறு துறைசார்ந்து பரிமாணமெடுக்கும் ஓர் அம்சமாகும். இதில் எல்லாப் பரிமாணங்களின் வீச்சு எல்லையின் வேகத்தை வெளிப்படையாகக் காட்டும் விதத்தில் உடனடியாகவும், நேரடியாகவும் பொருளாதாரம் இடம்பிடிக்கின்றது. ஒருவகையில் அரசியல் பொருளாதாரம்சார் உலக மேலெழுகை தவிர்க்க முடியாததொன்றாகும். இது உலக அரசியலில் பரிமாணமிக்க ஓர் அம்சமாக பல நூற்றாண்டுகள் வரலாற்று ரீதியில் அவதானிக்க முடிந்தது. இவ்வகை அரசியல் பொருளாதாரப் போக்கினை நிர்ணயிப்பதில் புவிசார் அரசியலுக்குப் பாரிய பங்குண்டு. எந்த அரசும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அரசியல் ரீதியான அங்கீகாரத்தினையும் இறையாண்மை யையும் நிர்ணயிக்கவல்ல பலம் புவிசார் தளத்திலேயே தங்கியுள்ள தென்பதை உணர்ந்துள்ளன. இன்றைய உலக அரசியல் போக்கினை வடிவமைப்பதில் புவிசார் ஒழுங்குகளுக்கு பிராந்திய ரீதியிலும் உலக ளாவிய ரீதியிலும் தனித்துவமான அங்கீகாரம் காணப்படுகின்றது. அதனை அடிப்படையாகக் கொண்டே பொருளாதார விருத்திக்கான அடிப்படைகளும், இராணுவ ஒத்துழைப்புகளும் கலாச்சாரப் பாய்ச் சல்களும் நிகழ்ந்து வருகிறது. இதன் எல்லைக்குள் உலகம் இயங்கி வருகின்றது. இது உலகத்தின் இயங்கியலால் ஏற்படுத்தப்பட்ட வாய்ப்பாகும். இயற்கையின் அமைப்பு சார்ந்து மாற்றம் நிகழுமே அன்றி வேறு எந்த அடிப்படையிலும் புவிசார் தன்மையில் மாற்றம் நிகழ்வது கடினமானது. இதற்குள் அரசுகளும் இறைமை படைத்த அரசுகளும் மட்டும் அகப்படுபவையாக கொள்ளாது தேசிய இனங்களும் தேசிய இனவிடுதலைப் போராட்டங்களும் சாத்தியப்படுவனவாக உள்ளன. புவிசார்அரசியல் அரசுகளின் *(Geo – Political State)* நலன்களில் ஏற்படும் இலாப நட்டங்கள் அந்தந்த பிராந்திய அரசியல் வடிவத்தினை புதிய பரிமாணத்திற்கு இட்டுச்செல்லும்.

2008 செப்ரெம்பருக்கு பின்பு ஏற்கனவே வளர்ந்திருந்த சீனாவும், இந்தியாவும் அமெரிக்காவின் பொருளாதாரத்திற்கு போட்டியாக களமிறங்கியுள்ளன. இதில் இந்தியாவை விட அதிக படிகளைத் தாண்டி முன்னணியில் சீனா உள்ளது. சீனாவின் பொருளாதாரப் பாய்ச்சல் அதன் அரசியல் பலத்தினை நிர்ணயிக்கும் வலிமையைக் கொண்டுள்ளது. அவ்வகை வலிமையை சீனா உடனடியாக கொண் டிருக்காதுவிட்டாலும் எதிர்காலத்தில் மிகவிரைவாக சாத்தியப்படுத்தி விடும் அதற்குள் மீழெள வேண்டிய அமெரிக்க ஐரோப்பிய பொரு ளாதாரம் சிக்கலுக்குள் சிக்கியுள்ளது. அமெரிக்கா தனித்து வெளியே வரும் வாய்ப்புக் காணப்பட்டாலும் ஐரோப்பிய குடும்பத்தோடு கொண்டிருக்கும் நெருக்கத்தினால் வேகமாக வெளியே வரமுடியாத நிலைக்குள் தத்தளிக்கின்றது. ஆசியாவின் நூற்றாண்டென கூறப் படும் 21ம் நூற்றாண்டில் முதலொரு தசாப்தத்தில் சீனா இந்தியா என்பன வளர்ச்சிப்பாதையில் செல்கின்றன. இவற்றைப் போன்று பிரேசில், தென்னாபிரிக்கா என்பனவும் இந்தியா-சீனாவுடன் கூட்டுச் சேர்ந்து செயல்படுவதுடன் பொருளாதாரப் பாய்ச்சல் கிழக்கு நாடுகளின் ஆட்சிப்பரப்பில் மையங்கொண்டுள்ளதை காணமுடி கின்றது. 2008-2009 ஆண்டிலுருவாகிய அனைத்து சர்வதேச விட யங்களும் மேற்கு-கிழக்கு இழுபறித்தன்மையையே படம்பிடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டியது. குறிப்பாக உலக வர்த்தக மாநாடு (WTO) வளர்ச்சிய டைந்த நாடுகளின் மாநாடு (G20) காலநிலை பற்றிய மாநாடு *(Copakacan Conference 2009)* மனித உரிமை மீறல் தொடர்பான ஐ.நா மாநாடு *(Human Rights – 2009)* என்பனவற்றில் மேற்குக் கிழக்கு இழுபறி வளர்ந்து வருகிறது. குறிப்பாக WTO வில் பொருளாதார உற்பத்தி தொடர்பாக எழுந்த மோதல் விவசாயப் பொருட்களுக்கான முக்கியத்துவத்தைக் கொண்ட கிழக்கு தேசநாடு களால் முன்வைக்கப்பட்டது. உற்பத்தியின் அடிப்படையில் வர்த் தகம், சந்தைப் பரிமாணம் அமைவது பற்றி அதிகம் பேசப்பட்டது. G8 க்கு பதிலாக G20 உருவாக்க வேண்டிய நிலை மேற்குலகத்திற்கு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. வளர்ந்த நாடுகள் என்ற மேற் குலகின் ஆதிக்கம் தகர்ந்து போனதுடன் கிழக்குடன் கூட்டுச்சேர் வதன் மூலம் தமது பொருளாதார நெருக்கடியை பங்குபோடலாம் என்ற குறுகிய கணக்கினை வரைந்து கொண்டன. இவ்வாறு காலநிலை தொடர்பாக நடந்து முடிந்த கொப்பன்கேயன் மாநாட்டி லும் சீனா - அமெரிக்கா இழுபறி வெளிப்படையாகத் தெரிந்ததுடன் இந்தியா சார்ந்த கிழக்கு நாடுகள் மேற்குலகின் காபன்($Co_2$) வெளியேற்றத்திற்கு எதிராக காரசாரமான விவாதத்தில் ஈடுபட்டன. இறுதியில் அம்மாநாடு முழுமையான வெற்றி எதனையும் எட்டாது முடிவுக்கு வந்திருந்தது. இவ்வாறே இலங்கைக்கு எதிரான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுத் தொடர்பாக மேற்கு நாடுகளால் கொண்டுவரப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக கிழக்கு நாடுகள் அணி சேர்ந்தமை குறிப்பிடத்தக்கது அதன் எதிர்ப்புப் பிரச்சாரத்தில் இந்தி யாவும், செயலில் சீனாவுமாக அவ்வகை குற்றச்சாட்டிலிருந்து இலங்கையை வெளியே எடுக்கும் முயற்சியில் ஈடுபட்டமை கிழக்கு அரசியலின் கட்டமைப்பைக் காட்டுகின்றது. மேலும் இலங்கையில் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தலிலும் மேற்கு - கிழக்கு முறுகலும் இழுபறியும் இரண்டு பிரதான வேட்பாளர்கள் சார்ந்தி ருந்தது. எனவே ஒருதெளிவும் அவதானமும் புதிய ஒரு வடிவத்தின் பிரமாணத்தை காட்ட ஆரம்பித்துள்ளது. அதற்கான உலக அரசியல் போக்கின் வடிவம் "கிழக்கில் அரசியல்" என்ற சொல்லாடலுக்குள் அகப்படுத்த முடியுமாக உள்ளது. இதிலுள்ள அசௌகரிய அரசிய லையும் இனங்காணத் தவறக்கூடாது. அத்தகைய கிழக்கு அரசிய லுக்கு எதிரும் புதிருமாக இந்தியா -சீனா காணப்படுதல் அதிஷ்ட வசமான அரசியல் விம்பங்களை எதிர்கால நோக்கில் தோற்றுவிக்க முடியும். ஆனாலும் எழுச்சிக்காலம் முடிவுறாத இந்தியாவின் விட்டுக்கொடுப்பு அரசியல் சீனாவின் போக்கை நிதானப்படுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுவதுடன் சீனா-அமெரிக்க போட்டி முதன்மை அடைந்துள்ள மையும் மோதலை தவிர்க்க உதவும் காரணிகளாக அமையலாம். அது இந்தியாவின் அரசியல் தலைமையைப் பொறுத்து அமையும் விடயமாக விளங்கும். எதுவாயினும் உலக அரசியலின் இயங்குதிறன் ஆசியாவிற்குள் தென்படுவதுடன் "இலங்கை" அதில் முக்கியத்துவம் பெறும் நாடாக அமைந்துள்ளது. இலங்கையின் அரசியல் தலைமைக்கு ஏற்படும் மாற்றங்கள் எதுவாயினும் அது சீனா - இந்தியா - அமெரிக்கா என்ற முத்திசைப்பரிமாணத்திற்கு இடையிலான அரசியலாகவே அமையும். இதில் வெற்றிபெறும் அணி என்பது எதுவாக இருந்தாலும் மறுமுனையில் தோல்வி அடையும் நாடுகள் இரண்டும் இலங்கை விடயத்தில் ஒன்றாகப் பயணிக்க முயல்வது தவிர்க்க முடியாதது. இது ஆரோக்கியமான இலங்கையை உருவாக்க ஒத்துழைக்குமா என்ற கேள்வியையே முதன்மைப்படுத்துகிறது.

எனவே, இந்நூலின் பரப்பெல்லை இறைமைக்கும் - உலகயவாக்கத்திற்கும் இடையிலான முற்றுப்புள்ளியைக் காட்டுவதுடன் பொருள்சார் உலகத்தில் புவிசார் அரசியலின் முக்கியத்துவத்தின் உணர்வு எவ்வகைத் தாக்கத்தை ஏற்படுத்துமென்பதைக் காட்ட முயல்கிறது. விடுதலையற்ற அடிமை வாழ்வின் அரசியல் ஆதிக்கம் தேசிய பொருளாதாரத்தை குலைத்து தேசிய அரசியலினதும், தேசிய பாதுகாப்பினதும் வலிமைகளை வெளிப்படுத்தியுள்ளது. அத்தகைய தேசிய பாதுகாப்பின் வலிமை உத்தரவாதப்படுத்தும் அடக்குமுறையையும், மக்கள் எதிர்ப்பு அரசியலையும் ஆக்கிரமிப்பு சார்ந்து அடக்க உதவப் போகிறதென்பதை காட்ட இந்நூல் முயன்றுள்ளது.

இந்நூலை மிகக்குறுகிய காலத்தில் தயாரித்து வாசகர்கள் மற்றும் மாணவர் மத்தியில் முன்வைக்கிறேன். இதனை உருவாக்க உதவிய "தினக்குரல்" (யாழ் - கொழும்பு) ஆசிரியர்களுக்கும், அதன் பணியாளர்களுக்கும் மற்றும் முகாமையாளர்களுக்கும் நன்றிகள். இதைவிட எனது மாணவர்களுக்கும் நண்பர்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும். என்னோடு எப்போதும் உழைக்கும் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் நான் எனது எண்ணங்களை வெளிப்படையாக வெளியுலகிற்கு சொல்ல முயலும் முதல்வாசிப்பாக இந்நூலை முன் வைக்கிறேன். கடந்த காலத்தில் என்னால் எழுதவும், எழுதியவற்றை வெளியிட முடியாமையாலும் சிறைப்பட்டுப்போன எனது கருத்துக் கள் ஒரளவு இந்நூலில் தெறிப்படைந்துள்ளது. புலமையாளர்களை புலமையாளராக பார்க்க முடியாத சமூகத்தினை கிரேக்க காலத்திலிருந்து இன்றுவரை அவதானிக்கின்றேன். சோக்கிரட்டீஸிற்கு நிகழ்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமை போன்ற நிகழ்வுகள் இன்னுமே முடிவிற்கு வரவில்லை எப்போது அவ்வகைப் போலியும் பொய்மையும் ஏமாற்றுத்தனமும் முடிவிற்கு வருகின்றதோ அன்றே ஆரோக்கியமான கருத்துக்கள் எமது சமூகத்தில் வெளிவரும் என்னையும் அவ்வகைக் கொடுமைக் குள் தள்ளி அவமானப்படுத்தி புலமைசார் பணியிலிருந்து அகற்ற லாமென ஒரு சிலர் ஆசைப்பட்டனர் அதற்கு உதவியாக சமூகத்தில் முதன்மை வகிப்பவர்களாக தம்மைக் கூறிக்கொள்பவர்கள் உடந் தையாக இருந்தனர். இவர்களுக்கெல்லாம் சமகாலம் பதில் சொல்ல ஆரம்பித்துள்ளது. காலத்திற்கு எல்லோரும் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

**கே.ரீ. கணேசலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

கே.ரீ.கணேசலிங்கம் அவர்களது "தென்னாசியாவின் அரசியல் கலாசாரம்" என்னும் நூலை 2009இல் எமது வெளியீடாக கொண்டு வந்தோம். இந்நூலுக்கு பரவலாக வரவேற்பு இருந்ததையும் நாம் அறிவோம். தற்போது இவரது இந்நூலையும் வெளியிடுகின்றோம்.

சமகால அரசியல் நிலைமைகளை விளங்கிக்கொள்வதற்கு இந்நூல் ஒரு சிறப்பு வழிகாட்டியாகவும் உள்ளது. அரசியல் ஆர்வமுள்ளவர்களும் சாதாரண வாசகர்களும் கூட இலகுவாக அரசியல் போக்குகளை விளங்கிக்கொள்வதற்கு இந்நூல் உதவுகின் றது. இது சிறிய நூலாயினும் சமகாலத்துக்குத் தேவையான நூலாக வும் உள்ளது. இதுபோன்ற சிறிய நூல் வரிசைகளை நாம் தொடர்ந்து வெளியிடுவதன் மூலம் சமூகத்தின் அரசியல் கல்வி மட்டத்தை ஓரளவு உயர்த்திக் கொள்ள முடியும்.

இந்நூலை நாமே வெளியிடுவதற்கு மீண்டுமொரு சந்தர்ப் பத்தை நல்கிய நூலாசிரியருக்கும் ஏனைய நண்பர்களுக்கும் எமது நன்றிகள்.

**பதிப்பாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


மேற்கு - இந்திய சீன முரண்பாடும்
இலங்கை அரசியலும் 13

நிதிநெருக்கடியும் உலக அரசியலும் 22

உலகநாடுகளும் காபன் அரசியலும்
கொப்பன்கேயன் மகாநாடும் 53

முடிவுரை 59

நூற்குறிப்பு 63

பின்ணிணைப்பு

தென்னாசிய நாடுகள் எதிர்கொள்ளும் சவால்களும்
இந்தியாவின் வளர்ச்சியும். 64




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# I

# மேற்கு - இந்திய சீன முரண்பாடும் இலங்கை அரசியலும்

முத்துமாலைத் தொடரின் குஞ்சமாக (கொத்துக்களை கொண்ட திரட்சி) இலங்கைத் தீவில் அமையவுள்ள அம்பாந்தோட்டைத் துறைமுகம் சீனாவுக்குரியதாக அமைய போகிறதென அமெரிக்க உளவுமையமான C.I.A கடந்த ஆண்டு ஜூலையில் வெளியிட்ட தனது அறிக்கையில் தெரிவித்தது. முத்துமாலைக்கு அழகு சேர்ப்பது மையப்பகுதி என்பது எல்லோருக்கும் விளங்கக்கூடியது. அவ்வகை மையத்தில் இலங்கைத்தீவு காணப்படுகிறது.

அவ்வகையில் சீனக் கடலாதிக்கக் கொள்கைக்கு இலங்கை முக்கியத்துவம் பெற்றுவிட்டதென்பதே இந்தியாவுக்கும், மேற்குக்கும் ஏற்பட்ட அபாயச் செய்தியாகும். 1990களில் கடற்பறவை *(sea bird)* திட்டத்தை வரைந்த இந்தியா, அதனை சீனா, பாகிஸ்தான் உட்பட ஒருவகை உபாயத்தினையும் அமெரிக்கா, சீனாவுடனான இந்திய நெருக்கத்தை இன்னொரு வழியிலும் உள்ளடக்கிய தந்திரோபாய புவிசார் அரசியல் உறவினைத் தயார் செய்தது. அதன்படி பாகிஸ்தானை ஏனைய வலுவான அரசுகளுக்கு நிகரானதாக மாற்றியதுடன் சீனா அமெரிக்கா மட்டத்தில் இந்தியாவின் போட்டி தவிர்க்க முடியாத நெருக்கடியை கொடுக்க தலைப்பட்டது. அரசியல் பொருளாதாரம் இராணுவ ரீதியில் இவ்வாறான நெருக்கடிக்குள்ளிருந்து சீனாவை ஓரங்கட்ட இந்தியா முயன்றதன் பிரதிபலிப்பாகவே இலங்கைத் தீவின் இன நெருக்கடி தீவிரம் பெற்றது. சீனாவின் பிரசன்னம் எப்படியும் நிகழலாமென அச்சமடைந்த இந்தியா, சீனாவை இலங்கைத் தீவில் செல்வாக்குச் செலுத்த முடியாத நிலையை எடுக்க முயன்றது. அதற்குரிய உபாயங்களை மேற்குடன் கூட்டுச்சேராமலே கையாள விரும்பியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையின் பொருளாதாரப் போட்டியில் குறிப்பாகச் சந்திரிக்கா குமாரதுங்க ஆட்சிக்காலத்தில் சீனா, இந்தியாவை விட செல்வாக்குச் செலுத்தியது. இலங்கையுடனான வர்த்தகத்திலும் குறிப்பாக சிறுகைத்தொழில் மற்றும் இயந்திரங்கள் இயந்திர உதிரிப் பாகங்கள் மற்றும் நுகர்வுப்பொருட்கள் என பல துறைகளிலும் சீனா இந்தியாவை விட முதன்மை பெற்றது.

2001ஆம் ஆண்டுக்குப் பின்பு புதுடில்லியில் நிகழ்ந்த சார்க் மகாநாட்டை அடுத்து வரியற்ற வர்த்தக உடன்படிக்கையொன்றை (FTA) இந்தியா, இலங்கையுடன் மேற்கொண்டது. ஆரம்பத்தில் அவ் உடன்படிக்கையில் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க கையொப்பமிட மறுத்ததுடன் இலங்கை திரும்பியிருந்தார். இந்திய இராஜதந்திரிகளும் அரசியல் தலைவர்களும் எடுத்த பல்வேறு பிரயத்தனங்களையடுத்து அப்போதைய வெளியுறவுத் துறையின் அமைச்சர் கதிர்காமரை அழைத்து நிகழ்த்திய பேச்சுக்களை அடுத்து ஒப்பந்தத்தில் குமாரதுங்க ஒப்பமிட்டார். இதற்காக இந்தியர்கள் ஈழவிடுதலை அமைப்பின் மீதான அணுகுமுறையில் மென்மை போக்கை பேச்சுக்களிலும், வெளியிடும் அறிக்கையிலும் வெளிப் படுத்தி காரியத்தினை சாதித்தார்கள்.

இதன் பின்பு சீனாவிடமிருந்த சந்தையை அதாவது 1997-1998இல் 40சதவீத மோட்டார் வாகன சந்தையை 2005இல் இந்தியா கைப்பற்றியதோடு சீனாவை 10சதவீதமான சந்தைக்குரிய நிலைக்குத் தள்ளியது. இந்தியா 60 சதவீதத்தினை நிரப்பீடு செய்தது.

இவ்வாறு பொருளாதாரப் போட்டி நிகழ குமாரதுங்கா அரசாங் கம் சீனாவுடன் நேரடி உறவைப் பலப்படுத்த ஆரம்பித்தது. இந்தியா வைக் கையாள அவர் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் போன்று தனித்து மேற்கிடம் செல்லாது சீனா பக்கம் திரும்பியதுடன் சீனாவு டன் பாரிய பொருளாதார உடன்படிக்கையிலும் கைச்சாத்திட்டார். குறிப்பாக நேரடிக் கப்பல் போக்குவரத்து, அம்பாந்தோட்டைத் துறை முகவிருத்தி, மன்னார் எண்ணெய் ஆய்வு, பாரிய கிராமிய அபிவிருத் திக்கான கருத்திட்டங்கள் என நிறைய உடன்பாடுகளைச் சீனா வுடன் மேற்கொண்டார்.

ஜே.வி.பி யின் சீனச் சார்புத் தன்மைக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் சீனச்சார்புக்கும் முன்னோடியாக குமாரதுங்க செயற்பட்டார். அவரது பாதையில் புதிய ஆட்சியாளர்களின் வெளி யுறவுக் கொள்கை தீவிரம் அடைந்தது. சீனத் தயாரிப்புகளை அதிகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட இராணுவத் தளபாடங்களை ஜனாதிபதி ராஜபக்ஷ கொள்வனவு செய்தார். ஒரு பக்கம் ஜே.வி.பி மறுபக்கம் பொதுஜன ஐக்கிய முன்னணி எனத் தென்இலங்கை சீனா பக்கம் முழுமையாகச் சாய வடஇலங்கையும் இந்தியாவின் எதிர்ப்பினால் மேற்கின் பக்கம் சாயும் போக்கை கடைப்பிடித்தமை இந்தியாவுக்கு அச்சுறுத்தலாக காணப்பட்டது. இதில் வடக்குக் கிழக்கின் ஆயுதப்போராட்ட சக்திகள், மேற்குலகை கைவிடும் பட்சத்தில் சீனா பக்கம் சாய்ந்து விடுவார்கள் என்ற நிலையும் இந்திய புலனாய்வாளர்கள் மத்தியில் காணப்பட்டது. இதனால் சீனாவை முழுமையாக அப்புறப்படுத்தும் உபாயத்துக்குள் இந்தியாவின் இராஜதந்திர, இராணுவ, அரசியல், நிர்வாக, கலாசார மாதிரிகள் பிரயோகத்தை மேற்கொண்டன.

இந்த நிலையிலே போரையும், ஆயுதப்போராட்டத்தின் முடிவையும் வரைய இந்தியத்தரப்பு சிந்தித்தது. அதனை நடத்தி முடிக்க எடுத்த கட்டத்தில், வட-கிழக்கு பகுதியில் வலுவடைந்திருந்த ஆயுதப் போராட்டமும் போராட்ட அமைப்பும் மேற்குலகம் மீதான நம்பிக்கையோடும் முழு உலகத்தின் மீதிருந்த மனிதநேயம் பற்றிய கருத்துக்களோடும் போரை எதிர்கொள்ளத் திட்டமிட்டிருந்தன. ஆனால் அவ்வாறு மேற்குலகமும், உலகமும் தனது நலனுக்குட் பட்டே இலங்கைத்தீவை எதிர்கொள்கின்றன என்ற நியாயமான எண்ணத்தையும் அட்டவணையையும் சரிவரக் கணக்குப்போடத் தவறியதன் விளைவே போரில் இந்தியத்தரப்பின் வெற்றிக்கு அடிப் படையாக அமைந்தது.

இச்சந்தர்ப்பத்தில் மேற்குலகின் தற்போதைய நிலையும் இந்தியாவின் திரிசங்குநிலையும் அளவீடு செய்வதன் மூலமே உலகப் போக்கின் மையமாக இலங்கைத்தீவு விளங்குகிறதென்பதை புரிந்து கொள்ளமுடியும். இது இந்திய-சீன-மேற்குலக அரசியல் களமாக இலங்கைத்தீவை மாற்றியுள்ளது என்பதுடன் வெற்றியை சுவைக்கப் போகும் சக்தி எதுவென்பதை ஓரளவு ஊகிக்க உதவும்.

இலங்கைத்தீவில் நிகழும் வன்முறைக்கு முடிவு ஏற்பட்டதாக இந்தியா கூறுவது போன்றே இலங்கை ஆட்சியாளர் கருதவில்லை. இந்தியா வெளிப்படையாக இலங்கை அரசியல் தலைமைப் பாதுகாக்க விரும்புகின்றது. இதில் சீனா, ரஷ்யா என்பனவும் அதே விருப்புரிமையைக் கொண்ட நாடுகளாக உள்ளன. ஆனால் சீனா போன்று ரஷ்யா இலங்கைத்தீவில் தனது நலனுக்காகப் பங்கெடுக்க வேண்டுமென்ற அவாவில்லாத நாடு. அதன் கட்டம் ஐக்கிய நாடுகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபையில் தனது வீட்டோவைப் பயன்படுத்துவதுடன் பூரணமானது. மறுபுறத்தில் தான் இந்தியாவுடன் நிற்பதாகக் காட்டிக்கொள்ள வேண்டும். இதனோடு ரஷ்யாவின் விருப்பம் பூரணமாகின்றது. சீனா அப்படியான நிலையிலில்லை. சீனா தனது முத்துமாலைத்தொட ரைப் பாதுகாப்பதென்ற விருப்போடு செயற்படுவது மேற்குக்கு எதிரான புதிய வல்லரசு என்ற கனவோடு மிக நீண்ட காலமாகப் பயணம் செய்கிறது. குறிப்பாக அமெரிக்க எதிர்ப்பினையும் சீனா கொண்டுள் ளது. இதனால் மேற்குலகம் இலங்கைத்தீவின் ஆட்சியாளர்களைப் பாதுகாப்பதென்ற இலக்கினை கடந்து தனது நலனுக்கு இலங்கை ஆட்சியாளரால் ஆபத்து ஏற்பட்டுவிடும் என்ற நிலைக்குப் பதிலளிக் கும் விதத்திலேயே செயற்படுகின்றன.

ஆரம்பத்தில் உலக வங்கியை வைத்து இலங்கை ஆட்சியாளர் களைக் கையாண்ட மேற்குலகம் தற்போது ஐ.நா சபையையும், மனித உரிமை கவுன்சிலையும் சர்வதேச நீதிமன்றத்தையும் "சனல்-4" விவகாரத்துக்கூட்டாக கையாள ஆரம்பித்துள்ளது. இது ஏன் நிகழ்கிறது என்பதே இன்றுள்ள கேள்வியாகும். போர்முடிந்தது. சில சக்திகளின் அத்தியாயம் முடிந்துவிட்டது. அப்படியாயின் ஏன் நெருக்கடியை மேற்குலகம் செய்கிறது. அதுவே மேற்குலகுக்கு கிடைத்திருக்கும் தூண்டில்.

மேற்குலகம் இந்தியாவுடன் தான் ஏற்படுத்திகொண்ட உறவு காரணமாக இலங்கைத்தீவை இந்தியாவிடமே முழுமையாக ஒப்படைத்திருந்தது. ஆனால் இந்தியா-மேற்குலகத்திற்கு தலையும், சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் வாலையும் காட்டிக்கொண்டு தனது வல்லரசுக்கான அணுகுமுறையைத் தீவிரப்படுத்தியது. மேற்குக்கு, வடக்கு-கிழக்கு அரசியல் சக்திகளை முழுமையாக அழிக்கும் நோக் கம் இல்லை ஆனால் சில மட்டுப்பாடுகளை ஏற்படுத்தி அவர்களை மேற்குக்கு ஏற்பத் தாளம் போடும் சக்திகளாக்க விரும்பியது. ஆனால் இந்தியாவே மேற்குடன் இருந்துகொண்டு மேற்கின் விருப்பத்தைப் போட்டுடைத்துவிட்டது இந்த சீண்டலால் மேற்கு இந்தியா மீதான கோபாவேஷத்தை உள்ளார்ந்த ரீதியில் கொண்டிருந்ததால் இலங்கை ஆட்சியாளரைத் தண்டிக்க முயல்வதன் மூலம் இந்தியாவைத் தண்டிக்க விரும்புகின்ற காலம் ஒன்று தற்போது விரிந்துள்ளது. இது தமிழருக்கோ அல்லது அவர்கள் சார்பான சக்திகளுக்கோ இலாபம் தரப்போவதை விட மேற்குலகுக்கு அதிக இலாபம் ஆகும். அவ்வகைச் சந்தர்ப்பத்தில் ஏற்படப்போகும் நெருக்கடி இந்தியாவுக்கு நெருக்கு வாரத்தினை ஏற்படுத்தும். அதில் மேற்குலகம் வெற்றி பெறுகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையும் சந்தர்ப்பமும் ஏற்படும் பட்சத்திலேயே மேற்கானது இந்தியாவைப் பகைத்து செயற்பட விரும்பும். அவ்வாறே மேற்குக்கும் வெற்றி இன்றிய நிலை ஏற்பட்டால் அதற்குள் சீனா நுழைந்து வெற்றிக்கனியை சுவைக்குமென மேற்குக் கருதுகிறது. இதுவே மேற்குலகின் மெதுவான, நிதானமான போக்குக்கு காரணமாகும்.

மேற்கு தான் தோற்குமெனக் கருதினால் இந்தச் சூழலை இப்படியே கையாள விரும்பும். தனக்கு வெற்றி கிடைக்கும் பட்சத்தில் மட்டுமே இலங்கைத்தீவு விவகாரத்தை பூதாகரமாக்கி அதனை அடைய விரும்பும். அதற்காக முற்றாகத் தான் கைவிட்டு விட்டதாக ஒருபோதும் இருக்கபோவதில்லை. இப்படியாயின் மேற்கு எப்போதாவது வெல்லுமா? என்பது அடுத்த கேள்வியாகும்

சமகால உலக அரசியல் போக்கில் வல்லரசுப் போட்டியில் அடுத்த ஆசியநாடு இந்தியாவாகும். இந்தியா 2020இல் வல்லரசு கனவுடன் செயல்பட கடந்த இரு தசாப்தங்களாக திட்டமிட்டு வந்துள்ளது. அதற்கான போராட்டத்தை இந்திய ஆளும் வர்க்கம் மிக நீண்டகாலம் முதல் பின்பற்றி வருகின்றது. பொருளாதாரப் போட்டியில் முன்னேறியுள்ள இந்தியா உள்நாட்டு உற்பத்தியை அதிகரித்துள்ளது. வெளிநாட்டு வர்த்தகத்தில் கணிசமான இடத்தினை நிரப்பி வருகின்றது. இராணுவ ரீதியான வளர்ச்சியிலும் கணிசமான பங்கினை எட்டிவிட்டது. அணுவாயுத உற்பத்திக்கு பின்பான இராணுவ ஆயுத தளபாட மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் முதன்மை பெற்ற நாடாக வருவதற்கு தயாராகிக்கொண்டுவரும் நாடு இந்தியா. அண்டவெளி தொழில்நுட்பத்திலும் முன்னேறிவரும் இந்தியா அரசியல் ரீதியில் ஓரளவு ஸ்த்திரத்தினையும் நெருக்கடிமிக்கதும் குழப்பகரமானதுமான கட்டத்தில் இந்தியாவின் இருப்பு காணப்படுகின்றது. இந்த நிலையில் ஏன் இப்பிராந்தியத்தில் போரை ஆதரிக்கும் நாடாகவுள்ளது. அதிலும் அவ்வகைப்போர் வேறு நாடுகளை விட சீனாவுடன் நிகழவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தில் ஏன் செயல்படுகின்றது.

இந்தியா இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் பிரதான வலுமிக்க புவிசார் சூழலை கொண்டிருக்கும் நாடு. அதே நேரம் இந்தியர்கள் தம்மை இந்தியா என உணர்ந்த காலம் மிகப் பிந்தியது. பிரித்தானிய குடியேற்றவாதம் ஏற்படுத்திய நிர்வாக மற்றும் சுரண்டலுக்கான கட்டமைப்பே இந்தியா என்பதாகும். அதுவரை குறுநில ஆட்சிக்குள்ளும், இஸ்லாமியர்களது படையெடுப்புக்குள்ளும் சிக்கி துயரப்பட்டுக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்த பிரதேசமாகவே இந்தியா காணப்பட்டது. இந்து, பௌத்தம், சமணம், இஸ்லாம் என்ற மதப்பாரம்பரியத்துக்குள்ளால் பிரிப்புகளும் நிலமானிய, சாதிவாத, குலமரபுவாத பிரிவினைகளால் அடிமைப்படுத்தப்பட்டிருந்த இந்தியா பிரித்தானியர்களால் ஒன்றிணைக்கப்பட்ட தேசமாகவும் பின்னர் காந்தி, நேரு போன்ற தலைமைகளால் ஐக்கியப்படுத்தப்பட்டதுவே இன்று காணும் இந்தியா அதிலும் தற்போதைய மியன்மார் (1933), பாகிஸ்தான் (1947), பங்களாதேஸ் (1971) என்பன பிரித்தானியருக்கு பின்பு இந்திய உபகண்டத்திலிருந்து வெட்டிப்பிரிக்கப்பட்ட நிலை காணப்பட்ட துடன் இந்தியாவின் இருப்புக்கு இஸ்லாம் ஒரு நெருக்கடிமிக்க மதமாகவும் அரசியல் சக்தியாகவும் காணப்பட்டது. இவ்வகை இந்தி யாவும், இந்திய ஆட்சியாளர்களும் விட்ட தவறுகளும், தூர நோக்கற்ற அரசியல் சிந்தனைகளுமே போருக்கு தவிர்க்கமுடியாத உரமாக மாறியுள்ளது. குறிப்பாக இந்தியாவின் ஆரம்பகால கொள்கை வகுப்பில் காந்தி, நேரு இழுபறி நிலை ஒன்று சுதந்திரப் போராட்டத் திலிருந்து வளர்ந்துள்ளது. அதனால் கே.எம்.பணிக்கர் போன்ற வரலாற்று, இராஜதந்திர வல்லுனர்களது கருத்துக்கள் கைவிடப்பட்ட துடன் பிரிட்டிஷ் இந்தியர்கள் பின்பற்றிய பாதுகாப்புக் கொள்கை களை இந்தியர்கள் பின்பற்ற தவறியதுடன் நவீனத்துவம் என்ற போர்வைக்குள் நேருவின் தலைமை ஆபத்தான இந்தியாவை மேற் குலகத்திலிருந்து கட்டி வளர்க்க ஆரம்பித்தது. அணி சேராமையை உதட்டளவில் பேசிய நேரு அமெரிக்க பக்கம் சார்ந்து மேற்குலக வரைபுக்குள் இந்தியாவை நவீனமயப்படுத்துவதாக எண்ணினார். இது இந்திராகாந்தி காலத்தில் மாறினாலும் ஏகாதிபத்திய மனோநிலை இந்திய தலைமைக்குள் வளர்ந்தே வந்தது. இது இன்றுவரை வளர்ந் துள்ளது. இந்தியா பிற பிராந்தியங்களையும், அயல்நாடுகளையும் எஜமான் அடிமை என்ற ஆதிக்க மனநிலைக்குள்ளேயே கணக்குப் போட்டது. அதனால் இந்தியாவின் சுதந்திர காலமும் அதன் முதல் இருதசாப்தமும் கீழைத்தேசங்களுக்கு தலைமை தாங்கும் வல்லமை யுடையதாக காட்டிக்கொண்டதுடன் பிற கிழக்கு நாடுகளுக்கு ஆதிக்கம் சார்ந்த தலைமையைக் கொடுக்கும் நாடாக விளங்கியது.

இதனால் பல போர்களை இயலாமைக்கு அப்பால் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது. அதிலும் குறிப்பாக பாகிஸ்தான் இந்தியப் போர்கள் மதவாதத்தினை முன்னிறுத்தி கிளர்ச்சியான ஒரு நெருக்கடி கட்டத்தை ஏற்படுத்தியது. மேற்கை பொறுத்தவரை பிரிட்டிஷ்க்கு பிந்திய இந்தியா புவியியல்சார் நிலையில் துண்டாடப்பட்டதாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பு அச்சுறுத்தலை கொண்டதாகவும் மேற்கில் தங்கியிருக்கும் நாடாகவும் இருப்பதை விரும்பியது. இதற்காக பாகிஸ்தான் பிரிவினைக்கும், மியன்மார் (பர்மா) பிரிவினைக்கும் மேற்கு ஆதரவு அளித்ததுடன் காஷ்மீரை நேருவுக்காக இந்தியா ஆக்கிரமிக்க முயன்றபோது ஆதரித்தது போல் சீன- இந்திய எல்லைத்தகராறு ஏற்பட்டபோது மக்மிலன் கோடு, மேனன் கோடு, மோகன் கோடு என எல்லைகளை பிரிப்பதிலும் வரைபதிலும் கரிசனைக் காட்டிச் செயல்பட்டது. 1962இல் இந்தியாவின் நிலப்பரப்பில் இலங்கையளவான பகுதியை சீனா கைப்பற்றி போருக்கு தூண்டுதலாக மேற்கே இருந்துள்ளது. இதே போக்குக்குள்ளேயே வாஜ்பாயும், நரசிம்மராவும், மன்மோகன்சிங்கும் தமது அரசியல் சிந்தனைகளை வகைப்படுத்தி வருகின்றனர். எல்லாவற்றிலும் மிக மோசமான அரசியலில் சமநிலையில்லாத முடிவுகளை எடுப்பதில் மேற்குறிப்பிட்ட பட்டியலில் மன்மோகன்சிங் முதன்மையான மேற்கு விரும்பியாக உள்ளார். 100 கோடிக்கு மேலுள்ள சனத்தொகையில் காங்கிரஸ்க்கு தலைமை தாங்க இத்தாலிய முசோலினியின் பரம்பரைக்குள்ளிருந்து அல்லவா தலைமையைத் தேடவேண்டியுள்ளது. இதில் எந்த நவீனத்துவத்தையும் இந்திய ஆளும் வர்க்கம் பின்பற்றாது. பிரதேசத்திற்கும் அயல் நாடுகளுக்கும் போதனை செய்யும் இந்திய ஆளும்வர்க்கம் இந்தியாவுக்கு ஒரு இத்தாலிய பெண்ணை தலைமைதாங்க வைத்துள்ள மரபுவாத, அடிப்படைவாத, பழைமைவாத சிந்தனையை தவறானதென கருதாது ஏன் என்பதே இந்தியாவின் போக்கினை நிர்ணயிப்பது யார் என்பதை புரிய உதவும்.

எனவே இந்தியாவை நகர்த்துவதில் மேற்குக்கு அதீத பங்கு உண்டு. இந்தியா இலங்கை விடயத்தில் மேற்குலகை பகைக்க முயன்றமை உடனடி நிகழ்ச்சி நிரலல்ல என்பது கவனிக்கத்தக்கது. மேற்குலக பாணிக்குள்ளேயே இந்தியா இலங்கை விவகாரத்தை சரிசெய்துவிடும் போலவே தென்படுகிறது. இலங்கையையும் சாமாளித்து மேற்கையும் சாமாளித்து சீனாவை அப்புறப்படுத்த கடும்பிரயத்தனம் செய்யும் நிலையிலேயே இந்தியா ஈடுபடுகிறது.

இந்தியா அயல்நாடுகளையும், உலகின் இதர பாகங்களையும் ஆதிக்கம் செலுத்த முயலும்போது உள்நாட்டு நிலப்பரப்பையும் இந்தியப்பாதுகாப்பு அரணையும் பேணத்தவறிவிட்டது. குறிப்பாக வடகிழக்கு மாநிலங்கள் ஏழும் மாவோஸ் - நக்சலைட்டுக்களின் ஆயுதப்போராட்டத்துக்குள் அகப்பட்டுள்ள துயரம் இந்தியாவின் உள்கட்டமைப்பு நெருக்கடியை சந்தித்து விட்டதென்பதை காட்டுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேபாளத்தில் எழுச்சியடைந்த மாவோஸ்டுகள் இந்தியாவின் மையநிலங்களுக்குள் ஊடுருவி விட்டார்கள். இதனை தூண்டும் நாடு சீனா என்பது வெளிப்படையாக தெரியும். சீனாவின் இந்து சமுத்திரம் நோக்கிய கடலாதிக்கம் இந்தியாவை சுற்றி வளைத்திருப் பது போல் இந்திய நிலப்பரப்பை ஆதிக்கம் செய்ய ஆரம்பித்துவிட்டது. இது சீனா நேரடியாக படையிறக்கி ஆதிக்கம் செய்வதாக யாரும் கற்பனை செய்யாதீர்கள். விளக்கமும் கொடுக்காதீர்கள். மாறாக சீனாவின் மாவோவின் சிந்தனை ஆதிக்கம் செய்வதனையே குறிப்பிடப்படுகிறது. வடமேற்குப் பக்கம் இஸ்லாமும், வடகிழக்குப் பக்கம் மாவோஸமும் இந்திய மரபுவாத சிந்தனைக்குள் நகர்கின்றது. இதனால் புதுடில்லி கடுகடுத்து போயுள்ளது. அண்மையில் மேற்கிட மிருந்து பெருமளவான ஆயுத தளபாடத்தை வாங்கி பாகிஸ்தான், சீனா எல்லையோரங்களில் இந்தியா குவிக்க திட்டமிட்டுள்ளது. இது இந்தியாவின் பாதுகாப்புக்கான உபாயமாக மட்டும் அமையப் போவதில்லை. வடகிழக்கு மாநிலங்களில் வாழும் மொங்கோலிஸ் டுக்களின் கலப்பின அடையாளத்தை வைத்துக்கொண்டு சீனா தனது இனமெனக் கூறுகிறது. அருணாசல பிரதேச பிரஜைகளுக்கு சீனாவுக் குள் வருவதற்கு விஸா தேவையற்றது என்றும் சீனாவின் பிரஜை களுக்கு சீனா விஸா வழங்குவதில்லை என்றும் இந்தியாவுக்கான சீனத்துாதரகம் கூறியிருந்தமை புரிந்துகொள்ள வேண்டிய செய்தியா கும். இதனால் இந்தியா தன்னைப் பாதுகாக்க போர் அவசியமாகபடு கிறது. தனது மாநிலங்களை சூறையாடும் சக்திகளை கட்டுப்படுத்த வும் அதனால் ஏற்படபோகும் நெருக்கடியை தவிர்க்கவும் போர் அவசியமானது. அதுமட்டுமல்ல அவ்வகைப் போர் இந்தியாவின் இஸ்திரத்தையும் வல்லரசு வலுவையும் உலகத்திற்கு காட்டும் வல்லமையாக அமையும். இந்தியாவை பிராந்திய வல்லரசாக்கிய பெருமை இந்திராகாந்தியின் வங்களாதேஷ் பிரிவினையிலேயே சாத்தியப்பட்டது. அதுவரை இந்தியாவை அவ்வகை திறனுடைய நாடாக யாருமே கருதவில்லை அப்படியான கட்டமைப்புக்குள்ளே இந்தியா செயல்படவேண்டிய நிர்ப்பந்தமுள்ளது. இந்தியா மட்டு மல்ல உலகில் எந்தவல்லரசும் இராணுவ ரீதியான வலிமை பொறுத்தே வல்லரசு என்ற பலத்தை பெற்றுவருகின்றது. அதனுடன் சீனா போன்றே இந்தியாவும் ஒரு மூன்றாம் கட்ட பரிமாணத்துக்கு பிரவேசிக்க விரும்புகிறது.

முதலாவது கட்டம் சுதந்திரமும் அதற்கான அணுகுமுறையுடன் பிராந்திய சக்திகளை நோக்கியது. தேசிய இனங்களின் விடுதலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுவது போன்றும் காந்தியக் கொள்கையை அமுலாக்க விரும்புவது போன்று செயல்பட இந்தியா 1980கள் வரையும் மிக நாகரீகமான அரசாக செயல்பட்டது. சோவியத் மறைவுக்கு வித்திட்டதில் இந்தியா வுக்கும் பங்கிருக்கிறது. அதன் பின்பு ஒரு பொருளாதார எழுச்சிக்கான காலத்தினை 2012 வரை ஒதுக்கி வடிவமைத்து செயல்படுகிறது. அக்காலப்பகுதிக்குள்ளேயே இராணுவ வல்லமையையும் இந்தியா கொண்டிருந்தது. இதன் பின்பு வல்லரசு காலமாக இராணுவ எழுச்சி யுடன் செயல்பட விரும்பும் இந்தியா அடிப்படையில் சீனா போன்று தெளிவான வரைபுகளையும் காலத்தையும் நிர்ணயிக்கமுடிய வில்லை. தெளிவற்ற போக்கு முடிவற்ற குழப்பத்தினை இந்தியாவுக்கு கொடுத்துள்ளது. இதனால் இந்தியா குழம்பிப்போயுள்ளது. சுதந்திர இந்தியாவின் எழுச்சி முழுமை பெற்றது போல் பொருளாதார எழுச்சி சாத்தியப்படவில்லை. பொருளாதார எழுச்சிக்குள் இராணுவ வளர்ச் சியின் அவசியமும் அடிப்படையும் இந்தியாவுக்கு ஏற்பட்டுவிட்டது. இதனால் இந்தியா அவ்வப்போது பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கையும் இராணுவ நகர்வுகளை மாறிமாறி கையாள வேண் டிய கட்டாயத்துக்குள் இந்திய ஆளும் வர்க்கத்தினை தெளிவற்ற முடிவுகளால் குழப்பமடைந்த நிலையில் சில தீர்மானங்களை எடுத்துள்ளது. இதுவே இந்தியாவுக்குரிய பொதுப் பிரச்சனையாகும். இதனால் அரைகுறை தீர்மானத்திற்கு போகவேண்டிய துயரம் இந்தியாவுக்கு அவ்வப்போது ஏற்படப்போகிறது. அதில் ஒரு அம்சமே இலங்கையின் நிகழ்ந்து முடிந்த போரும் இந்தியாவின் விசப்பரீட் சையும் இதில் இந்தியா வென்றதா தோற்றதா என்பதை அடுத்து வரும் நிகழ்வுகளும் இந்தியாவின் பிராந்திய பலமும் உள்நாட்டு இஸ்திரத்திலுமே எதிர்காலம் தீர்மானிக்கும். அதனை எதிர்காலத் தேடலுக்காக ஒப்படைத்துவிட்டு இந்தியாவுக்குள் இன்னோர் நிர்ப் பந்தம் மேற்குலத்தின் அணுகுமுறை அமைந்துள்ளது என்பதனை விளங்கிக் கொள்வது அவசியமானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# II

# நிதிநெருக்கடியும் உலக அரசியலும்

## பொருளாதார நெருக்கடி

பொருளாதார நெருக்கடி என்பது ஒரு நாட்டின் உற்பத்தியானது நடப்பாண்டின் நடைமுறை உற்பத்தி மட்டம் 20சதவீதத்திற்கு கீழ் குறைந்து செல்லுமாயின் அக்காலப்பகுதியே பொருளாதார பின்னடைவிற்கு காரணமெனலாம். இது முழுஉலகத்திலும் நிலவுமாயின் உலகப்பொருளாதார பின்னடைவு எனலாம். இன்னோர் விதத்தில் கூறுவதாயின் சென்மதி நிலுவையில் முழுமையான பற்றாக்குறை ஏற்பட்டு அப்பற்றாக்குறையை நிவர்த்திசெய்வதற்கு போதுமான நிதியினை அரசாங்கம் கொண்டிருக்காத நிலையினை நிதிநெருக்கடி அல்லது பொருளாதார நெருக்கடி என கூறலாம். சமீர்அமீனின் கருத்துப்படி முதலாளித்துவப் பொருளாதாரமொன்றில் ஏற்படுகின்ற இயல்பான நெருக்கடி நிலையே இன்றைய பொருளாதார நெருக்கடி என்றார். மேலும் பல சோசலிஸ சிந்தனையாளர்கள் "சுதந்திரமான சந்தையின்" பிரதிஉபகாரமானதே இன்றைய பொருளாதார நெருக்கடி எனக் கூறுகின்றனர். 1929ம் ஆண்டுடன் ஒப்பிடும்போது தற்போது ஏற்பட்டுள்ளது மிக மோசமானதாகவே உள்ளது எனக் கூறுகின்றனர். மேலும் தொழிற்பாட்டு முதலீட்டில் ஏற்பட்ட பற்றாக்குறையும் பங்குச் சந்தையில் நிகழ்ந்த சரிவும், நிதிச்சந்தையில் நிலவிய சமமற்ற போக்கும், வங்கியமைப்பின் பொறுப்பற்ற செயற்பாடும், அமெரிக்காவின் யுத்த நடவடிக்கைகளும் ஏற்படுத்திய ஒட்டுமொத்தமான விளைவே பொருளாதார நெருக்கடி எனக் கூறப்படுகின்றது. ஆனால் சமீர்அமீனின் முதலாளித்துவப் பொருளாதாரமுறை ஒன்றில் இயல்பான நெருக்கடியே தற்போது நிகழ்ந்துள்ளது. வங்கிகளின் பொறுப்பற்ற தனத்தினாலோ அல்லது கட்டற்ற சந்தையொன்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமான நிதி தொடர்பான ஒழுங்குமுறையற்ற வகையிலான தாக ஏற்பட்டதில்லை என்று அரசியல் தலைமைகளின் பிரச்சார உத்திகளை நிராகரிக்கின்றனர்.

கார்ல்மார்க்ஸ் *(Mara)*, ஜோன் மெனாட் கின்ஸ் *(John Mayhard Keynes)*, கால்பிறைற் *(Karlprnt)* போன்றோர் நிதிமூலதனத்தின் சுழற்சி ஏற்படுத்தப் போகும் விளைவுகளை முன்கூட்டியே உணர்த்தியிருந்தார்கள் "மூலதனம்" "வேலை வட்டி பணம்" "1929ம் ஆண்டின் பொருளாதார நெருக்கடி" ஆகிய படைப்புக்கள் முதன்மையாக நோக்கப்படுகின்றது. இவர்களின் பார்வையில் இது இயல்பான நெருக்கடி ஆனால் இந்தளவிற்கு ஆபத்தானதாக அமைந்துவிட்டமையே அதிர்ச்சியான தகவலாக உள்ளது.

கொன்சாந்திநேபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்ட பின்பு மேற்குலகம் கீழைத்தேசம் பற்றிய கொள்கையில் தெளிவான வரைபை செய்துகொண்டது. அது வேறு எதுவுமில்லை துருக்கிய பேரரசு போன்று வேறு எந்த அரசும் எழுச்சியடையக்கூடாது என்பதாகும். அன்றிலிருந்து கீழைத்தேசத்தின் எழுச்சிகள் எல்லாவற்றையும் ஏதோ ஒரு காரணத்திற்கூடாக தோற்கடித்தே வருகின்றது. அவ்வகைச் சூழல் ஒன்றையே தற்போதைய உலக ஒழுங்கிலும் காணலாம். மேற்குலகம் ஏன் ஆசியாவில் ஒரு போரை விரும்புகிறது.? அதிலும் இந்தியா - சீனா மையப்படுத்தி அவ்வகை நிகழ்வை ஏன் எதிர்பார்க் கின்றது?. அதனை புரிந்துகொள்ள முயற்சிப்போம்.

## நிதி நெருக்கடி

மேற்குலகம் தனக்குள் ஒரு நிதி நெருக்கடி ஏற்பட்டுவிட்ட தென்றும் அதனை சரிப்படுத்த பல்வேறுபட்ட உபாயங்களை முன்வைத்து தீர்த்துவிடலாமெனக் கருதிச் செயல்படுகிறது. இது மேற்குலகம் குறிப்பாக அமெரிக்காவும் அமெரிக்க விரும்பிகளும் கூறுவது போல் சரிபடுத்தக்கூடிய நிதிநெருக்கடியல்ல இதனை சில பொருளியல் ஜாம்பவான்களும் நம்பி விளக்கம் அளிக்க முயன்று வருகின்றனர். நிதி நெருக்கடியிலிருந்து மேற்குலகம் வேகமாக மீண்டுவிடும் என கூறுகின்றனர். நிதிநெருக்கடி என்பது ஒருபொரு ளாதார நெருக்கடி அது ஒர் அரசியல் நெருக்கடி அது ஒரு இராணுவ நெருக்கடி மொத்தத்தில் பொருளாதாரம்சார் உலக நெருக்கடி இன் றைய பொருளாதாரம் நிதிசார் பொருளாதாரமே. நிதியின் இருப்பு சந்தையிலும் சந்தையிற் குவியும் பொருட்களின் தரத்திலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியுள்ளது. அவ்வகை நெருக்கடி சாதாரணமானதல்ல. முழுஉலக முமே நிதி பெறுமானங்களால் தீர்மானிக்கப்படுகிறது. நாணயத்தின் பெறுமதியே பொருளாதார வளர்ச்சியென்றாகிவிட்டது. அமெரிக்க டொலரா, ஐரோப்பிய யூரோவா என்ற போட்டியே பொருட்களை யும் தீர்மானிக்கின்றது. முதலீடு குவிவது சந்தையிலன்றி உற்பத்தி யிலல்ல. உற்பத்தியில் முதலீடு குவிந்த வரலாறு முடிந்துவிட்டது. தற்போது சந்தைச்சக்திகள் எங்குள்ளதோ அங்கு நிதி மூலதனம் குவியும். நிதிமூலதனமே பொருளாதார மயமாகியுள்ளது இதன் அடிப்படையில் அமெரிக்கா உட்பட மேற்குலகின் நிதிநெருக்கடி உலகப் பொருளாதார நெருக்கடியாகவே மாறிவருகிறது.

இதன்படி 2010க்கு பின்பு மிக மோசமான நெருக்கடியை மேற்குலகம் சந்திக்கும் எனவும் உலகவங்கி எதிர்வு கூறியுள்ளது. இதில் இந்தியா கணிசமாகவும், சீனா பெருமளவும் தப்பிப்பிழைத் துள்ளன. காரணம் இரு நாடுகளது நிதி முதலீடுகளும், நாணய பரிமாற்றங்களும், முதலீட்டு வாய்ப்புக்களும் மேற்குலகம் அல்லாத உலகத்தில் காணப்பட்டு வருவதுடன் கணிசமான சேமிப்பு மையங் களாக சீனாவும் இந்தியாவும் விளங்குகின்றன. மேலும் இந்நாடுகள் நுகர்வை மட்டுப்படுத்திக் கொண்டுள்ளன. அல்லது நுகர்வுக்கலா சாரம் விரிவடைய முடியாத மரபுசார்ந்த காரணிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இரண்டு நாடுகளிலும் குவிந்திருந்த மக்கள் தொகை சந்தைக்கான தளத்தை வைத்திருக்கின்றன. மனிதவலுவின் மட்டுப்பாட்டுக்குட்பட்ட உற்பத்தியினளவு இத்தேசங்களின் வள பற்றாக்குறையை தவிர்க்க உதவியது. இதனாலேயே இந்தியாவும், சீனாவும் அதிகமாக நிதிநெருக்கடியிலிருந்து தப்பிக்கொண்டன.

மேற்குலகம் வகுத்த பாதைக்குள் மேற்குலகம் வீழ்ந்து கிடக்கின் றது. பிரபல அரசியல் ஆய்வாளர் சாமுவேல் ஹன்டிங்ரன் கூறுவது போல் பொருத்தப்பாடற்ற உபாயங்களை வகுத்து உலகமயமாக் கலை அமுல்படுத்த மேற்குலகம் முயன்றபோது அதற்குள்ளே தனது இயலாமையை கணக்குப் போடத்தவறியது என்று கூறினர். அவ் வாறே மேற்குலகின் நிலை ஏற்பட்டுவிட்டது. நிதிநெருக்கடிக்குள்ளி ருந்து மேலெழுவதற்கு மேற்குப் போடும் ஒவ்வொரு "பிணைமனுவும்" தோல்வியில் முடிகின்றது.

**மேற்கின் பொருளாதார வீழ்ச்சி**

மேற்கின் பொருளாதார வீழ்ச்சி எல்லாவிதமான மேற்கின் எல்லைகளையும் தகர்த்துக்கொண்டு வருகிறது. அதன் பொருளாதார


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிக்கம் படிப்படியாக குறைவடைய அதன் இராணுவ அரசியல் வலுகுறைந்து போகும். அவ்வகை நிலை மேற்குலகின் உலக ஆதிக் கத்தினை கட்டுப்படுத்தும் இதனை இலங்கை விவகாரத்துடன் நோக்கினால் இலகுவாகப் புரியும். நடந்து முடிந்த போரின் இறுதி நாட்கள் எல்லோர் மனத்திலிருந்தும் விடுபடமுடியாதவை. அந்த கணத்தில் மேற்குலகம் மீதிருந்த நம்பிக்கையைப் பற்றிய உரையாடல் கோமாளித்தனமாக விமர்சிக்கப்பட்டது. அப்படியொரு உலகமும் சூழலும் அவ்வப்போது இலங்கை அரசியலில் நிகழ்ந்து வந்ததை யாரும் மறுக்கமுடியாது ஆனால் மேற்குலகத்தால் அவ்வகை மீட்பினை செய்ய முடியாதநிலை ஏற்பட்டிருந்தது. 1971இல் வங்களாதேஷ் போரில் சோவியத் யூனியனின் படை போன்றோ, இந்திராகாந்தியின் அணுகுமுறை போன்றோ யாரும் இந்துசமுத்திரத்திலோ வங்களா விரிகுடாவிலோ, இலங்கை மண்ணிலோ இராணுவத்தை குவிக்க முற்படவில்லை. அப்படியாயின் மேற்குலகம் ஏன் அடிபணிந்தது? எதற்காக மண்டியிட்டது.?

மேற்குலகத்திற்கு இந்தியாவினதும், சீனாவினதும் சந்தை மிக அவசியமானது அதிலும் அமெரிக்காவுக்கு இரண்டு நாட்டின் சந்தை யும் இல்லாத சூழல் அதன் இருப்பை முற்றாகவே தகர்த்துவிடும் இதனால் தனது சந்தைக்காகவும் பொருளாதார வாய்ப்புக்காகவும் சில விட்டுக்கொடுப்புக்களை செய்வதை தவிர வேறுவழியிருக்க வில்லை. இலங்கைத் தமிழரை காப்பாற்றுவதைவிட அமெரிக்கா அமெரிக்கர்களை காப்பாற்றுவதில் கரிசனை கொள்வது ஒன்றும் தவறான விடயமில்லையே. இலங்கை தமிழர்தான் அமெரிக்கர்க ளையோ, மேற்கையோ நம்பியது தவறானது. புவிசார் அரசியலை புரிந்துகொள்ளத்தவறியதன் விளைவே அடிப்படை நெருக்கடிக்கு காரணமாகும்.

மேற்குலகின் நிலை இவ்வாறே உள்ளது. வல்லரசாகவுள்ள மேற்கின் பலம் அவை சார்ந்திருக்கும் தந்திரோபாய அரசியல் அருகி விடும் என்ற அச்சத்தில் தான்சார்ந்திருக்கும் நாடுகளையும் பயன் பாட்டுக்குரிய தேசிய இனங்களையும் இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வகை பொருளாதார வீழ்ச்சி அரசியல் பலத்தை படிப்படியாக குறைக்கப் போகின்றது. என்ற எதிர்வுகூறல் தவிர்க்க முடியாததாக் கியது. எங்கு முதலீடு குவிகிறதோ அங்கு அரசியல் அதிகாரம் குவியுமென குண்டாபிராங் குறிப்பிட்டது நினைவு கோரத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியாவின் தலைமை

2050களில் உலக பொருளாதார வல்லமையில் சீனாவும் இந்தியாவும் முதன்மை சக்திகளாக விளங்குவன என்பது உலக வங்கியினாலேயே எதிர்வு கூறப்பட்டுவிட்டது. பிரபல பொருளியலின் மேதை கெயின்ஸ்ன் கோட்பாட்டின்படியும் அவ்வகை உலகத்திற்கான திறனுடைய உற்பத்தி, நுகர்வு, மூலதன அமைப்புருவாக்கம் என்பன வர்த்தக உலகத்தை தோற்றுவிப்பதோடு அதுவே முதலாளித்துவத்தின் மறுகட்டமைப்பு உருவாக்கம் நெருக்கடிக்கு வித்திடும் என்றார். அவ்வாறான ஒரு நுகர்வு ஒழுங்குக்குள் மேற்குலகம் அகப்பட்டுள்ளது. இதனால் ஆசியாவின் எழுச்சி சாத்தியமடையும் என்பது தெளிவாக புலப்படும். இத்தகைய ஆசிய எழுச்சியை எப்படி மேற்குலகம் எதிர்கொள்வதென்பதையே இலக்காகக் கொண்டியங்குகின்றது. இவ் எழுச்சியை பொருளாதாரமாக எதிர்கொள்வது கடினமெனக் கருதும் கருத்தியலுக்குள் அரசியலாகவும் தந்திரமாகவும் அவ்வகை உலகத்தினை முறியடிக்க மேற்குலகம் திட்டமிட்டுள்ளது. அதனால் ஆசியாவுக்குள் நிலவும் நாகரீகங்களை நாகரீகங்களின் பெயரால் மோதவிடுவதென்பதை தந்திரமான அரசியலாக்கியுள்ள மேற்குலகம் தமது வலைக்குள் இந்தியாவை கைப்பற்றி வைத்துள்ளது. இந்திய சார்பு அமெரிக்க உட்பட்ட மேற்குலகின் கூட்டினை பலப்படுத்துவதும், இந்தியாவை திருப்திப்படுத்துவதுமாக மேற்குலகின் அரசியல் நாகரீகம் நகர்கின்றது.

இந்தியாவின் முடிவுகளையும், தீர்மானங்களையும் மேற்கிடம் ஒப்படைத்துவிட்டு இந்திய ஆளும் வர்க்கம் பலவீனமான அரசியலை நிகழ்த்துகிறுது அந்நியரிடம் ஆட்சியை கொடுத்து விட்டிருக்கும் இந்தியரின் அணுகுமுறை வேறு எந்த நாட்டிலும் சாத்தியப்படாது. அதுவும் சுதந்திரத்திற்கு பின்பு அவ்வகை அரசியலை வேறு எந்த சுதந்திர இறைமை கொண்ட அரசும் பின்பற்றாது இந்தியா எல்லைசார்ந்தோ அல்லது வேறு ஏதும் சம்பவம் சார்ந்தோ நிகழும் போரை முன்னெடுக்கும் நிலை ஏற்பட்டால் அதன்விளைவு இலங்கையில் நிகழ்ந்ததைவிட பாரதூரமானதாகவே அமையும். அதற்கான ஒத்திகையை இலங்கை தமிழர் விவகாரத்தில் உலகம் பார்த்திருக்கும்

ஆசிய வல்லரசுக்கான எழுச்சியை முறியடிக்க இந்தியாவையே மேற்குலகம் பயன்படுத்தி வருகிறது. அதில் இந்தியா பலவீனமாகவே முடிவுகளை எடுக்க முயற்சிக்கும். அதில் காங்கிரஸ் தலைமை மட்டுமல்ல பாரதீய ஜனதாக்கட்சியும் அவ்வகை முடிபுக்கு எதிர்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகவேண்டியது தவிர்க்கமுடியாதது அதற்கு ஏற்ற வகையிலான அரசியல் தலைமைகளையே மேற்கு தேர்ந்தெடுக்க விரும்புகிறது.

## உலகமயமாக்கல் தோல்வி

மேற்குலகின் இன்னோர் அபிலாசையும் அவாவும் உலகமயமா தலாகும். அவ்வகை உலகவாக்கலானது மிக நீண்ட வரலாற்றைக் கொண்டது. அதற்கான திட்மிடல்களையும் தந்திரங்களையும் அதிகம் மேற்கு பின்பற்றி வந்தது. அதில் எவற்றையும் முழுமையாக மேற்குல கால் பூரணப்படுத்த முடியவில்லை. கீழைத்தேசத்தில் சீன நாகரீகமும், இஸ்லாமியமும், எதிர்நீச்சல் போட்டுக் கொண்டு தமது இருப்பினை பாதுகாப்பதுடன் உலகமயவாக்கத்தினை நெருக்கடிக்குள்ளாக்கி விட்டன. எனவே இவ்வகை எழுச்சியினால் சுதேசிய வடிவங்கள் பாதுகாக்கப்பட்டுவிடும். அது உலகத்தை ஒரே வலையின் கீழ் கொண்டுவர முடியாத நிலையை ஏற்படுத்திவிடும். அதனை தடுக்க நாகரீகங்களை மோதவிடுவதே பொருத்தமான உபாயமாக மேற்குலகம் கருதுகின்றது. நாகரீகங்களின் மேதலாகவே புதிய உலக ஒழுங்கு தயாரானது. அதனையே அது தொடர்ந்தும் பின்பற்ற முயலுகின்றது. இதனை மறுதலிக்கும் கோட்பாட்டாளர்கள் முன் காணப்படும் சிந் தனை உண்மைக்கு புறம்பானது மேற்குலகத்தின் அநாகரீகங்களை நியாயப்படுத்துவது தவறானது. ஆப்கானிஸ்தானிலும், ஈராக்கிலும் நிகழ்ந்தவை எல்லாம் நாகரீகத்தின் மீதான படுகொலைகளே "அபுகாரி சித்திரவதை காட்சிகள்" நாகரீகத்தை கொச்சைப்படுத்தும் (அம்மணமான) காட்சிகள் தான். இலக்கிய எழுத்தாளர் மு. பொன்னம்பலம் குறிப்பிடுவது போல் மேற்குலகம் போகப் பொருளாக கருதும் நிர்வாணநிலையை கீழைத்தேசம் ஆத்மீக விசாரமான நிலையென கருதுகிறது. இதுவே கிழக்கு மேற்கின் நாகரீக நிலையின் அத்திவாரமாகும். அல்லது வேறுபாடாகும். அல்லது முரண்பாடா கும். எதை வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம்.

எனவே உலகமயவாக்கல் தோல்வியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. மேற்குலகுக்கு ஏற்பட்ட நிதிநெருக்கடி கீழைத் தேசத்தை கையாளமுடியாத ஆபத்தாக மாறும். மேற்குலகின் நிதி முதலீடுகள் முழுவதும் கீழைத்தேசத்திடமிருந்து மீள சுவீகரிக்கும் தந்திரத்தைக் கொண்டது. அவ்வகை தந்திரம் சாத்தியமற்றுப் போகும் போது முதலீடும் இல்லாது சுரண்டலும் இல்லாத நிலையே மேற்குலகம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினையாகும். இதனை சரிசெய்ய மேற்கு கிழக்கு மோதலை விடுத்து கிழக்கு - கிழக்கு மோதலை உருவாக்குவதே மேற்கின் பிரதான பணியாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோல்வி மேல் தோல்வி

மேற்குலகம் தோல்வி மேல் தோல்வியை எதிர்கொண்டிருக் கிறது. ஆனால் இவ்வகை தோல்வி ஒன்றும் மேற்குக்கு புதிதல்ல என கீழைத்தேச அறிஞர்கள் பலர் கூறுகின்றனர். மேற்குலகம் இவ்வகை நெருக்கடியிலிருந்து மீண்டுவிடும். அச்சிந்தனை சில வேளைகளில் சரியானது தான். மேற்கு தனக்கு ஏற்படும் தோல்வி களை வெற்றியாக மாற்றிக்கொள்வதில் குறியாக செயல்படும். அது மேற்குலகின் இயல்பு தோல்வியிலிருந்து வெற்றியை கண்டுபிடிக்க முயலும். அது பொருளாதாரத்தில் தோற்றால் அரசியலை, இராணுவ அணுகுமுறையை நாடும் குண்டாபிராங் கூறுவதுபோல். ஈராக் மீதான அமெரிக்கப்போர் அமெரிக்கப் பொருளாதாரத்தின் வீழ்ச்சி யால் ஏற்பட்ட போர் மேற்குலகம் பின்பற்றிவரும் உபாயமும் அதுவாகும்.

பொருளாதாரப் போரில் தோற்றால் அரசியல் போரை அல்லது இராணுவப்போரை செய்யும் மேற்குலகம் ஆசிய எழுச்சிச் சக்திகள் மீதும் அதனையே மேற்கொண்டு வருகிறது. பொருளாதார நெருக்கடி காலத்தை தனக்கு கிடைத்துள்ள நெருக்கடியாக மட்டும் கருதாது உலகத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியாக மாற்ற முயன்று வருகிறது. G8 நாடுகளுக்கு பதில் G20 நாடுகள் என்ற பெருமையை கீழைத்தேச நாடுகள் கொண்டாட்டமாக கருதாது அதனை மேற்குலகின் தந்திர மாக கருதவேண்டும். மேற்கு G20 க்குள் தனது பொருளாதார நெருக்கடியை சரிசெய்ய முயற்சிக்கின்றது. வெளிப்படையாக இந்திய பிரதமரின் உரை மேற்குலகுக்கு சலாம் போடுவதாக அமைந்தாலும் அதன் உள்ளடக்கம் வேறு விதமானது. உண்மையில் மேற்கு G8 தளத்தில் நின்றிருக்குமாக இருந்தால் கிழக்குலகுக்குள் நிகழ்பவை தெரியாது போய்விடும். அதனால் கிழக்குலகத்தின் எழுச்சியை கண்டுபிடிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கும் அதனை கட்டுப்படுத்த வேண்டுமாயின் வெளிப்படையாக நல்லது பேசிக் கொண்டு உள்ளார்ந்த விதத்தில் தந்திரங்களை கையாள வேண்டும். இதுவே G20 நாடுக ளின் கிழக்கை இணைத்துக் கொண்டதன் உள்நோக்கமாகவுள்ளது.

எனவே மேற்குலகுக்கு தேவையானது கிழக்குலகம் ஒரு மந்த நிலையை நோக்கி நகரவேண்டும். அதனை மேற்கே விரும்பி நகர்த்த வேண்டும். அப்படியான நகர்வுக்குரிய தளத்தினை சாத்தியப்படுத்து வதற்காக மேற்குக்கு கிடைத்துள்ள துரும்புச்சீட்டு இந்தியா தான். இந்தியாவை வைத்துக்கொண்டு முன்னும் பின்னும் தள்ளுவதும் இழுப்பதுமாக கட்டத்தை ஏற்படுத்திவருகிறது. இதன் ஒருகட்டமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா சார்ந்த பகுதியில் ஒரு போருக்கு மேற்குலகம் தூண்டிவரு கிறது. சீனா போரை தவிர்க்குமென மேற்குலகம் கணக்குப்போட் டால் பாகிஸ்தான்-இந்தியப் போரை ஊக்குவிக்கும். ஏனெனில் பாக்கிஸ்தானுடன் போர் புரிவதென்பது மறைவில் சீனாவுடன் போர்புரிவது போலவே அமையும். இதுவே மேற்குலகின் தேவையும் தந்திரோபாயமுமாகும். திட்டமிட்டு அதனை சாத்தியப்படுத்தி ஒரு தேக்கநிலை காலத்தை உருவாக்க மேற்கு அவாப்படுகிறது. இவ்வகைத் தேக்கம், அரசியல் ரீதியில், இராணுவ ரீதியில் நிகழும்போது பொரு ளாதாரத்தில் மேற்கு தன்மை மீளமைத்துக்கொள்ளும்.

சர்வதேச அரசியலைப் புரிவதற்கான கட்டுமானத்தின் முதல்கட்டம் பூர்த்தியாகிவிட்டது. இதனை மையப்படுத்தி உலக விவகாரங்களின் போக்குகளையும் நிகழ்வுகளையும் நோக்குவோம்.

ஆசியாவுக்குள் சில பிராந்திய வகைப்பாடு காணப்பட்டு வருகிறதென்பது பொதுவான அம்சமாகும். அதில் தென்கிழக்காசியா, மற்றும் கிழக்காசியப் பிராந்தியம் அரசியல் பொருளாதார நோக்கில் எப்போதும் தனித்துவம் வகிப்பதாக உள்ளது. அவ்வகைத் தனித்து வம் நாடுகாண் பயணங்களை மேற்கொண்டபோது ஏற்பட்டதென்று கூறலாம். ஆனால் பனிப்போர் காலத்தின் பின்பு மிக அதீதமான பங்கெடுப்பினை ஏற்படுத்தி வருகிறது. பின்பும், அதன் பலதுருவ தசாப்தத்திலும் அவ்வகை தனித்துவத்தினை இழக்கவில்லை. இதனாலேயே ஆசியான் *(ASEAN)* என சுருக்கமாக அழைக்கப்படும். தென்கிழக்காசிய நாடுகளின் அமையம் வர்த்தக மற்றும் பொருளா தார நோக்கில் இனம்புரியாத முக்கியத்துவத்தை பிடித்துவருகிறது. அண்மையில் தென்னாசிய நாடுகளின் இரண்டு பிரதான நாடுகள் தென்கிழக்காசியப் பிராந்தியத்துடன் நெருக்கமான உறவை பேண முயன்றுள்ளன. அதன் முக்கியத்துவத்தையும் அதன் புவிசார் அரசியலை புரிந்துகொள்வதன் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.

## இந்தியா - ஆசியா மகாநாடு

இந்திய - ஆசியான் மகாநாடு கடந்த இரு தசாப்தமாக நிகழ்ந்து வருவன அது அடிக்கடி புதுப்பிக்கப்படும். வர்த்தக தொடர்பும், மற்றும் பொருளாதார உடன்பாடுகளும் நிகழும். அதனால் அரசியல் உறவும் பலமுடையதாக மாற்றமடையும். அண்மையில் நிகழ்ந்த சந்திப்பில் உற்பத்தி, வர்த்தகம், தொழில் முயற்சிக்கான பரிமாற்றம் சேவைத்துறையின் பங்குபற்றல் என்பன முக்கியம் வகித்துவந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா தனது பொருளாதார வாய்ப்புக்களை மேற்கு நாடுகளுக்கு நிகராகவும், அதற்கு மேலதிகமாகவும் ஆசியானுடன் கொண்டிருக்க வேண்டுமென கருதுகிறது. மேலும் ஆசியப்பிராந்தியம் என்றவகையிலும் தொடர்பாடல் திறன்களாலும், போக்குவரத்து வசதி வாய்ப்புக்களாலும், இவ்வகை நெருக்கத்தை விரும்புகிறது. மேலும் ஆசியநாட்டு மக்கள் பெற்ற உறவுப் பரிமாற்றம் போதிய பொருளாதார இலாபத்தை எட்டுமெனவும் இந்தியா கருதி செயல்படுகிறது. இந்தியப் பொருட்களின் சந்தையாக ஆசியான் வலயம் மாற்றப்படுவது இந்தியாவின் பொருளாதார சுபீட்சத்திற்கு உதவும். இவ்வகை பொருளாதார உத்தியும் அரசியல் உறவை பலப்படுத்த உதவுமென கருதுவதனால் அதனை அதிகம் ஊக்குவித்து வருகிறது. கடந்த இருதசாப்தமாக இந்தியாவின் வர்த்தக அதிகரிப்பில் ஆசியானுடனான வர்த்தக அதிகரிப்பு 68 சதவீதத்தினை (68%) எட்டியுள்ளது. இதனை 90சதவீதமாக (90%) அதிகரிப்பதே மன்மோகன் சிங் அரசாங்கத்தின் உத்தியாக உள்ளது.

## இலங்கை - வியட்னாம் உறவு

இலங்கை ஜனாதிபதியின் வியட்நாம் விஜயம் அண்மைய போருக்கு பிந்திய செய்திகளில் தனித்துவம் பெற்றவற்றில் இதுவும் ஒன்றாகும். காரணம் வியட்நாம் போர் நிகழ்ந்து கொண்டிருக்கும் போது மனித உரிமைக் கவுண்சிலில் இலங்கை அரசாங்கத்திற்கு சார்பாக வாக்களித்து இலங்கையை பாதுகாத்தது. அதற்கு நன்றியுணர்வாக இலங்கை ஜனாதிபதி விஜயம் நிகழ்ந்தாலும் அங்கு மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் தனித்துவமானவை.

குறிப்பாக வர்த்தக - பொருளாதார உடன்படிக்கைகள் இலங்கைக்கு அவசியமானதொன்றாகவுள்ளது. வியட்நாம் பெரிய பொருளாதார பலமுடைய நாடு அல்ல மிகப்பிந்திய ஆசியான் அக்கத்துவத்தை சுவைக்கும் நாடு ஆனால் பொருளாதாரத்தில் தீவிர போராட்டத்துக்குள் போட்டியிட்டு வெற்றியை எட்ட முயற்சிக்கும் நாடு திறந்த பொருளாதாரத்தையும் ஜனநாயகத்தையும் இணைக்க முயன்று கடந்த முதல் தசாப்தத்தில் அதிக வெற்றியை எட்டமுடியாது சற்று தென்கிழக்காசியாவுக்கு உரித்தான அணுகுமுறையை பின்பற்ற விளைகிறது. அதில் முழுமையான முடிவை எட்ட முன்பு இலங்கையுடன் அதனை பகிர்ந்துகொள்ள முயன்றுவருகிறது. இதில் இலங்கையின் பக்கமும் இலங்கை அடைந்துள்ள இலாபமும் அதிகமாகும். காரணம் இலங்கைக்கு வரிதொடர்பான சர்ச்சை ஒன்றுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகப்படக்கூடிய சூழல் ஒன்று ஏற்பட்டுவிட்டது. அதனால் கடன் படுநிலையில் ஏற்படப்போகும் பாதிப்புக்களிலிருந்து மீள வேண்டிய அவசியமும் உலகத்திற்கு ஒரு காட்சிப்படுத்தலையும், இலங்கை மக்களுக்கு ஒரு நம்பிக்கையும் ஏற்படுத்த முயன்றதன் விளைவே ஜனாதிபதியின் வியட்நாம் நோக்கிய விஜயமாகும்.

ஆனால், பொருளாதார அர்த்தத்துடன் பார்த்தால் மட்டுமல்ல அரசியலாகவும் பார்த்தால் ஒரு செய்தி உள்ளது. அந்த செய்தி இந்தியர்களுக்கோ, இலங்கையிலுள்ள எதிர்ப்புவாதிகளுக்கோ, மேற்குலகுக்கோ என்ற தெளிவில்லாத ஆனால் எல்லோருக்குமே பொருந்தக் கூடியதாகும். கோஷிமின் நினைவுத்தூபிக்கு இலங்கை ஜனாதிபதி மாலைமரியாதை செய்யும் போது இந்தியர்களுக்கு ஒரு செய்தி சொல்லப்பட்டது. (சுதந்திர நாட்டின் தலைவராக) வியட்நாம் போன்று தனிக்கட்சி ஆதிக்கத்தை விரும்பும் இலங்கையை கட்டியெழுப்பும் நோக்கு இலங்கை எதிர்ப்பு வாதிகளுக்கு இரண்டாவது செய்தி சொல்லப்பட்டது. (இலங்கை ஆட்சி நமக்கே உரியது) மூன்றாவது வர்த்தக - பொருளாதார உறவுக்கான உடன்படிக்கைகள் மேற்கொள்ளும் போது மேற்கு நாட்டவருக்கு ஒரு செய்தி சொல்லப்பட்டது. (எந்த நெருக்கடி வந்தாலும் சமளிப்போம்) இவ்வகை இலக்குக்கான பயணங்களில் ஒன்றாகவே வியட்நாம் இலங்கை உறவு அமையவுள்ளது.

பர்மாவுக்கு (மியான்மார்) அடுத்தபடியாக வியட்நாமுக்கு ஜனாதிபதி பயணம் செய்திருப்பது இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையை காட்டுகின்றது. இரண்டு நாடும் சீனசார்பு நாடுகளாக தற்போது பரிணமித்து வருகின்றன. வியட்நாம் ஆரம்பத்தில் மேற்கு சார்பாக இருந்தாலும் தற்போது கிழக்கு, தென்கிழக்காசியாவுக்குள்ளும் சீனசார்புக்குள்ளும் வளரவேண்டிய புவிசார் அரசியல் இருப்புக்குள் அகப்பட்டுள்ளது. அதனாலேயே வியட்நாமின் இருப்பினை பேணமுடியுமென கருதுகின்றது. வியட்நாம் என்பது அதன் சுதந்திரப் போராட்டம் என்ற சொற்பதம் ஊடாகவே உலகத்திற்கு தெரியப்பட்ட நாடு அதுவும் அமெரிக்க எதிர்ப்புவாதத்தால் அறியப்பட்ட தேசம் அதனை இன்று வியட்நாமியர் மறக்க வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டாலும் இலங்கை போன்ற ஆட்சியாளர்கள் மறக்கவில்லை. இலங்கை மக்களும் மறக்கக்கூடிய விடயமல்ல. ஆனால் அத்தகைய வியட்நாமின் விற்பன்னனுமாகிய கோ-ஷி-மின் சிலைக்கு ஜனாதிபதி மரியாதை செலுத்தியமை அமெரிக்கருக்கு தனிச்செய்தி ஒன்றை அனுப்பியுள்ளதைக் காட்டுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு, தென்கிழக்கு ஆசியாவின் பலம்

பல காரணங்களை கூறும் நிலை புலமையாளர்களிடம் உள்ளது. குறிப்பாக மேற்குறித்த பிராந்தியத்தின் தேசிய பலம் தனித்துவமானது. தாய்நாட்டையும், அதன் இருப்பினையும் விலைபோக்காத இனமாக அவர்களை குறிப்பிடுவது வழக்கம். தேசிய வாதங்களில் ஆசியத் தேசியவாதம் தனித்துவமானது அதிலும் ஜப்பானிய, மொங்கோலிய தேசிய அடையாளங்கள் மேலும் தனித்துவமானவை. அதைவிட கௌதம புத்தரின் போதனையால் அதிகம் கவரப்பட்ட பிராந்தியமாவுள்ளமை. (இஸ்லாமியமும் உண்டு) அதனால் மாற்றத்தை மாறாததொன்றாகவும், நிலையானதொன்றாகவும் கருதுகின்றனர். கணவாதமென்பதே அவர்களின் வளர்ச்சிக்கு மூலகாரணமெனவும் கூறுவார்கள்.

இன்னொன்று பிரதானமாக பேசப்படுவதும் வலிமையானதும் அப்பிராந்தியத்தின் அமைவிடம் ஆகும். அது ஒரு காலத்தில் சோவியத் யூனியனின் செல்வாக்கும், பின்தளமாகவும் காணப்பட்டது. சோவியத்தின் மாறுதல் காலத்தில் சீனாவின் சுற்றிவளைப்பு மையமாக உள்ளது. இரண்டுமே மேற்குலகுக்கு எதிர்பான அரசியல் - பொருளாதார சித்தார்ந்தமாகவே உள்ளது. சோவியத் யூனியனின் மற்றும் சீனாவின் படர்ச்சி முழு ஆசியாவையும் விளுங்கிவிடும் என்பதற்காகவே வியட்நாம் மீது அமெரிக்க படையெடுப்பு நிகழ்ந்ததுடன் கொரியா துண்டாக்கப்பட்டது. கம்போடியாவில் நிகழ்ந்த சுதந்திரப்போராட்டம் தோற்கடிக்கப்பட்டமையும் நிகழ்ந்தது. இந்த நிகழ்ச்சிக்கு சமமாக சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, புரூணை, ஹொங்கொங், இந்தோனேசியா, தைவான் என்பனவற்றின் பொருளாதார சுபீட்சம் நிலைக்குத்தாக எழுச்சியடைந்தது. இத்தகைய எழுச்சிக்குள் அந்த நாடுகளின் புவிசார் அரசியலே பிரதான காரணமாக விளங்கியது. அங்கு ஒரு கட்சி ஜனநாயகமே காணப்பட்டது. அரசுகளும் ஆட்சியாளர்களும் மேற்குலகம் கூறுவதுபோல் பலகட்சி அரசியலையோ, ஜனநாயக விழுமியங்களையோ பேணவில்லை. ஆனால் அதனை ஆதரிக்கும் மேற்குலகம் அதன் அரசியல் பொருளாதார இராணுவ நலனும் ஓரிடத்தில் சந்தித்தன.

மேற்குலகம் கணக்கு வழக்கின்றி சீனாவினதும், சோவியத்தினதும் ஊடுருவலை தடுக்க ரில்லியன் கணக்கான நிதி உதவியளித்தது. தொழில்நுட்பம் விஞ்ஞான மறுமலர்ச்சிகளை ஏற்படுத்தியது. அந்த நாடுகளில் ஒரு தனிக்கட்சியே ஒன்றுக்கு மேற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்சியாளர்களால் தொடர்ந்து ஆளப்பட்டு வருகிறது. இந்தோனே சியாவில் ஒரு தனி ஆளும் கட்சியும் ஒரு தலைமையும் மூன்று தசாப்தம் ஆட்சி செய்தது போல் சிங்கப்பூர் பல தலைவர்களால் ஆனால் ஒரே அரசியல் கட்சியால் ஆளப்பட்டடு வருகிறது. சோவியத் யூனியனுக்கு பின்பு சீனா தொடர்ச்சியான வளர்ச்சியை கொண்டி ருப்பதனால் மேற்கு இப்பிராந்தியத்தினை கைவிட முடியாதுள்ளது. உதவிகளும், வர்த்தக பொருளாதார நெருக்கமும் தகருமாயின் மேற்கைவிட்டு வேறுமார்க்கத்தையே அந்த நாடுகள் தேடவேண்டிய நிலை ஏற்படும். அதனால் மேற்குலகத்தின் உதவிகளால் ஓங்கிவளர்ந் துள்ள நாடுகளாகவே அவை காணப்படுகின்றன.

புவிசார் ரீதியில் சோவியத் யூனியனும் சீனாவுமே தென்கிழக்காசிய, கிழக்காசிய நாடுகளின் பொருளாதார பலத்துக்கு காரணமாகும். ஆசியான் நாடுகளுக்கூடாகவே அமெரிக்கா உட்பட்ட மேற்குலகம் தமது கொள்கைகளை பரப்பிவருகிறது. மேற்குலகின் பொருளாதாரக் கொள்கை நேரடியாக இறக்குமதி செய்யும்போது நிராகரித்த பல நாடுகள் மேற்குறித்த பிராந்திய நாடுகளின் ஆலோசனையாகவும், திட்டமிடலாகவும் கிடைக்கும்போது அது மேற்குலகின் கொள்கை என்றோ போக்கென்றே கருதுவது அரிதாக உள்ளது. ஒரு வகையில் பிறநாடுகளுக்கும், பிராந்தியங்களுக்கும், கொள்கைகளை பரிமாற்றம் செய்யும் பிராந்தியமாக தென்கிழக்கு ஆசியா விளங்குகிறது. இவ்வகை மேற்குலகின் கொள்கைகளை முழுமையாக உள்வாங்காத நாடுகளாக சில தற்போதும் இப்பிராந்தியத்தில் காணப்படுகின்றன. அவற்றை சீனசார்பு நிலையிலும் பலமும் போட்டியும்- இப்பிராந்தியத்தை ஆட்கொண்டுள்ளன. இதனாலேயே இப்பிராந்திய நாடுகள் இந்தியா, இலங்கைக்கு முன்மாதிரியாக விளங்குகின்றன. இவற்றை நோக்கி வேகமாக இலங்கை நகர விரும்புகிறது.

## ஆசியா அபிவிருத்தி வங்கி (ADB)

ஆசியா அபிவிருத்தி வங்கியில் அங்கத்துவத்தில் அமெரிக்கா முதன்மை நாடாகும். அதன் பெயர் ஆசிய அபிவிருத்திவங்கி என் பதாக உள்ளது. பிராந்தியங்கள் கண்டங்கள் சார்ந்து அமைப்புக்கள் உருவாகும்போது அவ்வகை அடையாளமும், தனித்துவமும் பேணப்படுவது வழமையாகும். அப்படியாயின் அமெரிக்கா எந்தக் கண்டத்து நாடு என்ற கேள்வி எழுப்பப்படும். பதில் ஏகத்துவ கண்டத்து நாடென்றே அமையவேண்டும். உண்மையில் ஆசிய அபிவிருத்தி வங்கியில் அமெரிக்கா இடம்பிடித்திருப்பது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிராந்தியத்தினை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் வளங்களை கண்டுபிடிக்கவும், படையெடுப்புக்களை நிகழ்த்தவுமாகும். ஏனெனில் இப்பிராந்தியத்தில் காணப்படும் பெரிய அரசுகளின் கொள்கையிலிருந்து ஏனைய சிறிய நாடுகளிடையோ, இதரநாடுகளையோ, பெரியநாடுகளுடன் உறவை எற்படுத்தாமல் தடுப்பதே நோக்கமாகும்.

ஆசிய அபிவிருத்தி வங்கி ஆசியாவைக் கண்காணிக்கும் அமைப்பாகவுள்ளதென கூறிக்கொள்வதில் தவறேதுமில்லை. அபிவிருத்தி என்ற கொள்கைக்குள் மேற்குலக கொள்கைகளை பரப்பும் மையமாக ஆசிய அபிவிருத்தி வங்கி அமைந்துள்ளது.

எனவே இந்தியாவோ, இலங்கையோ வேறு நாடுகளோ தென் கிழக்கு, கிழக்கு ஆசியப் பிராந்தியம் மீதான கவனம் மேற்குறிப்பிட்ட இருபக்க தாக்கங்களை எதிர்கொள்ளக்கூடியன. ஒரு பக்கம் மேற்கு என்றால் மறுபக்கம் சீனா இந்த இருபக்க சுழற்சிக்குள்ளே உலகத்தின் அரசியல் பொருளாதார சுழற்சி நிகழ்ந்து கொண்டுவருகிறது என்பதுடன் இலங்கை எங்கே அசைய முயற்சிக்கின்றமையும் தெளிவாகின்றது.

தற்போது நாடுகளும், பிராந்திய அமைப்புக்களும், கொள்கைகளும் முழுமையாகவே குழப்பியுள்ளன. எதனையும் தெளிவான அடையாளத்துக்குள் அளவீடு செய்யமுடியாதுள்ளது. இது நாடுகளுக்கு மட்டுமல்ல கட்சிகள் குழுக்கள், தனிமனிதர்கள் என்ற எல்லைவரை நீட்சி பெற்றுவிட்டது. குழப்பப்பட்ட உலகத்திற்குள் வாழும் நாடுகளையும் பிராந்தியங்களையும் அவற்றின் அரசியல் அதிகார வைப்பு முறைகளிலும் காணமுடிகின்றது.

இந்தியாவும் இலங்கையும் ஒரே பிராந்தியத்துக்குள்ளிருந்து கொண்டு வேறுபட்ட திசைகளில் பயணிக்கின்றன. இந்தியாவின் போக்கினை எதிர்கொள்ள தயாராகவே இலங்கையின் தற்போதைய ஆட்சி உள்ளது. அது ஒரு போதும் இந்தியாவுக்கு சார்பாக கொள்கை வகுக்க விரும்புவதில்லை. மிக நீண்டகாலமாக இந்தியா தான் இலங்கையுடன் நேர்கணிய உறவை பேணவிரும்புகிறதே அன்றி இலங்கை அவ்வகை விருப்பினைக் கொண்டிருக்கவில்லை. இலங்கையின் இருப்பு அவ்வகை எதிர்க்கணியத்திலேயே உள்ளது. எதிர்கணியக் கொள்கையால் நிரந்தர வெற்றிகளை ஈட்டலாமென இலங்கை உலகத்திற்கும் இந்தியாவுக்கும் பாடம் கற்பித்துக் கொடுத்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ரஷ்சிய இராஜதந்திரிகள் இந்தியாவையும் சீனாவையும் இலங்கையுடன் இணங்கி செயல் படுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். அவ்வளவுக்கு முரண்பா டுண்டோ இல்லையோ இலங்கை முக்கிய தேசமாகிவிட்டது. இலங்கை உலகத்திற்கெல்லாம் மையமான நாடாகவும் மாற்றங்களை ஏற்படுத் தும் வல்லமை உடைய நாடாகவும் மாறியுள்ளது. இது உலகத்தின் திசைகளை இணைக்கவும், பிரிக்கவும் முடியுமென்பதைக் காட்டு கிறது. ரஷ்சியர்கள் விரும்பும் பலதுருவ ஒழுங்கில் முக்கோண (சீனா, இந்தியா, ரஷ்சியா) அரசமைப்பை உடைக்கும் திறனும் ஒட்ட வைக்கும் திறனும் இலங்கையிடமே உண்டு. இலங்கை ஜனாதிபதியின் ரஷ்சிய விஜயம் புதிய வெளியுறவுக் கொள்கையை வெளிப்படுத்தியது. இலங்கை ஜனாதிபதியின் இரண்டாவது ஆட்சிக் காலத்திற்கான தேர்தல் வெற்றியும் அவரது இரண்டாவது காலப்பகு திக்கான வெளியுறவுக் கொள்கையும் தனித்துவமானவையாக உள்ளது. முதலாவது காலம் முழுவதும் போரும் அதற்கான தயார்ப் படுத்தலும் நிலவியது. உலகத்தை பயங்கரவாதத்திற்கு எதிராக அணி திரட்டி போரை வென்ற பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கான வெளியுறவுக்கொள்கையை முன்வைத்து செயற்பட் டார். இரண்டாவது காலம் முதலாவது காலப்பகுதியில் நிகழ்ந்த போரில் ஏற்பட்ட மனிதஉரிமை மீறல் தொடர்பான விசாரணையை எதிர்கொள்வது, நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை சாத்தியப் படுத்துவது என்ற இரண்டு பிரதான இலக்குடன் செயல்பட முனைகின்றதை காணமுடிகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ரஷ்சிய விஜயம் அதிகமான பரப்புரையை சர்வதேச அரசியலில் விமர்சகர்களிடம் ஏற்படுத்தியுள் ளது. அவரது வெளியுறவுக் கொள்கை மேற்குலகிற்கு எதிரானது மட்டு மன்றி அதனை மிகவெளிப்படையாக கையாளும் இராஜதந்திரத்தை யும் காட்டுகின்றது. அமெரிக்கா உட்பட்ட மேற்குலகின் உபாயங்க ளுக்கு எதிரான அணியில் இடம்பெறும் பிரதான நாடுகளில் ஒன்று ரஷ்சியா ஆகும். அந்த நாட்டில் கௌரவ கலாநிதி பட்டத்தை வழங்கு வதுடன் பெருமளவான கௌரவ அதிதியாக இலங்கை நாட்டின் ஜனாதிபதி கௌரவிக்கப்பட்டார். இது ஜனாதிபதியின் வெளிப்படை யான தந்திரோபாயமாக உள்ளது. சீனா, ரஷ்சியா, இந்தியா (?) என்ற முக்கூட்டு வலையமைப்புக்குள் இலங்கையின் பங்கும் அதிகமாக உள்ளது என்பது தெளிவாகிவிட்டது. ரஷ்சியா மனித உரிமைக்கு எதிரான இலங்கை மீதான குற்றச்சாட்டை எதிர்த்ததுடன் ஐக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையும் நிரந்தர உறுப்பு நாடு என்ற வகையிலும், பெரும் வல்லரசு என்ற வகையிலும் நோக்கப்படுகின்ற நாடாகும். எனவே இலங்கை ஜனாதிபதியின் வெளியுறவுக் கொள்கை புதிய அத்தியாயத்தை நோக்கி விரிந்துள்ளது. இது மேற்குலகிற்கு சவாலானது என்பது மட்டுமன்றி கீழைத்தேசத்தின் விழிப்புநிலைக்கான போக்காகவும் அமைந்துள்ளது.

இலங்கை அரசியலில் நிகழும் மாற்றங்கள் சர்வதேச மட்டத்திலான விவகாரமாகியுள்ளன. இலங்கையில் நிகழ்ந்த போர் இறுதியில் அரசியல் அமைதியை அள்ளிக்கொண்டு சென்றுவிட்டதாக இலங்கை ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். போர்க்காலத்தில் நிலவிய அமைதி போர் முடிந்த பின் இல்லாமல் போய்விட்டது. இதற்குக்காரணம் முன்னாள் இராணுவத்தளபதியும் கூட்டுப்படைத்தளபதியுமான சரத்பொன்சேகா அமெரிக்காவில் போர்க்குற்றத்திற்காக விசாரிக்கப்படுவார். இலங்கை அரசு போர்க்குற்றம் தொடர்பாக சர்வதேசத்தால் தண்டிக்கப்படப் போகிறது என்ற வாதங்களும் இவ்வகை வாதங்களின் உண்மை என்ன? அதன் விளைவுகள் எப்படி அமையும்? இதனால் இலங்கை அடையப்போகும் பாதிப்பு யாது? என்பதே அலசப்பட வேண்டிய அம்சமாகும்

சரத்பொன்சேகா இலங்கையில் நிகழ்ந்த போரில் கதாநாயகன் என்பது உலகத்திற்கு தெரிந்த விடயம். அவ்வகை பாத்திரத்தை வகித்த பொன்சேகா கடந்த சில மாதங்களாக தனது கடந்தகால பணிபற்றியும் தனக்கு இலங்கை ஆட்சியாளர்கள் மேற்கொண்ட அவமதிப்பையும் எண்ணி அதிருப்தி அடைந்தவராகக் காணப்பட்டார். இதனால் ஜனாதிபதி தேர்தலில் எதிர்கட்சிகளில் பொதுவேட்பாளராக நிறுத்தப்பட்டார் வெற்றிவாய்ப்பு இல்லாது விட்டாலும் தற்போதைய ஜனாதிபதியின் தோல்வியை நிர்ணயிக்கும் பலம் உடையவரென அவர் கருதப்பட்டார். அப்படியான சந்தர்ப்பத்திலேயே அமெரிக்காவுக்கு சரத்பொன்சேகா பயணமானார். அங்கும் ஒரு நிகழ்வில் உரையாற்றும் போதும் சில விடயங்களை போர்க்கால சம்பவங்களை கூறியுள்ளார். அதில் கூறிய பல விடயங்கள் இலங்கையின் போர்க்குற்றத்தை ஆதாரப்படுத்துவதாக அமைந்திருந்தது. இதனால் விசாரணைக்கான தயார்ப்படுத்தலை சரத்பொன்சேகாவே ஆரம்பித்ததாக தெரிகின்றது. சரத்பொன்சேகாவுக்கு முன்பு பாதுகாப்பு செயலாளர் கோதாபாய ராஜபக்ஷா அமெரிக்கா சென்று வந்ததும் அவர் விசாரிக்கப்படாததும் நன்கு தெரிந்த விடயம். அப்படியாயின் ஏன் பொன்சேகா விசாரிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கச் சட்டத்தின்படி தனது நாட்டுப்பிரஜை ஒருவர் வேறு எந்த நாட்டிலும் குற்றச் செயல் ஏதும் செய்தவராயிருந்தால் அவர் விசாரிக்கப்படுவது வழமை அவ்வகை விசாரணையாக சரத்பொன்சேகா மீது அமைந்திருக்கலாம். அதற்கான வாய்ப்பு அதிகமெனக் கருதினாலும் ஏன் கோதாபாயா விசாரிக்கப்பட வில்லை. இதுவே இது வழமையான விசாரணை இல்லை என்பதை காட்டுகிறது. அப்படியாயின் ஏன்? இதுதொடர்பாக பலதடவை உலக அரசியல் போக்கின் மையம் இலங்கையென குறிப்பிடப்பட் டுள்ளது. அதிலும் குறிப்பாக ஒற்றைமைய உலக ஒழுங்கின் நியமம் வலுவிழந்து போகும் ஒரு போராகவும் மீட்சிபெறும் பலதுருவ உலக ஒழுங்கின் வடிவமாகவும் இலங்கை உள்ளது. இலங்கையின் போக்கு இந்தியா பக்கம் என்பதைக் காட்டிலும் சீனா பக்கம் அதிகரித்து செல்வதால் மேற்குலகம் பல நெருக்கடியை கொடுத்தபோது இலங்கை ஆட்சியாளர் அதற்கு செவிசாய்ப்பதாக தெரியவில்லை.

அண்மையில் கூட இலங்கை ஆட்சியாளர் வியட்நாம், நேபாளம், ரஷ்சியா போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்துள்ளார். லிபியா, ஈரான் போன்ற நாடுகளுக்கு அடிக்கடி பயணம் செய்வதுடன் சீன சார்பு நாடுகளை நோக்கி நட்புக்கரம் நீட்டி வருகின்றனர். இதனால் கோபம் அடைந்துள்ள மேற்கு பொன்சேகாவை துருப்புசீட்டாக பயன்படுத்த ஆரம்பித்திருந்தது. இது வெறும் செய்தியாகவே வெளிவந்துள்ளது. இதனை செய்தியாக விடுவதும் செயல்பூர்வமான நிகழ்வாக மாற்று வதும் இலங்கை ஆட்சியாளரின் கைகளிலுண்டு. ஏனெனில் தற்போதும் இலங்கை - சீனா உறவை தளர்த்திக் கொண்டு மேற்கு விரும்பும் உறவை ஏற்படுத்தினால் இது செய்தியாக முடியும் அல்லது செயலாகும். அதாவது செயல்வடிவமாகும். அவ்வகை செயல்வடிவத்தை அமெரிக்கா தலைமையிலான மேற்கு பின்வருமாறு வடிவமைத்துள்ளது.

சரத்பொன்சேகா நான்காவது மாடியில் விசாரிக்கப்படவில்லை. அவரை விசாரிப்பதால் புதுமாத்தளனில் உயிர் நீர்த்தவர்கள் மீளப் போவதில்லை. இது மேற்குலகம் தனது நலனுக்காக தானே உருவாக் கிக் கொண்ட அரசியல் நாடகம் இதனால் இலங்கை அரசுக்கோ, தமிழ் மக்களுக்கோ எந்தவிதமான இலாபமும் கிடைக்கப்போவதில்லை. இதனால் தமிழ் மக்களின் மனங்களிலுள்ள ஆத்திரம், வேதனை தணிந்து போகலாம். விசாரணை என்ற பெயரில் அசலான பேரம் பேசல் நிகழும் எப்படி சீனசார்பு ஆட்சியை அகற்றுவது மேற்குலக சார்பு ஆட்சி அமர்த்துவது என்பதாகும். அவ்வகையான உரையாட லுக்கே பொன்சேகா அமெரிக்காவுக்கு தேவைப்பட்டார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை தீவில் சீனசார்பு அரசியல் வலுவடைவது முழு உலகத்திற்கு ஆபத்தானதென மேற்கு கருதுகிறது. மேற்குலகின் இலாபத்தை அடித்துச் செல்லும் வல்லமை சீனாவுக்கே உரியதாகும். பொருளாதாரத்தில் வலுவடைந்துள்ள சீனா கடல் ஆதிக்கத்திலும் இராணுவத்திலும், அரசியலிலும் வலுவானதாக மாறுவதற்கு இலங்கை உதவியாக அமையும் இதனை சகித்துக் கொள்ளாத மேற்குலகம் அதனை முறியடிக்க சீனசார்பு ஆட்சியை முடிபுக்கு கொண்டுவரலாமென கணக்குப் போட்டது.

ஏனெனில், சீனாவின் பலமென்பதும் அதன் உறவு வளர்வதென்பதும் ஒருபுறம் அமைய தற்போதைய இலங்கைத் தீவில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. மேற்கு விரும்புவது ஏதோ சரியானதாக மேற்குக்கு அமையலாம். இலங்கைக்கு சாத்தியமானதாக அமையவில்லை. காரணம், மேற்குலகின் பலவீனமும் மேற்குசார்பான இந்தியாவின் பலவீனமும் ஒன்றானதே. இந்தியா நிகழ்த்திய அரசியலும், இராஜதந்திரமும் இந்தியாவுக்கே பரிசாக மாறிக்கொண்டிருக்கிறது. அதனை இன்னும் அதிகரிக்கக்கூடிய சூழல் இலங்கைத் தீவின் ஆட்சியாளர்களிடமே தங்கியுள்ளது. இலங்கை ஆட்சியாளர்கள் மிக தந்திரசாலிகள் அவர்களின் நகர்வுகள் பலமான சக்தியின் பக்கத்தினை மேலும் பலப்படுத்தப் போகின்றது. இதற்கு சிறந்த எடுத்துக் காட்டு கடந்த காலப்பகுதியில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் குறிப்பிட்ட விடயம்.

"மாவோஸ்டுக்களிடம் இந்திய ஆட்சியாளர்கள் தோற்று விட்டனர்" என்பதாகும். இதன் மறுபக்கம் வெளிப்படையாக இந்தியா தோற்றுவிட்டதென்பதேயாகும். தற்போது இந்திய ஆளும் வர்க்கத்திடம் பழங்குடிகள் மீதான பற்றுதல் அதிகரித்துவிட்டது. எதற்காக மாவோஸ்டுக்களை தோற்கடிப்பதற்காகவே இந்தியாவை ஒற்றுமைப்படுத்தவோ பழங்குடி மக்களை மீட்டெடுப்பதற்காகவோ இல்லை. இதுவே இலங்கைத் தீவிலும் இந்திய ஆளும்வர்க்கம் நிகழ்த்தியது. இந்திய குறுகிய நலன் தமிழ் மக்களின் அழிப்பில் அடைந்ததாகவே ஆளும்வர்க்கம் கருதியது. விளைவு முழு இந்திய வல்லமையும் நெருக்கடிக்குள் அகப்பட வைத்துள்ளது. சீனாவின் பாய்ச்சல் வேகமானதல்ல மிக மிக நிதானமானது. மிகப் படிப்படியாக தனது நடவடிக்கைகளை சீனா பார்த்துக்கொள்ளும்.

மேற்குலகின் நாடகம் ஜனாதிபதி தேர்தலுக்கு பின்பும் வெற்றி பெறும் போல் தெரியவில்லை. ஆனால் மேற்கு கைவிடாது. தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதிகால இலாபங்களை இழந்துவிடும் என்ற அச்சம் அதற்கு உண்டு. இலங்கைத்தீவினை மேற்குலகம் இழப்பதென்பது இந்து சமுத்திரத்தினை இழப்பதற்கு அத்திவாரமாகிவிடும். இதனை தடுக்க முடிந்த பிரயத்தனத்தை மேற்குலகம் எடுக்கும். இந்துசமுத்திரத்தினை வேறு எந்த சக்தியிடமும் மேற்கு இழந்தாலும் சீனாவிடம் இழக்க விரும்பாது. இதுவே சரத்பொன்சேகா மீதான விசாரணையும் அவரது பொதுவேட்பாளர் பதவியின் அடிப்படையாகும். இதனை விட தமிழ் மக்களை பாதுகாப்பதென்றும் பழிதீர்ப்பதென்றும் விசாரணையால் இலங்கைத்தீவில் ஏதும் நிகழப்போகின்றதென்றும் அளப்பதில் பயனேதும் இல்லை. முடிந்தவை எப்போதும் முடிந்தவையே தமிழ் மக்கள் யாருக்காவது பயன்படும் இனமாக இருந்துவிடுவதை தவிர்ப் பது அவசியமானது. எனவே இலங்கைத்தீவு அடுத்துவரும் பொதுத் தேர்தல் வரையோ அல்லது ஜனாதிபதி பதவிக்காலம் முடியும் வரையோ இப்படியொரு களத்தை கொண்டிருக்கும். அதில் பெரும் இழுபறி நிலவும். அது இரண்டு பிரதான கட்டத்தை ஏற்படுத்தும்.

ஒன்று சீனா உலக சக்தி என்பதை பறைசாற்றும் மையமாக அமையும். அதாவது இலங்கைத்தீவு சீனாவை உலக வல்லரசாக மாற்றும் வல்லமையை அல்லது பொறியைத் தனதாக்கிக் கொள்ளும். அது உலகத்திற்கு ஒரு புதிய செய்தியை கொடுக்கும். அதாவது இலங் கையில் ஆட்சிமாற்றத்தை மேற்குலகினால் செய்யமுடியவில்லை யென்பது சீனா வென்றதாகவே அர்த்தப்படும். அது இலங்கைக்கு மட்டுமல்ல சீனாவுக்கே தனித்துவமான கீர்த்தியை ஏற்படுத்தும். இதே பாணியில் உலக நாடுகளை சீனா முற்றுகையிட்டு வெற்றி பெறும். அதற்கு முன்னோடி நாடுகளில் இலங்கையும் இணைந்துவிடும்.

இரண்டு மேற்குலகம் சாத்தியப்பாடான வழிமுறையூடாக மாற் றத்தை ஏற்படுத்துமாயின் இலங்கைத்தீவின் இருப்பு மேற்கு சார்பா னதாகும். அதற்கான வழிமுறையை ஜனநாயக ரீதியில் நிகழ்த்தாது விடினும் வன்முறையூடாக நிகழ்த்த வேண்டிய நிலைக்குள் தள்ளப் படும். மேற்கு எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்காவை ஒரு தடவை அப்படியான வன்முறைக்கூடாகவே வீழ்த்தியது. அதனை தற்போது ஒரு தடவை மேற்கொள்ள முயன்று தோற்றுள்ளது. அதுவும் ஆபத்தான விளைவையே இலங்கைத்தீவு எதிர்நோக்கும். ஆட்சிமாற்றம் நிகழ்ந்து மேற்குலக சார்பு அரசாங்கம் பதவி ஏற்க முடியுமாயின் மாவோஸ்டுகள் எழுச்சி பெறுவார்கள். தவறும் பட்சத்தில் இந்தியா சார்பில் மீண்டு மொரு ஆயுத கிளர்ச்சி வலுப்பெறும். இது சீனசார்பு ஆட்சிக்கு எதிரானது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே எதுவாயினும் இலங்கைக்கு ஆபத்தானது. இலங்கைத் தீவு மீளவும் கொதிநிலையை நோக்கி நகர்த்தப்படுகிறது. இலங்கை வாழ் மக்களால் இலங்கை தீவு ஒருபோதும் கொதி நிலையை அடைவதில்லை. பிற தேசங்களின் இலாபத்திற்காக பயன்படுத்தப்படும் மக்கள் கூட்டமாக தமிழர்களும், ஆயுதம்தரித்த சிங்கள இளைஞர்களும் இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த 2009 பின்னரைப்பகுதி முழுவதும் இலங்கைத் தீவை மையங்கொண்டே சர்வதேச அரசியல் நகர்கின்றது. அந்நிலை ஜனாதிபதித் தேர்தலுக்கான தயார்ப்படுத்துதலில் மேலும் அதிகரித்தது. இதனால் பிராந்திய சர்வதேச சக்திகள் தமக்குள் கணக்குகளை போட்டுக்கொண்டு செயற்படும் நிலைக்கு சென்றன. ஆனால் எல்லோரது எண்ணங்களிலும் இந்தியாவின் நிலை எப்படி என்பதே கேள்வியாக இருந்தது ஜனாதிபதி தேர்தல் முடிந்த பிற்பாடும் இந்தியாவின் நிலை எவ்வாறு உள்ளது என்பது கேள்வியாக இருந்து வருகிறது. ஜனாதிபதி தேர்தலுக்கு பின்பு இந்தியாவின் நிலைப்பாடு வடகிழக்கு அபிவிருத்தியில் அதிக ஈடுபாட்டைக் காட்ட முனைகிறது. இந்தியாவின் பொருளாதார அபிவிருத்தியும், பல கட்சி அரசியலும், ஜனநாயக பன்மைவாதமும் அதன் பிரதான இலக்காக மாறிவருகிறது. அது வடகிழக்கை பொறுத்தவரை தவிர்க்க முடியாததென்றாக கருதுமளவிற்கு நிலமை மாறிவிட்டது. இந்தியாவின் அரசியல் வேகமாக வடகிழக்கை நோக்கி விரைதல் வேண்டும் இந்தியாவின் நலனுக்கு அதுவே தற்போதைய நிலையாகும். வடகிழக்கு அபிவிருத்தியில் இந்தியா அதிக ஈடுபாட்டைக் காட்டுவதுடன் வடகிழக்கு அரசியலுக்கும் இந்தியாவே பெரும்பாண்மையுடையதாக வடகிழக்கு அரசியல் தலைமைகள் கருதுகின்றன. அதிலும் குறிப்பாக வன்னி வீழ்ச்சிக்கு பின்பு இந்தியாவின் நிலை எப்படி உள்ளது. இதனை விரிவாகப் பார்க்கவேண்டிய தேவை எழுந்துள்ளது.

இலங்கையின் அமைவிடம் இந்தியாவுக்கு அண்மையில் என்பதால் அதிக நன்மைகளைவிட துரதிஷ்டங்களே அதிகம் இதன் ஆரம்பம் பிரித்தானியர் வருகைக்கு முன்பிருந்தே நிகழ்ந்து வந்தது. வரலாறு முழுவதும் இந்தியப் படையெடுப்புக்களாலும், தலையீட்டினாலும் இலங்கைத் தீவு அதிக பாதிப்புக்களை சந்தித்து வந்தது. இன்னும் கூட ஏன் என்றுமே இந்தியாதான் இலங்கைத் தீவுக்கு நெருக்கடி தரக்கூடிய தூரத்திலும் கொள்கையுடனும் இருக்கிறது. காரணம் இந்தியாவின் பாதுகாப்பு வலயத்திற்குள் இலங்கைத்தீவு உள்ளது என்பதே பிரதானமானது. இதனால் இலங்கை ஆட்சியாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவுடன் சேர்ந்து போவது, எதிர்த்தும் போவதென இரட்டைக் கொள்கையை கொண்டவர்களாக காணப்பட்டனர். இந்நிலை நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலிலும் ஏற்பட்டுவிட்டது. இந்தியாவின் வேட்பாளர் யார்? என்பதை அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் தற்போதைய அமைச் சருமான பிரணாப் முகர்ஜி வெளிப்படுத்தியிருந்தார். அவரது வரவு இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் நினைவுரையை சார்ந்ததாக அமைந்திருந்தது. அதில் அவரது உரை யில் கோடிட்டுக் காட்டப்பட்ட விடயம் இலங்கைத் தமிழரின் பிரச்சி னைக்கு விரைவான தீர்வையும், இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடி யேற்றத்தையும் அதிகம் சார்ந்திருந்தது. அவற்றை வெளிப்படையாக முன்வைத்தபோது அதற்கான அமுலாக்கத்தின் அவசியமும் வலி யுறுத்தப்பட்டது. அது சிலமாற்றத்தையும் தளர்ச்சியையும் உருவாக் கியது. இத்தகைய உரையும் முக்கியத்துவமும் ஏன் இந்தியாவால் கொடுக்கப்பட்டது.

நிச்சயமாக தமிழ் மக்களின் நலன்சார்ந்ததற்காக அல்ல தற் போதைய இலங்கை ஆட்சியாளர்களை மேற்குலகம் தண்டிக்க கூடாது என்பதை மனதிற்கொண்டு இந்தியா நடந்துகொண்டது. அதுவும் விரைவாக செயற்படுவதுடன் பாதுகாப்பான நடவடிக்கை களை பேணுவதற்குரிய சந்தர்ப்பத்தினையும் கருத்திற்கொண்டே நடந்துகொண்டது. இதனால் மேற்குலகத்திற்கு ஒரு செய்தியை இந்தியா தெரியப்படுத்தியது. இலங்கையின் அனைத்து நடவடிக் கையை இந்தியா சரிசெய்து கொள்ளும் இலங்கை ஆட்சியாளர்கள் சிறுபான்மைத் தமிழ்மக்களை எந்தவிதத்திலும் பாதிக்காத விதத்தில் செயல்பட இந்தியா நடவடிக்கை எடுக்கும் என்பதாகவே அமைந்திருந்தது. அமெரிக்கா உட்பட மேற்குலகம் சற்றுத்தீவிரமாக செயற்பட ஆரம் பித்தபோது அதற்கொரு முடிச்சுப்போட்டு தடுப்பது போல் இந்தியா நடந்துகொண்டது.

இராணுவ வேட்பாளரை போர் நிகழ்ந்தபோது செங்கம்பள வரவேற்பு கொடுத்தாலும் போருக்கு பின்பு இராணுவத்தலைமை ஆட்சிக்கு வந்ததால் பாகிஸ்தானிய நிலையே இந்தியாவிற்கு தெற் கேயும் அனுபவிக்கவருமென அஞ்சுகிறது. பாகிஸ்தான், மியான்மார், பங்களாதேஷ் போன்ற இலங்கைத்தீவும் தனக்கு நெருக்கடி கொடுப்பது தவிர்க்கமுடியாததாகிவிடும் எனக்கருதுகிறது அப்படியாயின் ஏன் சரத்பொன்சேகாவை அமெரிக்காவில் நாராயணன் சந்தித்ததாக யாரும் கேட்க முடியும் உண்மையில் தற்போதைய ஜனாதிபதியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சம் கட்டிப்போடவேண்டும். அவருக்கு சீனாபக்கமான விசுவாசம் அதிகரித்துக் கொண்டே போகிறது. அதற்காக அமெரிக்காவுடன் சேர்ந்து சரத்பொன்சேகாவை தூண்டிவிட்டு ஜனாதிபதியின் எதிரியாக நிறுத் தியதுடன் தனிக்காட்டு ராஜாவிற்கு எதிர்கடை ஆரம்பித்துவிடுவது, என்ற தந்திரத்தில் இந்தியா நிகழ்வுகளை வேகப்படுத்தியது.

இதுவே இந்தியாவின் இலங்கைத் தீவுபற்றிய கொள்கையாகும் ஜவஹர்லால் நேரு (ரோஜாப்பூ மனிதன்) ஒரு தடவை குறிப்பிட்டார். இந்தியாவை சூழ இருக்கும் நாடுகள் அரசுகள் அல்ல. அவைவெறும் கலாசார நிலையங்களாகவே இருத்தல் வேண்டும். இறைமையே பலமோ அவைக்கு ஆகாது. அவ்வாறிருப்பது இந்தியாவிற்கும் ஆகாது என்பது போலவே எந்தத் தென்னாசிய அரசும் சுதந்திக் காற்றை சுவாசித்து அமைதியாக இருக்க இந்தியா ஒருபோதும் அனுமதியாது. இந்தியாவை எதிர்க்கவும் முடியாது. அடிவருடியாக வாழுவதே இந்திய ஆளும் வர்க்கத்தின் அவாவாகும். இதனை அடிப்படையாகக் கொண்டே இந்தியா செயற்படுகிறது. நேரு வகுத்த கொள்கையிலிருந்து இந்தியா இன்னும் மாறவில்லை.

புதுமத்தாளனில் வன்னித்தலைமையினை அழித்தவிதம் தனித்து வமானது. இலங்கைத்தீவின் இராணுவமும், அதன் தாக்குதலும் தோல்வியைச் சந்தித்தபோதெல்லாம் உலக நாடுகள் பாதுகாத்தன. அதனால் தனது தனிப்பட்ட வஞ்சம் தீர்க்கும் மனோநிலையும் தனது விருப்புக்கும், எண்ணத்திற்கும் எல்லோரும் அடிமை என்பதையும் அது காட்டியது. உலகநாடுகளின் பூகோள அரசியல் நலனுக்கு வன்னித் தலைமை ஆபத்தானது என கணக்குப் போட்ட நாடுகள் மிக நீண்ட காலமாக தனித்து அழிக்கமுடியாது என பரிதவித்தன. அதன் பின்பு உலகநாடுகளின் தலையீடும் சமாதான உடன்படிக்கையும் *(MOU)* இலங்கை பிறநாடுகளை வளைத்து வடக்குகிழக்கு தலைமைத்துவத் துக்கு எதிராக போராட வாய்ப்பாக அமைந்தது. சீனாவை, ரஷ்யாவை, ஜப்பானை, அமெரிக்காவை, நோர்வேயை இந்தியாவை சேர்த்துக் கொண்டு இலங்கை போரைத் திட்டமிட்டது. இந்தியாவாலும் இலங் கையாலும் தனித்து மோதமுடியாது என்பது கடந்தகால அனுபவ மாகும். இதனாலேயே உலகத்தை தீவில் சேர்த்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் சீனாவிற்கு இந்தியாவைப் போல் செமவலுவும் பங்களிப்பும் இலங்கையில் நிகழ்ந்த யுத்தத்தில் இருந்துள்ளது. நீண்டதூர நோக்கும் இந்தியாவின் பார்வையும் முரண்பாடானதாக அமைந்தபோதும் போரில் சேர்ந்தே செயற்பட் டன. இது ஏகாதிபத்திய அரசுகளின் பொதுவான இயல்பாகும். தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலனிற்காக பொது எதிரியை தோற்கடிப்பதில் ஒன்றிணைவதும் பின்பு முரண்படுவதும் வழமையானதே ஆகும்.

அமெரிக்காவும் இந்தியாவும் இலங்கைத் தீவின் அரசியலில் ஒரேகொள்கையை கொண்டவர்களல்ல. இந்தியா தென்னாசியா விற்கு வெளியே அமெரிக்காவுடன் கூட்டுவைக்க விரும்புகிறது. ஆனால், தென்னாசியாவிற்குள் தனது தனித்துவத்தினை பேணவே விரும்புகிறது. அப்படியான இழுபறிநிலையே இந்தியாவின் பலவீன மாக உள்ளதற்கு காரணமாகும். இந்திய மத்திய ஆட்சியாளரும் அதன் இராஜ தந்திரிகளும் அமெரிக்காவை ஓரங்கட்ட முயற்சித்த போதெல்லாம் சீனா தந்திரமாக நுழைந்து வெற்றிகண்டுள்ளது. அவ்வகை நிலைக்கு இந்தியா போய்க்கொண்டிருக்கிறது. இதில் இந்தியா மட்டுமல்ல அமெரிக்காவும் நெருக்கடியை சந்திக்கப் போகிறது.

இந்தியாவின் குழப்பகரத்தை உருவாக்கும் குழப்பகரகொள்கை நிலையில்லாத தொடர்ச்சியாகவுள்ளது. பாதுகாப்பின்மையை சார்ந்து இந்தியா போகின்றதென்பதே இதன் சாரமாகும். இந்தியாவின் குழப்பத்திற்கு பின்னால் தெளிவானதொரு பொருளாதாரக் கொள் கையும் உண்டு இலங்கைத் தீவை முழுமையாக பொருளாதார முற்றுகைக்குள்ளும் அரசியல் உறுதியின்மைக்குள்ளும் பராமரித்துக் கொள்ள விரும்பும் இந்தியா பலமான சுதேச தலைமைகளை வளரவிடாது தடுக்கவே திட்டமிடுகிறது. தற்போதைய ஜனாதிபதியும் அவரது ஆட்சியும் சுதேச இயல்பை அதிகம் பிரதிபலிக்க விரும்பு பவர்களாகவே உள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது.

இதற்கு மறுபக்கம் ஆபத்தானது இந்தியாவின் நகர்வும் போக்கும் தோற்றுப்போனால் இந்தியா காணாமலே போய்விடும் இந்திய ஒருமைப்பாட்டை கட்டிவளர்க்க ஆசைப்படும் இந்தியர்கள் போன்றே இலங்கைத் தீவின் ஒருமைப்பாட்டின் பேணுகை அவசிய மாகும். அப்போது எந்த ஜனாதிபதிக்கும் இந்திய நட்பினைவிட ஒருமைப்பாடு சாதகமானதாக அமையும் அப்போது இந்தியாவை இலங்கைத் தீவிலிருந்து அகற்றுவது இலகுவானதாகும்.

கடந்த இருபதுவருடம் வடகிழக்கு ஒருமைப்பாட்டை ஒரு நீதிமன்ற தீர்ப்பு முடிவுக்கு கொண்டுவந்ததுபோல் எதிர்கால உத்தர வாதங்களும் அமையும் அப்படியே இந்திய இருப்பிற்கான சந்தர்ப் பம் காணாமல் போகும். இது இதுவரை இந்தியர்கள் வடகிழக்கு ஆயுததலைமையே இனப்பிரச்சினையை தீர்க்கவிடாது தடுப்பதாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினர். அவர்களும் இந்தியா தலையிடக்கூடாது என கருதிவந்தார்கள் இத்தகைய இழுபறி காணாமல் போன பிற்பாடு எவ்வகை மாற்றத்தினை இந்தியர்களால் செய்யமுடியாதுள்ளது என்பது கடினமானது இதற்கு இந்தியர்கள் பதில்கூற முடியாது காரணம் தமிழர்களையும் சிங்களவர்களையும் இந்தியா பாதுகாப்பது என்பது ஏமாற்றுத் தன்மையானது தனது நலனுக்காக காலூன்றியுள்ள இந்தியா நலன்சார்ந்த அரசியல் கைவிடும்போது காலவரையறை அற்ற நெருக்கடியை சந்திக்கவுள்ளது. இந்தியாவை சூழவுள்ள நாடுகளை குழப்பி அதில் அரசியல் நடத்த முனையும் இந்தியாவை சீனா குழப்ப ஆரம்பித்துவிட்டது. எனவே இந்தியாவின் எதிர்காலக் கொள்கையும் தோல்வியை நோக்கி நகரவுள்ளது.

எனவே, இப்பகுதி இந்தியா, சீனா, ரஷ்யா மற்றும் அமெரிக்கா உட்பட்ட மேற்குலகம் பின்பற்றிய கொள்கையின் பிரதிமை இலங்கை அரசியலை பாதிக்கின்றது என்பதற்கு பதிலாக குறிப்பிட்ட நாடுகளை பாதிக்கும். இந்நாடுகளின் ஆதிக்க சிந்தனையை மட்டும் கொண்டு இயங்குகின்றனவே அன்றி அரசியல் நாகரீகத்தினை கடைப்பிடித்து செயற்படுவதாக தென்படவில்லை. இது இந்நாடுகளின் இருப்பினை நெருக்கடி நோக்கி நகர்த்தும் இலங்கைத்தீவை இந்தியா மட்டுமன்றி முழுஉலகமும் கற்பதற்கான களம் தற்போது விரிந்துள்ளது.

சர்வதேச அரசியல் சுழற்சி இப்போது ஆப்கானிஸ்தான் பக்கம் மையங்கொண்டுள்ளது. ஆப்கானிஸ்தான் சார்க் அமைப்பின் அங்கத்துவ நாடு என்பதுடன் தென்னாசிய பிராந்திய சக்தியாக அடையாளப்படுத்தப்படுகின்ற நாடாகும். இதன் மீதான படையெடுப்பு மிக நீண்டதாக அமைவதுடன் மேலும் முப்பதாயிரம் துரப்புக்களை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி பாராக் ஒபாமா அறிவித்துள்ளார். இந்தப் பின்னணியில் இவ்விடயம் சர்வதேசத்தில் எவ்வகைத் தாக்கத்தினை ஏற்படுத்தப் போகின்றதென்பதை நோக்குவது அவசியமானதாகும்.

## ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான் ஆசியாவின் பிரதான மையப்பகுதியில் ஒன்றாகவும் தென்னாசியாவுக்கான திறவுகோலின் ஒரு பகுதியாகவும் அமைந்துள்ளது. அயலில் பாகிஸ்தான் இந்தியா சீனா, ரஷ்சியா, ஈரான் போன்ற வலுவான அரசியல் முக்கியம் வாய்ந்த நாடுகளாலும் சூழப்பட்டுள்ள பிரதேசமாகும் அதிக மேடும், மலையும் குன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடங்கலான பகுதியான ஆப்கானிஸ்தான், விவசாய நிலமாக 18சதவீதத்தினை கொண்டுள்ளது. இதில் கணிசமான நிலம் கண்ணிவெடி வயல்களாக காட்சியளிக்கின்றது. மேலும் படையெடுப்புக்களுக்கும், போர்புரிவதற்கும் மறைந்திருந்து தாக்கும் திறனுடைய போருக்கும் ஏற்ற பிரதேசமாகவும் அமைந்துள்ளது. எப்போது அந்நிய சக்திகளின் முற்றுகைக்கும், இராணுவ அரசியல் கலாசாரத்திற்கும் உரித்துடைய ஆப்கானிஸ்தான் மீண்டும் ஒரு தடவை முதன்மை பெற ஆரம்பித்துள்ளது.

## ஒபாமாவின் அறிவிப்பு

அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டதிலிருந்து எமது நாட்டு ஊடகங்கள் கூட அமெரிக்க ஈரான் ஆப்கான் படை வாபஸ்க்கு அழைப்புவிடும் ஜனாதிபதி என தெரிவித்திருந்தது. இவ்வகை அறிவிப்புக்கள் எல்லாம் தேர்தல் வாக்குறுதி என்ற நம் நாட்டு அரசியல் கலாசாரம் போன்றதேயாகும். ஒபாமா ஓர் அமெரிக்க ஜனாதிபதி என்பதை மிகக்குறுகிய காலத்தில் நிறுவியுள்ளார். அவரது அறிவிப்பால் வீழ்ந்து போய்க்கொண்டிருந்த ஏகாதிபத்திய அமெரிக்க அரசியல் எழுச்சிபெற ஆரம்பித்துவிட்டது. சாமாதானத்துக்கான நோபல் பரிசின் உரிமையாளர் ஆப்கான் மீதான நடவடிக்கைக்கு படையனுப்பத் திட்மிட்டிருப்பது அரசியல் வினோதமாக உள்ளது என்பதைவிட சமாதானத்திற்கான நோபல் பரிசின் வினோதம் புலப்படுகின்றது. ஒபாமா என்ன நம்ம ஊரு "கந்தசாமியை" அமெரிக்க ஜனாதிபதியாக்கினாலும் இதேமாதிரித்தான் நடந்து கொள்வார். காரணம் அமெரிக்க அரசியல் அமைப்பும் அதன் விதிகளும் அமெரிக்க அரசியல் அதிகாரத்திற்கான கட்டளையே கொண்டுள்ளன. அதன் பணி ஒவ்வொன்றும் உலகை எப்படி ஆக்கிரமிப்பதென்ற சுவடியையே பிரகடனப்படுத்தி வருகின்றது. இதற்குள் விதிவிலக்குகளை விட விதிமுறையும் வழிசெயற்படுவதையே பணியெனக்கொள்கின்றனர். அமெரிக்க அரசியல் யாப்பு உலகை ஆக்கிரமிப்பதென்பது எப்படியென வழிகாட்டியுள்ளது. அதன் பணியை ஆற்றுபவரே அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா.

ஒபாமாவின் அறிவிப்பு ஆப்கானிஸ்தான் போர் நிகழ்வுகளை அதிகரிக்கலாம் என்ற நம்பிக்கைகள் அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு பதிவுகளின் படி ஆப்கானிஸ்தானிலும் பாகிஸ்தானிலுமான பல ஆயிரக்கணக்கான மக்கள் ஆப்கான் தீவிரவாத தாக்குதலால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்பட்டுள்ளனர். இதன் எண்ணிக்கை அதிகரிப்பதுடன் மீண்டும் தாக்குதல்கள் அதிகரிக்கலாம் என்பதே கடந்தகால அனுபவமாகும் இதன்விளைவுகள் அமெரிக்காவிற்கும் அதன் நேட்டோ கூட்டிற்கும் உரியதாகும் அமெரிக்காவும் நேட்டோ படைகளும் சேர்ந்து ஆப்கான் மீதான நடவடிக்கையை முன்னெடுக்கப் போவதாக தெரியவருகிறது. உலக அரசியலில் நேட்டோ மற்றும் ஐரோப்பிய யூனியன் என்பவற்றின் அரசியல் பொருளாதார முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது. நேட்டோ ஐரோப்பிய யூனியன் அமெரிக்கா உட்பட்ட உலக அமைப்பு ஒன்று நேர்க்கணிய உளவுடன் இயங்கி வருகிறது. அமெரிக்கா என்ற தனி வல்லரசு ஐரோப்பாவை இணைத்துக் கொண்டு செயல்படுவதில் அதிக கவனம் செலுத்துகிறது. போர் நிகழ்வுகளில் மட்டுமல்லாது அரசியல் உடன்பாடுகளிலும் சூழல் விவகாரங்களிலும் இராணுவ தளபாட பெருக்கத்திலும் கூட்டுத் தன்மை காட்ட முயல்கிறது. இதனால் ஐரோப்பாவுக்குள்ளும் வெளியேயும் அமெரிக்காவின் நெருக்கடிகள் அதிகம் பாதிப்பினை அமெரிக்காவுக்கு ஏற்படுத்தாத நிலை காணப்படுகிறது. அவ்வகை கூட்டுத்தன்மையும் ஒத்துழைப்பும் அமெரிக்க அதிகாரப் போட்டிக்கு வலுவை சேர்ப்பதாக அமைந்துள்ளது. இதனாலேயே ஈராக், ஆப்கானிஸ்தான் விவகாரங்களில் அமெரிக்கா தப்பிப்பிழைத்து வருகிறது. அவ்வகை உபாயத்தினை தொடர்ந்து அமெரிக்கா கடைப் பிடித்துவருவது அதன் இலக்கம் ஒன்றை இழக்கவைத்தாலும் வல்லரசு என்ற அந்தஸ்தினை பேணிவர உதவுகிறது. அமெரிக்கா தனது அரசியல் இராணுவ நெருக்கடியை எதிர்கொள்வது போல் பொருளாதார நெருக்கடியிலும் ஒருவகை ஒத்துழைப்பு அரசியலை ஐரோப்பிய குடும்பத்துடன் மட்டும் நின்றுவிடாது ஆசிய வலையமைப்பையும் ஏகாதிபத்திய இயல்புடைய வலுவான ஆசிய ஆபிரிக்க இலத்தீனமெரிக்க நாடுகளையும் இணைப்பதில் கரிசனைக்காட்டி வருகிறது.

அதில் இலத்தீன் அமெரிக்கப் பிரதேசம் அமெரிக்க எதிர்ப்பு வாத்தை மிக அதீதமாக காட்டிவருகிறது. இலத்தீனமெரிக்க நாடுகளின் எண்ணிக்கையில் டசின் கணக்கான நாடுகளில் இடதுசாரி அரசியல் சத்திகளின் எழுச்சி நிலவுகிறது. அமெரிக்க எதிர்ப்புவாதிகளை அதிகம் கொண்ட பிராந்தியங்கள் வரிசையில் முதலாவது பிராந்தியம் இலத்தீனமெரிக்கப் பிரதேசமாகும். அதன் இடதுசாரி அரசியலில் ஏகாதிபத்திய எதிர்ப்பு, அமெரிக்க எதிர்ப்பு, வறுமைக்கு எதிரான போராட்டம், ஜனநாயகத்தின் மீள்வருகைக்கான ஆதரவு, பொருளாதார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபீட்சத்தினை நோக்கிய போட்டித்தன்மை என்பன பிரதான இடம் பிடித்தது. இதில் 2009களுக்குள் இந்திய, சீனா, பொருளாதார ஒத்துழைப்பும் உளவும் வளர்ந்துவருவதோடு அமெரிக்காவுக்கு எதிரான உணர்வில் ஆசிய வல்லரசுகள் அதிக ஈடுபாட்டை கொண்டிருக்கின்றன. இதற்கான முன்னோடி நாடாக கியூபாவும் அதன் தலைவர் பெடல் காஸ்ரோவும் காணப்பட்டமை குறிப்பிடத் தக்கது. காஸ்ரோ பாணியிலேயே சாவோஸின் செயல்பாடு காணப் படுகின்றது. இருபத்தியோராம் நூற்றாண்டில் தனித்துவமிக்க பிராந்தியத்தில் ஒன்றாக இலத்தீன் அமெரிக்கா திகழ்கிறது.

இவ்வகை நடவடிக்கைகள் தீவிரவாதத்தினை முற்றாக அழிக்க உதவுமெனக் கூறுவதைவிட அதிகரிக்கலாம் என்பதே உண்மையா கும். அதுவும் ஆப்கானிஸ்தானில் அதற்கான சாத்தியப்பாடு அதிகமாகவே காணப்படுகின்றது. பின்லேடன் அழிக்கப்படுவது சாத்தியமானதாக கருதினாலும் இஸ்லாமியத் தீவிரவாதம் நீடிக்க வாய்ப்புக் கிடைத்துள்ளது. அதற்கான நீண்ட நடவடிக்கையாக ஒபாமாவின் அறிவிப்பு காணப்படுகிறது. இஸ்லாமிய தீவிரவாதத் தின் வளர்ச்சியும் அதன் மரபார்ந்த இயல்பும் ஒரே மாதிரிக்குள் எழுச்சிபெறும் ஒரு விடயமாகவுள்ளது. அதாவது இஸ்லாமிய தீவிரவாதத்தின் எழுச்சி உலக அரசியல் தளத்தில் புதிய சித்தாந்த மாகும். பயங்கரவாதம் என்ற சுலோகத்தினை முன்னிறுத்திய அமெரிக்காவும் ஏகாதிபத்திய சக்திகளும் தமக்குள் எழுந்த முரண் பாட்டினை இஸ்லாமிய கலாசாரம் மீது திணித்துள்ளனர். இஸ்லாமிய கலாசாரம் மேலும் துண்டாடப்படுவதுடன் அதற்கான உபாயங்க ளையும் நடவடிக்கைகளையும் ஏகாதிபத்திய சக்திகளே ஏற்படுத்தி வருகின்றன. ஒருபக்கம் அரசியல் சித்தாந்தமாகவும் மறுபக்கத்தில் இஸ்லாமிய நாகரீகத்தின் அழிவாகவும் இஸ்லாமியத்தின் தீவிரவாதம் வளர்கின்றது. அடிப்படை இஸ்லாமிய நாகரீகத்தின் உடைவும், எதிர்த்துருவங்களாக மோதும் நிலையும் உலக அரசியலில் நிகழ்வாகப் பதியப்பட்டுள்ளது.

ஈராக், ஆப்கானிஸ்தான் முற்றுகைக்குப் பின்பு அமெரிக்காவின் பிரதான இலக்காக ஈரான் காணப்படுகிறது. ஈரான் மீதான அணுவாயுத நடவடிக்கைக்கு எதிரான அச்சுறுத்தலும் அதன் அரசியலும் முழுஉல கத்தையும் பாதிக்கும் விடயமென அமெரிக்கா பிரச்சாரப்படுத்தி வருகிறது. அமெரிக்காவின் உத்தியின் பிரதான அம்சம் அதன் பிரச்சாரம் ஆகும். பிரச்சாரப் போர் நிறைபெறும் போது இராணுவப் போர் ஆரம்பமாகும். முதலில் உலகத்தை பிரச்சாரத்தின் மூலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈராக்கிற்கு எதிராக தயார்செய்துவிட்டு இன்று களத்தில் படைகளை குவித்து நடவடிக்கையில் ஈடுபடுவதே அமெரிக்காவின் உத்தியாகும்.

ஈரான் அணுஆயுத அரசிற்கான போட்டியில் ஈடுபடுவது என்பதைவிட மேற்காசியாவின் பிராந்திய சக்தியாக எழுச்சி பெற்று விட்டது என்பதே அமெரிக்காவிற்கான அச்சுறுத்தலாகும். குறுகிய, நீண்ட தூர ஏவுகணைகளை தயாரிக்கும் வல்லமையும் யுரேனியத்தை செறிவாக்கும் திறனும் விண்கலங்களை செலுத்தும் தொழில்நுட்ப மும் வளர்ந்துள்ள நிலை அமெரிக்க நலன்களை மேற்காசியாவின் எதிர்காலத்தில் பாதிக்கக்கூடியது. அதனைக் கருத்தில் கொண்டுள்ள அமெரிக்காவும் அதன் நட்புவட்டகை நாடுகளான பிரான்ஸ், பிரிட்டன் என்பனவும் உடனடி நடவடிக்கைக்கு தயாராகி வருகின்றன. குறிப்பாக பொருளாதார தடைக்கான உத்திகளை முதலில் அமுல்படுத்த பிரான்ஸ், பிரிட்டன், அமெரிக்கா என்பன முன்மொழிந்துள்ளன. அமெரிக்காவின் அடுத்த போர் இலக்கோ அல்லது அரசியல் இலக்கோ மேற்காசியாவின் ஈரான் ஆகவே அமையும். ஆனால் ஈரானின் அரசியல் தலைமையும் அம்மக்களின் அரசியல் கலாசாரமும் இலகு வான வெற்றியை அமெரிக்கா சார்ந்த மேற்குலகிற்கு கொடுக்கப் போவதில்லை. ஆனால் அவ்வகை ஆபத்தினை கருத்தில் கொண்டே அமெரிக்க கூட்டணியும் ஈரானை அணுக காலதாமதம் எடுக்கின்றன. ஈரானை முறியடித்து தனித்தனித் துண்டங்களாக உடைத்தால் இஸ்ரேலின் ஆதிக்கத்தை வேறெந்த சக்தியாலும் மேற்காசியாவில் சமநிலைப்படுத்த முடியாத நிலையை ஏற்படுத்தும் இது மேற்காசி யாவை அமெரிக்க சக்திகளின் நலன்களைப் பேணஉதவும். அமெரிக்கா மற்றும் நேட்டோப் படைகளின் பிரசன்னம் அடிக்கடி அதிகரிப்பதும், கடல் மற்றும் விமானப்படைகளின் நகர்வும் ரோந்தும் வளைகுடா, அராபிய கடல்நோக்கி நகர்ந்த வண்ணம் உள்ளது. ஈரானை மிரட்டல் மூலம் அடிபணிய வைக்கலாம் என்ற நிலை தற்போது முடிந்துவிட்டது. எதிர்த்து செயற்படும் வல்லமையை ஈரான் உருவாக்கிவிட்டது. எனவே மேற்குலகம் ஈரானை வெல்ல அதிக இழப்பீட்டை சந்திக்கவேண்டிய நிலை ஏற்படும்.

உலக அரசியலில் கிழக்கு ஐரோப்பாவும் ரஷ்சியாவும் புதிய பாதைகள் ஒன்றுசேரமுடியாத இறுக்கத்தினை மேற்குலகம் அமைத் துள்ளது. அமெரிக்காவின் உபாயத்தின் கீழ் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஐரோப்பிய யூனியனிலும், நோட்டோவிலும் அங்கத்துவம் வகிப்பதுடன் அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஏவுகணைத் திட்டத்தின் கீழ் (NMD) கிழக்கு ஐரோப்பிய நாடுகளை இணைப்பதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிகண்டுள்ளது. இதனை எதிர்க்கும் ரஷ்சியா அணுஆயுதத்தினை NMD க்கு எதிராக பயன்படுத்தும் நிலை ஏற்படும் என எச்சரித்த துடன் பாதுகாப்பு செலவீனத்துக்கான நிதிஒதுக்கத்தினை அதிகரித் தும் உள்ளது. மேலும் ஜோர்ஜியா விவகாரத்தில் ரஷ்சியாவின் அணுகுமுறை வெளிப்படையாக அமெரிக்காவை கிழக்கு ஐரோப்பா விலிருந்து அகற்றுவதாக அமைந்திருந்தது. ஜோர்ஜியாவிற்குள் இருந்து தென்ஒசட்டியாவையும், அபக்சியாவையும் உடைத்து தனிநாடுகளாக்கிய சம்பவம் கிழக்கு ஐரோப்பாவில் மேற்கின் அணுகுமுறைகளை நெருக்கடிக்கு உள்ளாக்கிவிட்டது. ரஷ்சியா மீளவும் கிழக்கு ஐரோப்பாவிற்குள் ஆதிக்கத்தை பெற முயற்சிப்பதற் கான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது. இதனை எதிர்த்து *EU*, *NATO*, அமெரிக்கா ஆகிய சக்திகள் தொடர்ந்தும் ஜனநாயகம் மனித உரிமை சுதந்திரம் என்ற கோஷங்களுடன் மீளக்கட்டுமானப்படுத்தும் பாதை கிழக்கு ஐரோப்பாவை ஆதிக்கம் செய்து வருகின்றன.

## உண்மை நோக்கம்

இதனை அமெரிக்கா ஒன்றும் புரிந்துகொள்ளாத அரசு அல்ல ஒபாமா நிர்வாகத்திற்கு மிகத் தெளிவாக புலப்படும் ஓர் அம்சமாகும் அப்படியாயின் ஆப்கானிஸ்தான் தொடர்ந்தும் அமெரிக்காவிடம் இருக்கவேண்டும். ஜனநாயகம் மலர்கிறது மக்களிடம் ஆட்சியை ஒப்படைப்பது போல் சிவில் நிர்வாகத்தினை ஆப்கான் படையிடம் ஒப்படைத்துவரும் சந்தர்ப்பத்திலும் பல தடவை ஜனாதிபதி தேர்தலை நிகழ்த்திய நிலையிலும் ஒபாமாவின் அறிவிப்பு வேறொரு உள்நோக்கத்தினை கொண்டுள்ளமை புலனாகின்றது. நம்பிக்கையூட் டும் அந்த நோக்கம் ஆப்கானிஸ்தானை தக்கவைப்பதன் மூலம் ஈரானிய - சீன - ரஷ்சிய உறவை உடைப்பதும் தொடர்ச்சியாக கண்காணிப்பில் இப்பிராந்தியத்தை வைத்திருத்தல் குறிப்பாக மேற்காசிய கிழக்காசிய மத்தியாசிய ஐரோப்பா - ஆசிய தென் னாசிய பகுதியை ஆப்கானிஸ்தான் மூலம் கண்காணிக்கலாம் என்பதாகும். தரை ரீதியான தொடர்பினை கட்டுப்படுத்துவதுடன் அதிகமான நெருக்கடியை குறிப்பிட்ட அமெரிக்க நோட்டோ எதிரி களுக்கு வழங்கலாமென அமெரிக்கா கருதுகிறது. இதனை வேறெந்த நாட்டிலிருந்தும் சாத்தியப்படுத்த முடியாது. முழுமையாக அமெரிக்க கூட்டாளிகளுக்கு கிடைத்துள்ள மையநிலம் ஆப்கானிஸ்தான் ஆகும். கடந்தகால சோவியத் யூனியனின் (1979) அனுபவமும் அதுவாகவே இருந்தது. அதனை மையமாகக்கொண்டே சோவியத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது அன்றைய நடவடிக்கைகளை கையாண்டு வந்தது அதனையே அமெரிக்கா பின்பற்றி வருகிறது.

ஈரான் மீதான நடவடிக்கையை ஆப்கானிஸ்தான் ஊடாக நகர்த்துவது சுலபமான விடயம். இரண்டுமே இஸ்லாமிய அடிப்படை வாதத்தால் கவர்ந்துள்ள பிரதேசம். இஸ்லாமிய அடிப்படை வாதத்தை இஸ்லாமிய அடிப்படை வாதத்தினாலேயே அகற்றும் உபாயத்துடன் அமெரிக்கப்படை அதிகரிப்பு நிகழ்கிறது. ஈரானை தனிமைப்படுத்துவது ஈரானிலிருந்து சீன - ரஷ்சியாவை தனித்து விடுவதென்ற தந்திரங்களினுடனேயே அமெரிக்க நகர்வு அமைந்துள்ளது.

## இந்திய வரவேற்பு

இவ்வகைப்படை அதிகரிப்பை இந்தியா வரவேற்றுள்ளது. இந்தியாவின் வரவேற்பின் அர்த்தம் கவனிக்கப்பட வேண்டிய அம்ச மாகும். இந்தியாவின் பிராந்திய அரசியல்கொள்கை ஈழத்தமிழர் விடயத்தில் மாறியதுபோல் முழுத்தென்னாசியப் பிராந்தியத்திலும் மாற்றங்கண்டு வருகிறது. ஆப்கானிஸ்தான் இந்திய அரசியலில் மிக நீண்டகாலமாக தாக்கம் செலுத்திய பிரதேசம் அதனால் இந்தியா விற்கு ஆப்கான் பொறுத்து இயல்பான எச்சரிக்கை உண்டு இருந்த போதும் அமெரிக்க இந்திய அணுஉடன்பாட்டிற்கு பின்பு இந்தியா பிராந்தியக் கொள்கையை வேகமாக மாற்றி வருகின்றது. பாகிஸ்தா னின் அரசியல் இஸ்திரத்தை குழப்புவதுடன் ஆப்கான் - பாகிஸ்தான் எல்லையோர தாக்குதல் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு அமெரிக்கப் படைகளுக்கு இந்தியா வழங்கி வருகிறது.

குறிப்பாக ஆப்கானிஸ்தானுக்குள் படைஅதிகரிப்பை ஒபாமா அறிவிக்க முன்பு இந்தியப்பிரதமருடன் தொலைபேசியில் உரையாடி னார். மேலும் இந்தியப்பிரதமர் அமெரிக்கா சென்றபோது பல உடன்பாடுகளில் ஒப்பமிட்டதுடன் பாதுகாப்பு உடன்படிக்கை ஒன்றும் தயார் செய்யப்பட்டு உடன்பாடு எட்டப்பட்டது. எனவே ஆப்கானிஸ்தான் வழியாக பாகிஸ்தான் ஆட்சிமீது நடவடிக்கை எடுக்கும் விதத்தில் இந்தியாவும் - அமெரிக்காவும் செயல்படுகின்றன. அமெரிக்காவின் இயல்பான தந்திரத்தை விட தற்போது இந்தியாவை பாகிஸ்தானுக்கு எதிராக தூண்டுவதில் அதிகமான கரிசனை காட்டி வருகிறது. இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தானையும், பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியாவையும் தூண்டும் பணியை செவ்வனே ஆற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கா பிராந்திய சக்திகளை கையாண்டு உலக அரசியலை நகர்த்துகிறது.

தற்போது பாகிஸ்தான் மும்பைத் தாக்குதலுக்கு நடவடிக்கை எடுக்கவில்லை என இந்திய பிரதமர் உட்பட அமைச்சர்கள் உலகம் முழுவதும் பேசுகிறார்கள் அதுவே இந்திய ஊடகங்களின் பிரதான தலைப்பு செய்தியாக பரவி வருகிறது. அதற்கு இந்தியா கொடுக்கும் முக்கியத்துவம் அதீதமானதாகவே அமைந்துள்ளது. ஆனால் இந்தியா அதனை தனித்துவமான அரசியலாக்கி ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இதன் பின்னணியிலேயே அமெரிக்க படைக்குவிப்பினை வரவேற்றுள்ளது.

1979இல் ஆப்கானிஸ்தான் மீது சோவியத்யூனியன் படைகுவித்த போது அப்போரை இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அதனை பகிரங் கமாக எதிர்த்தார். அந்நடவடிக்கையை ஆட்சேபித்து சோவியத் யூனியனுடனான உறவுகளை முறிக்கப்போவதாக எச்சரித்ததுடன் இராஜதந்திர ரீதியில் அமெரிக்க விஜயம் ஒன்றுக்கான திட்டமிடலை வெளியிட்டார்.

இவற்றோடு ஒப்பிடும்போது தற்போதைய இந்திய ஆளும் வர்க்கத்தின் பலம் சுருக்கப்படுவதை காணமுடிகிறது. அரசியல் வங்குரோத்துத்தனமும், பிராந்தியத்தை காட்டிக்கொடுக்கும் அரசியலும் இந்திய ஆளும் தரப்பிடம் வந்துவிட்டது. ஏமாற்று அரசியலுக்குள் பிரவேசித்திருக்கும் இந்தியத் தரப்பு படிப்படியாக பிராந்திய பலத்தை பறிகொடுக்கப் போகின்றது என்பதை உணரத் தவறுகிறது.

மறுவளமாக பார்த்தால் இந்தியாவின் வல்லரசு கனவு தகர்ப்பதற் கான சூழல் தென்படுகிறது. ஆப்கானிலிருந்து பாகிஸ்தான் வரையான இந்திய எல்லையில் அமெரிக்க துருப்புக்களது குவிப்பு சாத்தியமாகி வருகிறது. பாகிஸ்தான் தனித்து அதனை எதிர்க்க முடியாதுவிட்டாலும் அதனால் இந்திய - பாகிஸ்தான் எல்லையை அமெரிக்க கூட்டாளிகள் நெருங்கிவிட்டனர். அவ்வாறே வடகிழக்குப் பகுதி அமெரிக்காவால் முற்றுகை இடப்பட்டது போல் தென்கிழக்கு கிழக்கு வடகிழக்குப்பகுதி சீனப்பக்கம் சாய்ந்துவிட்டன. சீன ஆதிக்கம் வலுவடைந்து வருகின்றது. எனவே இந்தியா பிறசக்திகளால் முற்றுகை இடப்பட்டுள்ளது என்பதை இது உணர்த்துகிறது. இந்திய ஆளும் வர்க்கம் இதையெல்லாம் அரசியலாகவோ தந்திரமாகவோ கருதத்தவறுவது அதன் வல்லரசுக் கனவை தகர்ப்பதற்கு ஒப்பானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, ஆப்கான் படை அதிகரிப்பு ஒரு புவிசார் அரசியல் இருப்பினை தெளிவாக கோடிட்டுள்ளது. மைக்கிண்டர் குறிப் பிட்டது போல் புவி என்றுமே தனித்துவமான அரசியல் பூடக மாகவே தொழிற்படுகிறது. அதனிடம் ஒபாமாவும் பின்லேடனும் இன்றும் அதிக பாடங்களை கற்கப்போகிறார்கள் எவ்வகைத் தொழில்நுட்பம் வளர்ந்தபோது புவி தனது இருப்பை இன்னும் இழந்துவிடவில்லை. அதற்கான அரசியல் அதற்கே உரியது சோவியத்யூனியன் தகர்ந்து உடைந்து போவதற்கு ஆப்கானிஸ்தான் ஒரு காரணமாக இருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின் றனர். அவ்வாறே அமெரிக்க எதிர்காலத்தை சந்திக்கப் போகிறார் களா? தற்போது வீழ்ந்துகிடக்கும் அமெரிக்காவை ஒபாமா மேலும் ஆழத்துக்குள் விழுத்தப்போகிறாரா? இதுவே ஆப்கான் படை அதிகரிப்பின் விளைவாக அமையும் அதனை அமெரிக்கா நேட்டோ வுடன் பகிர்வதனால் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறது. அதிககாலம் தப்பிப்பிழைப்பது சாத்தியமாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# III

# உலகநாடுகளும் காபன் அரசியலும் கொப்பன்கேயன் மகாநாடும்

சர்வதேச மட்டத்தில் "கொப்பன்கேயன்" மகாநாடு முக்கிய அம்சமாக உள்ளது. உலக தலைவர்களும், ஆய்வாளர்களும், விஞ்ஞானிகளும் அரசுகளின் எதிர்கால இயற்கை பேணுகையினை தீர்மானத்திற்காக ஒன்று கூடியிருந்தனர். உலக அரசியல் தலைவர் களது முடிவுகளுக்காக இயற்கையும் இயற்கை வாழ்வை தரிசிக்க விரும்பும் மனிதர்களும் காத்திருப்பது இன்னோர் துயரமாக உள்ளது. அதனை தீர்மானிப்பதில் சர்வதேச வல்லரசுகளின் தலைவர்களே வல்லுனர்களாக இருப்பதும் இன்னோர் துயரமான அரசியலாக உள்ளது. கொப்பன்கேயன் மகாநாட்டின் அரசியலை அவதானிப்போம்.

## கொப்பன்கேயனின் முக்கியத்துவம்

உலக மட்டத்தில் இயற்கை மீதான மீறல்கள், விளைவுகள் பற்றிய அச்சம் அதிகரித்துவிட்டது. இயற்கை சரிவர பராமரிக்க தவறும் அராஜகத்தனத்தை வெளிப்படுத்திய ஆட்சியாளரும், அரசுகளும், அறிஞர்களும் அதன் சீற்றத்தால் அதிர்ந்து போயுள்ளனர். அவ்வகை அதிர்ச்சியானது இழந்தவற்றையும் இழக்கப்போவதையும் மீட்டெடுக்க வேண்டிய நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளன. புவிவெப்பநிலை அதிகரிப்பினாலும், புவிமேற்பரப்பில் மனித முயற்சியால் வெளியேற்றப்படும் நச்சுவாயுக்களாலும் அடைந்துள்ள இயற்கை மாசுபடல் தடுக்கப்பட வேண்டுமென இம்மகாநாடு கூட்டப்பட்டுள்ளது. இதனை ஐக்கிய நாடுகள் சபை ஏற்படுத்தியிருந்தது. இதில் அனேகமான உலகத்தலைவர்கள் பங்கெடுத்துள்ளனர். அவர்கள் எல்லோரும் ஒரே நோக்கத்தோடு ஒன்றுகூடியிருந்தாலும் பலமான சக்திகள் அதிக கரிசனை காட்டத்தவறியுள்ளமை கவனிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக அமெரிக்க ஜனாதிபதி இம்மகாநாட்டின் முடிவுநாளில் கலந்துகொண்டமை ஜப்பானிய அரசியல் தலைமைகள் வெளிப் படையாக இம்மகாநாட்டைப் பற்றிய ஆரவாரிப்பின்றி செயல்பட்டது கவனத்திற்குரிய அம்சமாகும்.

## இயற்கையும் அரசியலும்

மக்களின் ஈடுபாடும் நிகழ்ந்துவருகின்றது. இயற்கை அமைப் பான தீவு, குடாநாடு, பரந்த நிலப்பரப்பைக் கொண்ட கண்ட அமைப்புக்கள் என ஒவ்வொன்றும் தனித்தனி இயல்புகளை தம் பரப்பில் வாழும் மனிதனால் வெளிப்படுத்தி வருகின்றது. இவ்வகை அடையாளங்களும், தனித்துவங்களும், அரசியல் ஆதிக்க வடிவத்தை உருவாக்கியுள்ளது. அதில் மாறுதல் நிகழுவதற்கான சூழல் இயற்கை அமைப்பின் குழப்பத்தால் ஏற்பட வாய்ப்புண்டு. அதனால் மனித சமூகத்தின் இயற்கைச் சார்ந்த நிற அமைப்பும், அதனால் ஏற்பட்ட தொழில் தேர்ச்சியின் அமைப்பும் விருத்திக்கான சூழலை ஏற்படுத் தியுள்ளது. அதுவே மேற்குலகத்தை வளர்ந்த நாடுகளாகவும், கீழைத் தேச வளரும், பின்தங்கிய நாடுகளாகவும் காட்சிப்படுத்தி வந்தது.

இயற்கையும் அதன் விதிகளும் நிரந்தரமாக எவருக்குமே சொந்த மானதல்ல என்பதனை மனிதன் தனது நடத்தையால் மட்டும் விளங்கிக் கொள்ளமுடியாது. அது தனாகவே சில வடிவங்களை உருவாக்கி வருவதுடன் அதன் விளைவுகள் ஒவ்வொன்றும் மனிதனைப் பாதிப் படையச்செய்துள்ளது. எனவே இயற்கையின் இயங்கியல் விதி நிர்ணயமான சுழற்ச்சிக்குள் செயல்படுகின்றது. அவ்வகை சுழற்ச்சிக்குள் வெப்பநிலை அதிகரிப்பும் பனிப்பாறைகளின் உருகும் திறனையும் அதிகரிக்க செய்வதுடன் பல தீவுகளை அழிப்பதோடு புதிய சில பரப்புக்களை வெளித்தள்ளப் போவதாக விஞ்ஞானிகளும் புவிச் சரிதவியலாளர்களும் கருதுகின்றனர். அவ்வகை நிலை தனியவே மேற்குறித்த பாதிப்புக்களை மட்டுமல்ல அரசுகளின் அதிகாரப்பலத் தையும், அரசியல்பலத்தையும் இல்லாமல் செய்யவும் புதியவற்றை தோற்றுவிக்கவும் உதவப்போகின்றது.

ஆட்டிக், அந்தாட்டிக் கண்டங்களின் எழுச்சி சாத்தியப்படானதாக மாறலாம் என விஞ்ஞானிகள் கருதுவது போல் அவற்றுக்கான அரசியல் முக்கியத்துவமும் அதிகரிக்கப்போகின்றது. அது ஏற்கனவே இருந்துவந்த கண்ட ஆதிக்க அரசியல் வடிவத்தை தகர்ப்பதுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பிரதேசத்தை நோக்கிய மனித சமூக நகர்வுக்கு வித்திடப் போகின்றது. அதனால் ஏற்படும் இயற்கை அரசியலுக்குள் புதிய எழுச்சி மிக்க சக்திகளின் பரம்பல் தவிர்க்க முடியாததாக மாறலாம். மாலைதீவு காணாமல் போவது போல் புதிய தீவும், கண்டமும் எழுச்சி கொள்ளப்போகின்றது. இதனை இயற்கை தீர்மானிக்க போகிறது. இவ்வாறு தான் இயற்கையின் விதிகள் கடந்தகால அரசியலை நகர்த்திவந்தது. விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியின் மத்தியில் இயற்கைதுறைமுகங்களும், தீவுகளும், கண்டங்களையும் தனித்துவமாகவே நிகழ்ந்துவந்துள்ளன. மனித முயற்சியினால் பிறகோள்களை தரிசிக்க முயற்சித்த நிலையின் தாக்கங்களை சிந்திக்க தலைப்பட்டுள்ள சமூகமாக நாம் மாறியுள்ளோம். பிற கோள்களை எட்ட முயற்சிக்கும்போது புவிக்கோளையும் அதன் இயற்கை அமைப்பையும் மனித சமூகத்தால் அளவிடவோ, உணர்ந்து கொள்ளவோ முடியவில்லை என்பது புதிய சிந்தனையின் விளைவாகும்.

## கொப்பன்கேயனின் பலவீனம்

எதிர்கால உலகத்தை அழிக்கும் நச்சுவாயுக்களின் பெருக்கத் தால் ஏற்பட்டுள்ள வெப்பநிலை அதிகரிப்பு பற்றிய விழிப்பு மகா நாட்டில் வல்லரசு நாடுகள் கரிசனைகொள்ள தவறுகின்றன. கெயாட்டே *(Koyato)* உடன்படிக்கை போன்று இம்மகாநாட்டின் தீர்மானங்க ளும் அமுலாக்கப்படாது பலவீனப்படலாம். கேயாட்டே உடன்பாட் டில் என்றுமே அமெரிக்க, ஜப்பான் கையெழுத்திட மறுத்துவருவது இவ்வகை முயற்சிகளின் தோல்விகளைக் காட்டுகிறது. ஏனெனில் இயற்கை மாசுபடுத்துவதில் வளர்ந்த நாடுகளுக்கே முக்கிய பங்குண்டு. அவற்றின் அரசியல் ஆதிக்கத்திற்காக தொழில்நுட்ப விருத்தியை பயன்படுத்திக்கொண்டு தமக்கிடையே போட்டி போடுவதனால் இயற்கையை விட போட்டியை முதன்மையாக கருதுகின்றன. ஓசோன் படலத்தை பாதுகாக்க முயற்சிக்க அனைத்து நடவடிக்கையும் வளர்ந்த நாடுகளின் நடத்தையால் தோல்விகளை கண்டுள்ளன. இயற்கை அமைப்பால் எட்ட முடியாதவற்றை மிக குறுகிய காலத்தில் எட்டு வதுடன் அரசியல் ஆதிக்கத்தை பிற நாடுகள் மீது பிரயோகிப்பதற்கு உதவுகின்ற அம்சமாக அவை கருதுகின்றன. வளர்ந்த நாடுகளின் அரசியல் அணுவாயுதப் பரிசோதனையின் நடத்தை எடுத்துக்காட் டாக குறிப்பிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்துக்கடியிலும், நீருக்கடியிலும் விதம்விதமாக அணுவாயுதப் பரிசோதனைகளை மேற்கொண்ட வல்லரசுகள் என்றுமே அதற்கான முயற்சியிலுள்ளன. ஆனால் பிற அரசுகள் அதனை பரிசோதிக்க தடைவிதிப்பதன் உள்நோக்கம் வல்லரசுகளின் அரசியல் பலத்தை ஏனைய நாடுகள் பலவீனப்படுத்தி விடுவன எனக்கருதுகின்றன. தமது அரசியல் அதிகார நடைமுறை தோல்வியடைந்து விடும் என்ற அச்சமே காரணமாகும். அவ்வகை அச்சத்தால் இயற்கையை கருத்தில் கொள்ளாது போட்டி போடுவதுடன் எந்தவிதமான சமரத்திற்கும் வல்லரசு வர மறுகின்றன.

உலகத்தை சுடுகாடாக்கியவர்களாக வல்லரசுகள் காணப்படுகின்றன. இரண்டாம் உலக யுத்தத்தில் ஜப்பான் மீதான அணுக்குண்டு வீச்சின் விளைவுகளுக்கு பின்பும் அமெரிக்கா வல்லரசாக எழுந்துள்ளது. அதன் அடக்கு முறைகள் இயற்கை மீது பல மில்லியன் கணக்கான தடவை நிகழ்த்தப்பட்டுள்ளது. ஆனால் அவ்வகை அயோக்கியத்தனமான அரசியலையும், பொருளாதார இராணுவ ஆக்கிரமிப்பையும் மேற்கொள்ளும் அமெரிக்காவின் பொம்மையே ஐக்கிய நாடுகள் சபை அமெரிக்காவினதும் அதன் கூட்டு நாடுகளதும் நலனுக்காக இயங்கும் ஐக்கிய நாடுகள் சபையின் நடவடிக்கை கொப்பன்கேயன் மாநாட்டில் எத்தகைய விளைவை தரவைக்க போகிறது என்பது கேள்விக்குரியது. வேண்டுமாயின் அமெரிக்க கூட்டங்களின் நலன்களுக்கு உதவலாம். அமெரிக்கா விரும்புபவற்றை இதனூடாக அமுலாக்கம்" செய்யலாம். மேலும் உலகத்தை வேறுதிசையில் கவனஈர்ப்புச் செய்ய உதவலாம். அதைத் தாண்டி வேறு எதனையும் சாதிக்க முடியாது. அதற்கு வளர்ந்த நாடுகளின் அரசியல் ஆதிக்கப்போட்டி ஒருபோதும் அனுமதிக்காது. உலகத்தை நிர்வகிப்பதும், தீர்மானங்களை மேற்கொண்டு முடிவுகளை எடுப்பதும் வளர்ந்த நாடுகளே. அவற்றின் விதிகள் இயற்கையின் விதிகளை இல்லாமல் செய்துவிடும். காபன் வெளியேற்றத்தின் 80% பங்கினை வளர்ந்த நாடுகளே கொண்டுள்ளன. அவை அவற்றை குறைக்க முயல்வதென்பது முழுமையான பாதிப்பை சந்திப்பதாக அமைந்து விடுமென கருதுவதால் இம்மாநாட்டின் முயற்சிகள் பேசப்படுவதோடு முடிந்துவிடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனா- இந்தியாவின் முயற்சி

சீனாவும் இந்தியாவும் தமது நாடுகளின் காபன் வெளியேற்றத்தை 20 சதவீதமாக குறைக்கப்போவதாக அறிவித்துள்ளன. மேலும் இரண்டு நாடுகளும் இம்மகாநாட்டில் கலந்து கொள்ளுவதுடன் முழுமையான பங்கெடுக்கும் வளரும் நாடுகளுடன் இவையும் கலந்து கொண்டுள்ளன. ஆனால் கைத்தொழில் மயவாக்கம் மட்டுப்பாடாக உள்ள பின்தங்கிய, வளர்ந்துவரும் நாடுகள் எடுக்கும் முக்கியத்துவம் உயர்வாக இருப்பதுடன் இயற்கை விதிகளை பின்பற்றி வருகின்றன.

வளர்ந்து வரும் நாடுகளின் இயற்கை உற்பத்திகளை தடுக்கும் மேற்கு நாடுகள் எவ்வாறு சாத்தியப்பாடான முடிவுகளை எடுக்க போகின்றன? மரபுரீதியாக உற்பத்திகளையும், அதற்கான முயற்சி களையும் அழித்துவரும் மேற்குலகம் தனது உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யும் சந்தையாக வளரும் நாடுகளை கையாளுகிறது. எனவே வளர்ந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி அந்த நாடுக ளின் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பத் திறனில் தங்கியுள்ளது. அதனால் அவ்வகை உற்பத்தியை குறைக்கவோ, மட்டுப்படுத்தவோ முயலும்போது ஏற்படும் பாதிப்புகளை தாங்கிக்கொள்ளும் திறன் அற்றுப்போய்விடும். எனவே கொப்பன்கேயன் மகாநாடு வறிய பின்தங்கிய, வளர்ந்துவரும் நாடுகளுக்கு மட்டுமே உரியது. இந்தியா, சீனா போன்று பிற நாடுகளும் அவ்வகை காபன் வெளியேற்றத்தை கட்டுப்படுத்துமாக இருந்தால் இம்மகாநாடு சாதகமாக அமையும். தனித்து கீழைத்தேய நாடுகளாலும் அவற்றின் நடவடிக்கைகளாலும் வெப்பநிலை அதிகரிக்கவில்லை. அதனை உருவாக்கிய என்றுமே வளர்த்துள்ள மேற்கு நாடுகள் முன்கூட்டியே முயலுவது அவசியம்.

மகாநாடுகள் உலக வல்லரசுகளின் ஒருவகை ராஜதந்திரம் என அழைக்கப்படும் தந்திரோபாயமே கொப்பன்கேயன் மகாநாடு. அதில் கிழக்கு நாடுகளின் மீதான கட்டுப்பாடுகளை விதிப்பதும் அதனை அமுலாக்குவதும் உள்நோக்கமாகும். கீழைத்தேசத்தில் சில நாடுகள் எழுச்சிகொள்ள எடுக்கும் முயற்சிகளை தடுப்பதற்கும் அவற்றின் வளர்ச்சியை கட்டுப்படுத்துவதற்கும் இம்மகாநாடு உதவப்போகிறது. அனைத்து உடன்படிக்கைகளும் வளர்ச்சி குன்றிய நாடுகளுக்கே என்பது கடந்தகால அனுபவமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இயற்கையின் அமைப்பு மாறுதல் கட்டத்தை படிப் படியாக மேற்கொண்டு வருகிறது. அதன் மாறுதல் உடனடியாக நிகாழாதுவிட்டாலும் அடுத்துவரும் நூற்றாண்டுக்குள் நிகழ வாய்ப்புண்டு. அதனை அனுபவிக்கும் போது உலக அரசியல் மாறுதல்களை தவிர்க்க முடியாதாகும். அதில் மனித சமூகம் புதிய சூழலை எதிர்கொள்ளும். அவ்வகைச் சூழலை நோக்கிய நகர்வின் ஒரு கட்டமே கொப்பன்கேயன் மகாநாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவுரை

இந்நூல் இரண்டு பிரதான பகுதிகளை புலப்படுத்த முயன்றுள் ளது. முதலாவது இலங்கையை மையப்படுத்திய உலக இயங்குவிசை யின் நகர்வு தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது. இரண்டாவது உலக இயக்க விசையின் சுழலும் போக்கு காட்டப்பட்டுள்ளது.

இன்றைய உலகம் மூன்று பிரதான பிரச்சினைகளை தனக்குமுன் கொண்டுள்ளது. முதலாவது வறுமை. இது பொருளாதார நெருக்கடி யினால் ஏற்பட்டுவரும் அபாயமாக மட்டுமல்லாது நீண்ட மரபு சார்ந்த, மரபுசாராத வாழ்வியல் முறைமையால் ஏற்பட்ட கொடிய நோயாகும். இதனை இல்லாது செய்வதற்கான போராட்ட பல நூற் றாண்டாக நிகழ்கின்றது. அதில் தீர்வை எதுவும் எட்டவில்லை. ஆனால் வேலையின்மை, பணவீக்கம், உற்பத்தியின்மை, உற்பத்திப் போலி, உற்பத்தி நஞ்சூட்டப்படுதல் என்ற விசாரமான விடயங்கள் நீண்டு கொண்டு போகிறது. அது முடிவிலியாகவுள்ளது. இதற்குள் உலகத்தை வடிவமைப்பதென்பது வளர்ந்த நாடுகளும், வளரும் நாடுகளுக்கும் ஏதோ ஒரு விதத்தில் நெருக்கடியாகவே தென்படுகிறது. இதனை முறியடிக்க பொருளாதார கோட்பாட்டு வாதிகளும், நடை முறைவாதிகளும் போட்ட திட்டங்கள் அனைத்தையும் உடைத்தெறிந்து உலகம் நெருக்கடியென்ற விபத்தை சந்தித்துக் கொண்டிருகிறது.

இரண்டாவது இயற்கையின் சீற்றமும் மாசுபடுதலும் இயற்கை என்பது எதிர்காலம் பற்றிய விளிம்பின் அத்திவாரம். எதிர்கால சமூகத்தின் வாழ்வை பேணுவதற்கு உரித்தான பலமும் சக்தியும் இயற்கையிடமே உண்டு. மனிதன் இயற்கையை சீர்குலைக்காமல் மனிதனாக வாழ்ந்திருக்க முடியாது. ஆனால் அவ்வகை சீர்குலைப்பு மனித வாழ்வின் அர்த்தங்களை அழிக்கவல்லவா? எடுத்துச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்கிறது. இவ்வகைத் தன்மையால் மனித இனமோ உயிரினமோ இல்லாது போய்விடும் என்ற அச்சம் ஏற்பட்டுவிட்டது. இந்த அச்சுறுத்தலின் பின்புறத்தில் அரசியல் அதிகாரப் போட்டியின் போரும் காரணமாக அமைந்துவிடுகின்றன.

இயற்கைக்கு புறம்பாக எழுச்சிபெற்றுள்ள உலகம் நிலையற்ற தன்மையை ஏற்படுத்த வல்லது. செர்நேபில், போபால், கிரோசிமா நாகசாக்கி போன்ற வரலாற்று அழிவுகளின் தடங்கல் என்னுமே உலகப்பரப்பில் காணப்படுகிறது. இவ்வகைப்பரவலை ஏற்படுத்தி உலகத்தை நொடிப்பொழுதில் அழிக்கும் திறன் வல்லாதிக்க சக்தி களிடமும் அதற்கு எதிர்வாதம் புரியும் சக்திகளிடமும் குவிந்துள்ளது. இதனால் மனித இனம் அழிந்து போகும் நிலை ஏற்பட்டுவிடும் அதனைத் தடுக்க சர்வதேச வல்லரசுகளும் அவற்றின் அதிகாரப் போட்டிகளும் காரணங்களாக உள்ளன.

மூன்றாவது பயங்கரவாதம் என்ற அரசியலையே முழுமைப் படுத்தும் ஒரு சித்தாந்த வாதம். இது "அச்சமூட்டுதல்" என்ற சொற் பொருள் சார்ந்ததாக ஆய்வுப் புலத்தில் நோக்கப்படுகிறது அது அரசுகளிடமும், குழுக்களிடமும், அரசுசாராத பிரிவுகளிடமும், தனிமனிதனிடமும் காணப்படும் ஓர் அம்சமாகும். இதன்வலி முழுஉலகத்திலும் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இது அரசியலாக மட்டும் நோக்காது மனித உளம்சார்ந்ததாக பார்க்கும்போது எம்முன்னே பாரிய நெருக்குவாரத்திற்குட்பட்ட மனித சமூகம் நிலை பெற்றுள்ளது. இதனை முறியடிக்க முடியாத நிலை காணப்படுகிறது. அரசியல் பயங்கரவாதமே முடிவிற்கு வரலாம். ஆனால் அச்சமூட்டும் பயங்கரவாதம் முடிவிற்கு வரப்போவதில்லை. இதனை உலகம் எப்படித் தீர்க்கப்போகிறது.

இவ்வகை மூன்று பிரச்சினைகளையும் புரியவைக்க எடுத்த முயற்சியாகவே இச்சிறுநூல் காணப்படுகிறது. இதில் இலங்கைத் தீவு தனித்துவமான சக்தியாக விளங்குகிறது. சீனாசார்ந்த உலக வலயம் ஒன்று இருபத்தியோராம் நூற்றாண்டில் வடிவமைக்கப்பட் டுள்ளது. கடந்த ஒரு தசாப்தம் அதிகமான அடைவை அவ்வலைய மைப்பு பெற்றுவிட்டது. இது ஒரு திசையிலும், மேற்குலகம் மறுதிசையிலும் செயற்படுகின்றன. இரண்டுமே ஒரேநோக்கத்தைக் கொண்டவை ஆனால் வேறுவேறு திசைகளில் மட்டும் இயங்குகின் றன. இது மீண்டுமொரு அதிகார சமநிலைத் தாக்கத்தினை தோற்று விக்க முயலுகின்றது. சமுத்திரங்களாலும், துறைமுகங்களாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரைப்பகுதியாலும், ஆகாயவெளியாலும் வடிவமைக்கப்பட்டுள்ள சமநிலை அதிகாரப்போட்டியை தமதாக்கிவருகின்றன.

இதில் இறைமை, தேசிய இனவிடுதலை, சுதந்திரதேசம் என்ற சொற்களுக்கான அர்த்தங்கள் வலிமைப்பட்டுவிட்டன. அவை தோன்றிய வலிமையை இழந்துவிட்டன. அரசுகளின் எல்லைகள் கூட பிரசக்திகளால் காவல் காக்கப்படும் இறைமை கோட்பாடு ஒன்று தோன்றிவிட்டது. தேசம், தேசியம் என்ற மரபார்ந்த விடயங்களுக்கான அர்த்தங்கள் சர்வதேசியத்தால் மூழ்கடிக்கப்பட்டு விட்டது. பொருள்சார்ந்த வாதங்களின் சர்வதேசியத்தால் அவை காணாமல் போய்விட்டன. இனஅடையாளங்களும் இனத்தேசியங்களும் பெருந்தேசியங்களால் விழுங்கப்படும் உலகத்தில் வடிவத்தினைக் காட்ட இந்நூல் முனைகிறது. உண்மையில் பாரிய கலாசார விழுமியங்களை கொண்டுள்ள தேசிய இனப்படர்ச்சியின் எழுச்சியே உலக அரசியல் பொருளாதார வலிமையைக் கொண்டிருக்க முடியும் அதுவே சாத்தியப்பாடான உலகத்தைக் காண்பிக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Reference


(1) John Buylis & Steve Smith; the Globalization of World Politics. (Second Edition) Oxford University press. 2001.

(2) Moniqu meke Kamp, Paul Van Tengeren and Hans Van deveen ( Ed) Searching for peace in central and South Asia. lynne Rien – ner Publishers 2005.

(3) மு. திருநாவுக்கரசு போரும் சமாதானமும் ஒற்றை மைய உலக அரசியல், காலச்சுவடு பதிப்பகம். செப்ரெம்பர் 2008.

(4) சமகூஷ்டியா, தனிநாடா அறிவமுது பதிப்பகம். கிளிநொச்சி. ஜனவரி. 2005.

(5) கே.ரீ. கணேசலிங்கம் சமகால சர்வதேச அரசியல் கல்வியியல் வெளியீடு. 2005.

(6) அலெக்ஸாந்தர் கோந்த்ர தோவ்: (மொ. பே) இந்துமாக்கடல் மர்மங்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட். பெப்ரவரி 2005.

(7) Sudhanshu Tripathi; Changing Geo – Politics of central Asia and implications for India.

(8) G.S. Khurana; Shaping security in India's maritime East; Role of Andaman & Nicobar. Strategic Analysis Vol. 30.No.1 Jan – Mar – 2006.

(9) Bharfendu Kumar Singh; The Politiocal Economy of China's Defence modernization Strategic Analysis Vol.29. No – 04 Oct – Dec 2005.

(10) Samuel P. Huntinton. The Clash of civilization? Summer 1993 Vol. 72. No.3

(11) C.P. Bhambhri; Indian Foregin Policy A more Varied menu. Indian guarterly Vol. XII No 04 Nov – Dec 2006




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(12) G.V.C. Naidu; Indian and East Asian Summit, Strategic analysis, IDSA Oct – Dec 2005.

(13) John Gooneratne; Negotiating with the Tigers (LTTE) (2002-2005) A view from the second Row; A Stam Ford Lake Publication. 2007.

(14) Chelva Kanaganayakam; (Ed) AJ; The Rooted cosmopolitan; Tamilial Publication July 2008.

(15) Sumanasiri Liyauage; A Comment on the peace talks; provincial zing vital issues. Polity Vol.1 No.1 pravada. Colombo February – March – 2003.

(16) Darini Rajasingham Senanagaka. The Political Economy of Aid, Conflict and Peace building in Sri Lanka. Polity Vol.3. No.5 & 6 October – December – 2006.

(17) Jayadeva Uyangoda; Sri Lanka's Peace & old Nationalist imaginations. Vol.3. No.3 Polity. Sri Lanka. April – May 2006.

(18) Sunit Bastian; Nowar. No peace? Vol.3 No.3. Polity. Sri Lanka.

(19) Kumar Rupesighe; multiple crisis in Sri Lanka; Vol.1. No.6. Polity. Sri Lanka March – April – 2004.

(20) Jusuf Wanandi; The Major Powers in East Asia; Vol. LXIV. No.1 India quarterly. Jan – Mar – 2008.

(21) Shayam Saran; India And China Rivals on Partners? : Ibid.

(22) David. H Shim; Africa; The United State and Chiva Court the Continent Vol. 62. No.02 into national Affairs Spring/ Summer 2009.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாசிய நாடுகள் எதிர்கொள்ளும் சவால்களும் இந்தியாவின் வளர்ச்சியும்

**சுருக்கம்:**

தென்னாசிய நாடுகளுக்குரிய சவால்களை மூன்று பிரதான பிரிப்புக்களாக இனங்கண்டு அளவீடு செய்யமுடியும்.

(1) தென்னாசிய நாடுகளுக்குரித்தான சவால்கள்

(2) வலுமிக்க தென்னாசிய அரசினால் எதிர்கொள்ளப்படும் சவால்கள்

(3) தென்னாசியாவிற்கு வெளியே இருந்து உருவாகும் சவால்கள்

இம்மாதிரிகளின் அடிப்படையிலிருந்து ஆராயும்போது முழு உலகத்திலிருந்தும் மோசமான சூழலை நோக்கி தென்னாசியா பயணிக்கின்றதா? என்ற தொகுப்பினை எதிர்கொள்ளும் உலக அரசியலுக்குள் யதார்த்தம் காணப்படுகின்றது. என்ற முடிவினை பரிசீலிப்பதாக அமையும்.

**அறிமுகம்:**

ஒரு அரசியல் சமூகத்தினை *(Polity)* அடையாளப்படுத்துகின்ற அம்சமாக விளங்கிய இனம், மதம், மொழி, வாழ்விடம் என்பன காலம் காலமாக பேசப்பட்ட நிலைமாறி தற்காலத்தில் அல்லது பின்நவீனத்துவத்தின் பின் *(After past – Modernism)* அறிவும் *(Knowledge)* நுட்பமும் *(Skill)* தேசியத்தின் அடையாளமாகி விட்டன. இவை இரண்டிலும் தேர்ச்சியுடைய சமூகமே நிலைத்து நிற்கும் வல்லமையைப் பெற்றுள்ளன. இத்தகைய வல்லமையுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகமாக தென்னாசிய சமூகம் மாறுதல் அவசியமானது. ஏனைய ஏழுநாடுகளையும் விட (ஆப்கானிஸ்தான் (2007), இலங்கை, நேபாளம், பூட்டான், பாகிஸ்தான், மாலைதீவு, பங்களாதேஷ்) இந்தியா அறிவிலும் நுட்பத்திலும் பேரெழுச்சி பெற்று வருகிறது. உற்பத்திப்பண்டத்தின் முக்கியத்துவம் வளர்ச்சிப் பொருளாதாரத்தில் பலவீனமடைந்துவிட்டது. காரணம் உலக உற்பத்தியின் திரட்சி அதிகரித்துவிட்டதென்ற செய்தியைத்தந்துள்ளது. அத்துடன் உற்பத் தியை அதிகரிப்பு வேகமாக ஒவ்வொரு நுகர்வோனையும் சென்ற டைந்துவிடுகின்றது. போட்டித்தன்மை உலகமயமாகி (*Globali zation*) விட்டதென்பதே முதன்மைக் காரணியாகும். இதனால் சேவைத்துறை வலுமிக்க பொருளாதார குறிகாட்டியாக முன்னு மைந்துள்ளது. (அட்டவணை 1ஐப் பார்க்க) இதில் இந்தியா மிகச்சிறப்பான வளர்ச்சியை தென்னாசியாவிற்குள் அடைந்துவரு கிறது. தகவல்தொழில் நுட்பத்தில் (*IT*) என்றுமில்லாத பங்கு உலகப் பொருளாதாரத்தில் பெற்றிருப்பது போல் இந்தியாவும் பொருளாதார முன்னேற்றத்தில் தென்னாசிய நாட்டிற்குள் மட்டுமல்லாது உலக ளாவிய மட்டத்திலும் மிகப்பெரும் சக்தியாக உருவெடுத்துள்ளது. இன, மத, மொழி, காலாசார அம்சங்களில் இந்தியாவை சார்ந்து தென்னாசியா விளங்கியது போல் பொருளாதாரத்திலும், அரசியலிலும், இராணுவ ஒத்துழைப்புக்களிலும், தலையீடுகளிலும் தென்னாசியப் பிராந்தியம் இந்தியா சார்ந்து தங்கியிருக்கும் நிலை வலுவடைகிறது. இதனை முழுமையாகவும் தென்னாசியாவிற்கு புறம்பான சக்திக ளின் செல்வாக்கினை பகுதியாகவும் உள்ளடக்கி நோக்குவதே இக்கட்டுரைக்கு பொருத்தமான அணுகுமுறையாக அமையும்.

## தென்னாசிய நாடுகளுக்குரித்தான சவால்கள்:

தென்னாசிய நாடுகளுக்குரித்தான சவால்கள் மிக நீண்ட காலமாகவே தீர்வின்றி நீடிக்கும் முரண்பாடுகளைக் குறிப்பதாகும். இன, மத, மொழி வேறுபாடுகளும் அவை சார்ந்து நாடுகளுக்குள்ளே நிலவும் ஆயுதப் போராட்டங்களையும் குழப்பத்தினை ஏற்படுத்தும் வன்முறை அரசியல் கலாசாரத்தையும் பரீட்சிப்பதாகும். தென்னா சியாவின் அரசியல் சித்தாந்தத்தில் திலகர், மகாத்மா காந்தி, சுபாஸ்சந்திரபோஸ், ஜவர்கர்லால் நேரு ஆகியோர் கணிசமான பங்கினை வகித்தனர். அவர்களை அடியொற்றிய தென்னாசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகள் குடியேற்றவாதத்தினை எதிர்த்துப் போராடியமையும் சுதந்திரத்திற்குப் பின்பு அணிசேராமை என்ற சிந்தனை வலுப்பெற்ற தையும் காணலாம். ஆனால் அதனையே வலிமையாகக் கொண்டு அரசியல் அர்த்தம் கொடுக்காது பொருளாதார அர்த்தத்தில் மன்மோகன்சிங் அரசாங்கம் அணிசேராமைக்கு புதிய வடிவம் கொடுக்க முயன்றுவருகின்றது. இந்தியா, பிரேசில், தென்னாபிரிக்கா *(IBSA Forum)* என்பன ஒன்றிணைந்து 2002இல் ஆரம்பித்திருக்கும் *IBSA* அமையம் புதிய கொள்கையை பொருளாதாரத்தில் ஏற்படுத்த ஆரம்பித்துள்ளது. (அட்டவணை 2ஐப் பார்க்க)

பனிப்போர்க் காலத்தில் உதயமான தென்னாசிய அரசுகள் உலகத்தை ஆளும் சக்திகளால் வகைப்படுத்தப்பட்டபோதும் இந் நாடுகளுக்குரிய இயல்பான முரண்பாடுகள் தீர்வின்றி காணப் படுகின்றன.

நூற்றுக்கணக்கான இன, மத, மொழி கூறுகளையும், சாதிப் பிரிவுகளையும், வட்டாரமொழிக் குடும்பங்களையும் கொண்டுள்ள இந்தியா குடியேற்றவாதத்துக்கு முன்பு ஐந்நூறு இராட்சியப் பிரிவுகளை கொண்டிருந்தது. பிரித்தானியரின் பொருளாதார சுரண்டலை இலகுவாக்கவும் நிர்வாக நடவடிக்கையை ஒன்றிணைக்க வும் கிழக்கிந்திய வர்த்தகக்கம்பனி *(EIC)* இந்திய தேசியத்தை உருவாக்க மறைமுகமாக பங்களிப்பைச் செய்தது. ஆனால் வேறு பாடுகளை முரண்பாடுகளாக்கவும், முரண்பாடுகளை பகைமையாக் கவும் கைதேர்ந்த பிரித்தானிய ஆளுனர்கள் பிரித்தாளும் தந்திரத்தின் மூலம் இந்திய உபகண்டத்தை இன, மத, மொழி பிளவுகளை தூண்டிவிட்டு ஆட்சிசெய்தனர்.

ஐரோப்பியரின் குடியேற்றம் 1496 இல் வாஸ்கொடகாமாவின் வருகையுடன் ஆரம்பிக்கும்போது மொகாலயப் பேரரசின் செல்வாக்கு நிலவியகாலம். இதில் மௌரியப் பேரரசின் வீழ்ச்சி மொகாலயப் பேரரசின் எழுச்சிக்கு வித்திட்டது. முடியாட்சிகளும் அவைசார்ந்த மக்கள் வாழ்வியலுக்கும் மதத்தோடு அதிக நெருக்கமிருந்தது. இந்துமதத்தின் குழப்பம் பௌத்தமதத்தின் தோற்றம் இந்திய உபகண்டத்தில் (தென்னாசியா) நிலவியது போல் பௌத்தமதத்தின் "அஹிம்சை" தத்துவம் இஸ்லாமியப் படையெடுப்புக்களும் மொகாலயப் பேரரசின் வளர்ச்சிக்கும் அடிகோலியது. அதனோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து பௌத்தம் என்பதில் ஈடுபட்ட மக்கள் இஸ்லாமிய மதத்தினை தளுவ ஆரம்பித்தனர். இது ஐரோப்பியரது வருகையோடு கிறிஸ்தவ மதத்தின் செல்வாக்கு தென்னாசியாவுக்குள் வேரூன்ற ஆரம்பித்தது. மதம் என்பது அரசியலில் மங்காத புகழ் பெற்றதோடு தென்னாசிய அரசியல் கலாசாரத்தில் ஊறிப்போனதொன்றாகிவிட்டது. தென்னாசிய நாடுகளின் அரசியலை, கலையை, பண்பாட்டை புரிய வேண்டுமாயின் மதத்தினையும் அதன் மூலவேர்களையும் புரிதல் அவசியமானது.

வட்டார மொழிகளாலும் அவைசார்ந்த இனப்பிரிவுகளாலும் தம்மை அடையாளப்படுத்திய இந்திய மக்கள் குடியேற்றவாதத்திற்கு எதிராக முதல் முதலில் ஒன்றிணைந்தனர். நேரு, காந்தி போன்றவர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் இந்திய மக்கள் தம்மை ஓர் இந்திய தேசத்தவர் என்ற அடையாளத்தைப் பெற்றதோடு சுதந்திர தேசத்தில் மதச்சார்பின்மை, மாநிலங்களுக்கிடையே அணிசேராமை, வேற்றுமையில் ஒற்றுமை என்பவற்றை முதன்மைப்படுத்திய நேருவின் சித்தாந்தங்களால் இந்தியா வளர்ந்தது. ஆனால் இது சுதந்திரப் போராட்டத்தின் தொடர்ச்சி நிலவிய முதல் இரண்டு தசாப்தங்களில் சாத்தியப்பட்டபோதும் பிராமணியத்தின் ஆதிக்கமே அரசியல் நிர்வாகத்திலும், பொருளாதாரத்திலும் இடம்பிடித்தது. இதனை முறியடிப்பது என்பது சோஸலிச சித்தாந்தத்தை பின்பற்றிய இந்திய மார்க்சிஸ்டுகளாக காணப்பட்ட தென்னாசிய மார்க்சிஸ்டுக்க ளாக காணப்பட்ட தென்னாசிய மார்க்ஸிஸம் உயர் குழாத்தின் அரசியல் அபிலாசையை நிறைவு செய்வதற்கான தளமாக மட்டுமே மேலெழுந்தது மட்டுமன்றி ஒடுக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காகவோ அல்லது பேராடுவதற் காகவோ உருவானதொன்றல்ல. தற்போது மார்க்ஸிஸம் மறுவகுப் புக்குள் முன்னேறினாலும் அரசியல் கோசமாகவன்றி நடைமுறை வலுவை இழந்து கொண்டிருக்கிறது. இதில் மார்க்ஸிஸத்தை பின்பற்றிய சமூகத்திடமே அக்குறைபாடு காணப்படுகிறது. கேரளா விலும் மேற்கு வங்காள மாநிலத்திலும் சோசலிஸ கட்டுமானம் எல்லைக்குட்பட்ட வளர்ச்சியை நோக்கியதுடன் உலகமயப்படுத்த லுக்குள் அதன் தனித்துவத்தினை அதனால் தக்கவைக்க முடிய வில்லை. மேலும் நிலமானியத்தின் எச்சங்களும் சாதி அரசியலின் பங்கம் இன, மத, மொழி சமூகத்தின் ஆதிக்கமும் இந்தியாவிற்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து அகற்றவே முடியாததென்பதை கோடிட்டுக் காட்டுகிறது. வறுமைக்குள் சிக்குண்டுள்ள உலக நாடுகளில் பிரதான இடத்தை இந்தியா பெற்றிருந்த போதும் அத்தகைய அரசியல் சமூகத்திடம் மார்க்ஸிசம் வளர்ச்சிபெறத் தவறியது. அதுமட்டுமல்ல ஒடுக்கப்பட்ட சமூக அடையாளங்களை நோக்கி எந்த மாற்றத்தையும் அதிகமாக அதனால் ஏற்படுத்த முடியவில்லை.

வறுமை என்பது இந்தியாவிற்கு உரித்தான நீண்டதும் தீர்க்கப் படாததுமான சவால்மிக்க ஒரு விடயமாகும். வறுமைக் கோட்டின் வாழ்வை முடிவுக்கு கொண்டுவர பல திட்டங்களை முன்வைத்து நீண்டகாலமாக இந்தியா செயற்படுகின்றது. மறைமுகமாக பொரு ளாதார அபிவிருத்தியைத் தூண்டுதல் விவசாய வளர்ச்சியை கிராமிய மட்டத்தில் ஏற்படுத்தல் பண்ணை முறைகளை கிராமிய உட்கட்ட மைப்பு முறைகளை உருவாக்குதல் ஆட்சிமுறையை வறுமையை ஒழிக்கும் பிரகடனங்களில் பெண்களின் வேலைவாய்ப்பும் கல்வி மற்றும் மக்கள் தொகைப் பெருக்கத்தை குறைத்தல், (PDS) சுயவேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்குதல்,(PDS) அரசாங்கப் பங்களிப் புடன் தனியார் பிரிவுகளை நிறுவுதல் (பஞ்சாயத்து முறைகள்) என்பனவற்றை நேரடியாக அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது. மேலும் அரசசார்பற்ற அமைப்புக்கள் (NGO's) சுயஉதவிக் குழுக்கள் (SHG's) சமூகமட்ட அமைப்புக்கள் (CBOs) என்பனவற்றை ஏற்படுத்தி இந்தியப் பொருளாதாரத்தில் வறுமையைக் கட்டுப்படுத்த முடிகிறது இந்திய உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (GDP) 1997-2002 ஆண்டுவரை அதாவது ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் கீழ் 5.4 சதவீதத் தையும் 2002-2007 வரையான பத்தாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் 6.0 சதவீத வளர்ச்சியையும் எட்டியுள்ளது. 2007முதல் ஆறு மாதத்திலும் 7.4 சதவீத வளர்ச்சியை இந்தியா அடைந்துள்ளது. ஆனால் இந்தியாவின் வறுமைக்குரிய மக்களாக 260 மில்லியன் பேர் 2001ம் ஆண்டில் காணப்பட்டதுடன் 1.08 பில்லியன் பேர் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்பவர்களாகவும் உள்ளனர். (2006) கிராமமட்டத்தில் வறுமைக்குள் 193 மில்லியன் மக்கள் வாழ்கின் றனர். வறுமை ஒழிக்கும் திட்டத்தின் கீழ் 1983-1993இல் 7.2 சதவீதமாக குறைக்கப்பட்ட நிலை 1994-2000 இடையில் 9.5 சதவீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. பீகார், ஒரிசா, உத்தரபிரதேசம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியபிரதேசம் என்பன மிக அதிகளவிலான வறுமைக்குட்பட்டுள்ளன. அவை ஒப்பீட்டு அடிப்படையில் தென்மாநிலங்களை விடவும் பஞ்சாப் ஹரியாணாவைவிடவும் வறிய மாநிலங்களும் உள்ளன. இந்தியாவின் 14மாநிலங்களில் வறுமை 1990-2000க்கு இடையில் 2சதவீதத்தால் அதிகரிப்பு அடைந்துள்ளது இதனடிப் படையில் மனித உரிமைச்சுட்டி (HDI) 1960இல் 0.206, 1992 இல் 0.382, 2005இல் 0.602 ஆக அமைந்துள்ளது.

* இந்தியாவின் கிராமங்களில் 70சதவீதமான மக்கள் இன்றும் வாழ்கின்றனர். அவர்களில் அதிகமானவர்கள் பாரம்பரிய விவசாயத்தில் தங்கியுள்ளனர். இது தென்னாசிய நாடுகளுக்கு பொதுவான பிரச்சினையாகவே உள்ளது.

* வேலைக்கு சிறார்களை அமர்த்துவதும் அவர்களது கல்வியில் ஏற்பட்டுவரும் வீழ்ச்சியும் வறுமையின் நீட்சிக்கு காரணமாகிறது.

* பெண்கள் சமத்துவம் மற்றும் தொழில் அரசியல் விடயங்களில் காட்டப்படும் பாரபட்சம் சமூக முன்னேற்றத்திற்கு தடையாக வுள்ளது.

* எயிட்ஸ் பரவலும் அதனை தடுப்பதற்கான அரசுகளின் பலவீன மான நடவடிக்கைகளும் மனித சமூகத்தின் பிரச்சினைகளை அதிகரித்துள்ளது.

* அகதிகள் தொடர்பான பொருளாதார சமூக நடவடிக்கைகள் மட்டுமன்றி அரசியல் பிரச்சினை, ஆயுதப்போராட்டம் இந்திய அரசியலை பாரிய பாதிப்புக்குள்ளாக்கி வருகின்றது. காஷ்மீர், அஸாம், தெலுங்கானா ஆகிய மாநிலங்களின் தனிநாட்டுக் கோரிக்கையும் இந்திய அரசியலின் ஒருமைப்பாட்டிற்கு சவாலாக உள்ளது. மேலும் இஸ்லாமியத் தீவிரவாதம்/ பயங்கரவாதம் அவ்வப்போது மேற்கொள்ளும் தாக்குதல்களால் இந்திய அரசியல் ஆட்டங்கண்டு வருகிறது. மதத்தீவிரவாதமும் அதனால் ஏற்பட்டுவரும் மோதல்களும் இஸ்திரமற்ற அரசியலை உருவாக்க முயல்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பாகிஸ்தானிலும் பலுஸ்தான் மாகாணம், சிந்து மற்றும் வடகிழக்கு புரண்டியர் மாகாணங்களின் தனிநாட்டுக் கோரிக் கைகள் அதன் இஸ்திரத்தைப் பாதித்து வருகிறது.

* பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி ஜனநாயக ஆட்சியை குழப்பு வதுடன் அரசியல் உறுதிப்பாட்டுக்கும், பொருளாதார திட்ட மிடலுக்கும், வளர்ச்சிக்கும் தடையாக விளங்குகிறது.

* சியா, சின்னி முஸ்லீம்களிற்கிடையிலான வன்முறைகள் சமூக முரண்பாடுகள் அதிகமாக உள்ள நாடாக பாகிஸ்தான் விளங்குகின்றது.

* இலங்கையில் மிக நீண்ட இனப்பகைமையும், வடகிழக்கு தனிநாட்டுக் கோரிக்கையும், ஆயுதப்போராட்டமும் பாரிய பிரச்சினையாக மாறியுள்ளது.

* சிங்கள, தமிழ் பகைமை கடந்த முப்பது வருடங்களாக தொடர் பிரச்சினையாகவுள்ளது. பல உடன்பாடுகள் எட்டப்பட்ட போதும் தீர்வு தராது வன்முறையும், ஆயுதக்கலாசாரமும் பெரியளவில் வளர்ந்துள்ள நாடாக இலங்கை மாறியுள்ளது.

* நேபாளம், பூட்டான், மாலைதீவுகளில் மன்னராட்சி தொடர்ச் சியான ஆதிக்கம் செலுத்திவரும் அரசியல் சக்திகளின் செல்வாக் குகளால் மக்கள் வாழ்க்கையை பாதுகாக்க முடியாதுள்ளனர்.

* நேபாளத்தில் மாவோயிஸ்டுகளின் ஆயுதப்போராட்டமும் மலைவாழ் மக்களின் தனிநாட்டுக் கோரிக்கையும் அதிக பிரச்சனையாகியுள்ளது.

* இயற்கையின் அழிவிலிருந்து தப்பிப்பதற்கான உபாயம் எதுவும் தென்னாசிய நாடுகளிடம் கிடையாது. அதுபற்றிய அறிவுபூர்வமான சிந்தனை பூச்சியமாகவுள்ளது.

**பிராந்திய வல்லரசினால் ஏற்படும் சவால்**

பிராந்திய வல்லரசு என்ற அடையாளத்தை புதிய உலக ஒழுங்கின் கீழ் இந்தியா மேலும் தனதாக்கிக் கொண்டது. பனிப்போர் முடிவு ஆசியாவிற்குள் பொருளாதார போட்டியை முதன்மைப் படுத்தியது. இந்தியாவின் எதிர்பார்க்கை 2020ம் ஆண்டில் உலக வல்லரசுகளில் ஒன்றாக மாறுதல் சீனாவுக்கு சவர்லாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சியடைதல் என்ற தாக்கத்துடன் வளர்ந்து வருகிறது. இதனை அமெரிக்கா ஊக்குவிப்பதோடு தென்னாசிய பிராந்தியத்தை மட்டுமல்லாது இந்துசமுத்திரத்தினையே ஆளும் வல்லமையை பெறுவதற்கு உரித்தான தகைமைகளை உருவாக்க முயலுகின்றது. இந்தியாவின் சுயதொழில்நுட்ப வளர்ச்சி அறிவுசார் சமூக உருவாக்கம் என்பதை உலக நாடுகள் மட்டத்தில் வளர்ந்துவரும் சக்தியாக்கி யுள்ளது. அதற்கு உதவும் விதத்தில் மேற்குலக ஜனநாயகத்தை ஆதாரமாகக்கொண்டு இயங்கும் இந்தியா தென்னாசியாவைக் கடந்து ஆசியான், மற்றும் ஜி8 நாடுகளிலும், உலகவர்த்தக மையத்திலும் (WTO) பங்கெடுத்து வரும் பொருளாதார சக்தியாகவும் ஏனைய பிராந்திய நாடுகளின் பொருளாதார (IBSA) அமைப்பிலும் சங்காய் உடன்பாட்டிலும் பொருளாதார இலாபத்தை அடைவதில் கரிசனை செலுத்தி வருகிறது. இது மட்டுமல்லாது சார்க் (SAARC) அமைப்பின் எழுச்சியிலும் முழுமையான பங்கெடுப்பினை செலுத்தி வரும் இந்தியா தென்னாசிய நாடுகளை அரசியல் இராணுவம் சார்ந்த ஆக்கிரமிப்பினை கைவிட்டுவிட்டு பொருளாரத் தளத்தில் நேரடியாகவும், புலனாய்வு இராணுவ அரசியல் உபாயங்களுக்குள் மறைமுகமாகவும் ஈடுபட்டு வருகிறது. இதுவே தென்னாசிய நாடு களுக்குள் ஏற்பட்டுவரும் பிரதான சவாலாகும்.

பொருளாதார ரீதியில் இந்திய பொருட்களின் சந்தையாகிவிட்ட தென்னாசிய நாடுகளில் பாகிஸ்தானைத் தவிர மற்ற நாடுகள் அதீதமான நேரடி பொருளாதார உறவினைக் கொண்டிருக்கின்றன. இலங்கையின் பொருளாதார மட்டத்தில் நேரடியான முதலீடு (FDI) 2006ம் ஆண்டில் 200மில்லியன் அமெரிக்க டொலராக உள்ளது. இலங்கைக்கு இந்தியாவானது மூன்றாவது மிகப்பெரிய வர்த்தக பங்காளியாக உருவெடுத்துள்ளது. இலங்கை இந்தியாவுக்கு 4 சதவீதமான ஏற்றுமதியையும் 15 சதவீதமான இறக்குமதியையும் செய்யும் நாடாக மாறியுள்ளது. குறிப்பாக *Ceylon Biscuits LTD* முதலீட்டாளராக இந்தியாவைச் சேர்ந்தவர் விளங்குவது போல் உருக்கு, இரும்பு, தளபாட விநியோகத்தினை இந்தியக் கம்பனிகளே மேற்கொண்டு வருகின்றன. 2000 மார்ச் இற்கு பின்னர் சுதந்திர வர்த்தக உடன்பாடு *(Free Trade Agreement)* அதிகளவான தாக் கத்தை ஏற்படுத்தியது. அதன்படி 2008ல் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட பொருட்களுக்கு வரி தளர்த்தப்படுவதுடன் இலங்கைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா இறக்குமதி செய்ய முடியும். இந்தியாவுக்கு இலங்கை ஏற்றுமதி செய்யும் பொருட்கள் தென்மாநிலங்களான கேரளா, தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகாவிலே 80-90 சதவீதமானவை சென்றடைகின்றன. ஏனைய பிரதான நகரங்களில் காட்சி அறைகளில் மட்டுமே இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்கள் காணப்படுகின்றன.

இந்திய ஒயில் கம்பனிகளின் (IOC) பங்கு அதிக இலாபத்தை அடைவதோடு விலை நிர்ணயத்தின் கட்டுப்பாடற்ற தன்மைக்கு காரணமாக IOC அமைந்துள்ளது. திருகோணமலையில் அமைந்துள்ள எண்ணெய்க் குதங்களுக்கான உரிமை நூறு வருடங்களுக்கு இந்தியாவுக்கு கொழும்பில் உயர்மின் பிறப்பாக்கியை அமைப்பதற்கு வழங்கிய நிலமும் அதிலிருந்து 300அறு மின்வலுவை பெறுவதற்கான நடவடிக்கையையும் அடுத்து வரும் நூறு வருடத்திற்கு இந்தியாவுக்கு உரித்துடையதாகும். 2004 ஆகஸ்டிலிருந்து 147ற்கு மேற்பட்ட கருத்திட்டங்களை இலங்கையில் மேற்கொள்வதற்கு இலங்கை முதலீட்டு சபை ஒப்புதல் அளித்துள்ளது. இதில் பிரதானமாக இரயில் பாதை அமைப்பது இடம்பிடித்துள்ளது. சார்க் நாடுகளுக்குள் 50சதவீதமான முதலீட்டை இலங்கையில் இந்தியா முதலீடு செய்துள்ளது. 450 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்ய இந்தியா முன்வந்துள்ளது. 23மே 2005இல் இலங்கை முதலீட்டு மையம் ஒன்று முதன் முதலில் கடல் கடந்து இந்தியாவின் பெங்களூரில் நிறுவப்பட்டுள்ளது. 1997-98களில் 40சதவீதம் மோட்டார் சைக்கிளின் இலங்கைக்கான சந்தையை தக்கவைத்திருந்த சீனாவிடமிருந்து 2005களில் இந்தியா கைப்பற்றியதோடு சீனா 10சதவீதத்தினையே கொண்டிருக்க இந்தியா 60சதவீதத்தையே நிரப்பீடு செய்து வருகிறது.

இந்திய இலங்கையுடனேயே அதிகமான வர்த்தகத்தை கொண்டிருக்கிறது. குறிப்பாக 2005ஆம் ஆண்டில் 1732 மில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகத்தை கொண்டிருக்கும் போது பாகிஸ்தானுடன் 245 மில்லியன் அமெரிக்க டொலர் வர்த்தகத்தையும் வங்களாதேசுடன் 1.91 மில்லியன் வர்த்தகத்தையுமே கொண்டிருக்கிறது. இதன்படி நோக்கும்போது இலங்கையின் முன்னாள் வர்த்தன அமைச்சர் ரவி கருணாயக்கா குறிப்பிட்டதே பொருத்தப்பாடாக அமையும். *"We'd like to be the World's gateway to India, what Mexico is to the US and Hong Kong is to China."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாப்பு விடயத்தில் இந்தியா இலங்கையில் அதிகமான செல்வாக்கைச் செலுத்துகின்றது. தற்போதைய பாதுகாப்பு உறவை பின்வருமாறு அவதானிப்போம்.

* இரண்டாயிரம் ஆயுதப்படையினருக்கு ஒவ்வொரு வருடமும் இந்தியா பயிற்சி வழங்குகிறது. இதில் பொலிஸாரும் சேர்க்கப் படுகின்றனர்.

* பலாலி விமான நிலையத்தை புனரமைப்பது பற்றிய உடன் பாட்டிற்கு 2004 ஒக்ரோபர் இல் இரு அரசாங்கங்களும் இணக்க மான முடிவுக்கு வந்துள்ளன.

* இருநாடுகளுக்குமான பாதுகாப்பு உடன்படிக்கைக்குரிய முன்னாயத்தங்களாக ஆய்வுகளும் ஆய்வாராட்சிகளும் களப் பரிசோதனைகளும் புலனாய்வு நடவடிக்கைகளும் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

* இருநாடுகளும் இணைந்து இராணுவப் பயிற்சிகளை மேற் கொள்ளுதல், கடல், தரை புலனாய்வுத் தகவல்களை பரிமாற்றம் செய்தல் என்பன பாதுகாப்பு உடன்படிக்கையில் முதன்மைப் படுத்தப்பட்டு வருகின்றது.

பாகிஸ்தானுடனான உறவில் காஷ்மீர் பரஸ்பரம் இரண்டு நாடுகளிற்குமே குழப்பத்தை விளைவிக்கும் பிரதேசமாக உள்ளது. இருந்தபோதும் இந்தியா காஷ்மீரை முன்னிறுத்தி பாகிஸ்தானின் அரசியல் தலைமையில் பொருளாதார உறுதிப்பாட்டை தீர்மானிக் கின்றது. எல்லைத்தாண்டிய பயங்கரவாதத்தின் பெயரால் இந்தியா, பாகிஸ்தான் மீதான அழுத்தத்தினை பிராந்திய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் ஏற்படுத்தி வருகின்றது. முஷராப் 2005 ஏப்ரலில் இந்தியாவுக்கு வந்தபோது வர்த்தகம், போக்குவரத்து என்பன பற்றி உரையாடப்பட்டது. இந்தியாவைப் பொறுத்தவரை பாகிஸ்தான் பாரிய இராணுவ வலுவைப் பெற்றுவிடக்கூடாதென்பதில் சமாதா னத்தைப்பற்றி உரையாடலைத் தூண்டும் கொள்கைகளை அவ்வப் போது கொண்டிருந்தது.

15,000 கிலோமீற்றர் நீளமாக இந்தியாவுடனான எல்லையைக் கொண்டுள்ள நேபாளம் முடியாட்சி முறையிலிருந்து பாராளுமன்ற நிறைவேற்றுத்துறை ஆட்சிக்கு தயாராகி வருகின்றது. அதேநேரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவோயிஸ்டுக்கள் என நேபாளியர்கள் 1995இல் இந்திய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராட்டத்தைப் பிரகடனப்படுத்தியுள்ளனர். இந்தியாவின் ஒத்துழைப்புடன் 1950களிலிருந்து செயற்பட்டுவரும் நேபாளிய முடியாட்சி இராணுவ, பொருளாதார உதவிகளை இந்தியாவிடமிருந்து பெற்றுவருகின்றது. மன்னராட்சியை வீழ்ச்சியடையவிடாது அதேநேரத்தில் பாராளுமன்ற நிர்வாக ஆட்சியை தமக்குச் சார்பாக மாற்ற இந்தியா முயன்று வருகின்றது. இந்தியாவின் வர்த்தகம், பொருளாதார உதவிகள் மற்றும் முதலீடுகள் பலமாக அமைந்தபோதும் மாவோயிஸ்டுக்களின் இந்திய எதிர்ப்பு அதிக நெருக்கடியை தோற்றுவித்துள்ளது.

பூட்டான் இன்னோர் இமாலய அரசாகும். இந்திய எதிர்ப்பு வாதத்தை கொண்டிருக்கும் மன்னன் நேபாளத்துடனான உறவை பலமானதாக கொண்டிருக்கின்றார். இந்தியா பூட்டானின் ஜனநாயக ஆட்சிபற்றி அதிக கரிசனை கொண்டு இயங்குகின்றது. தென்னாசியாவுக்குள் அதிக தலாவருமானத்தைக் கொண்டநாடு என்பதையும் (12000 அமெரிக்க டொலர் மாத வருமானமாகவுள்ளது) குறிப்பிடத்தக்கதாகும். சக்தி மற்றும் நீர் தொடர்பான ஒத்துழைப்புக்களை இந்தியாவுடன் கொண்டிருக்கும் பூட்டான் பாதுபாப்பு இராணுவ உதவிகளை தற்போதைய காலப்பகுதிகளில் தவிர்ப்பதுடன் இந்தியாவுடன் கசப்பான உறவையேகொண்டு இயங்குகின்றதெனலாம். பூட்டானைப் போன்றே மாலைதீவின் ஆட்சியும் இந்தியாவுடன் அதிக புரிந்துணர்வற்ற உறவை கொண்டுள்ளது. வேறுசக்திகளுடனான உறவில் அதிக ஈடுபாட்டைக் காட்டும் மாலைத்தீவு இந்தியாவின் வற்புறுத்தலினால் பாதுகாப்பு உறவைக் கொண்டிருக்கின்றது.

வங்களாதேஷ் அதிக நெருக்கடியை இந்தியாவினால் சந்தித்து வரும் அமைவிடத்தில் காணப்படுகின்றது. பீகார், மேற்கு வங்கம், அஸாம் ஆகிய இந்திய மாநிலங்களை எல்லையாக கொண்டுள்ள வங்களாதேஷ் இந்தியாவுக்கு எதிரான இஸ்லாமிய ஊடுருவலையும் தீவிரவாதத்தை தூண்டும் நாடாகவும் காணப்படுகின்றது. (ISI) உளவுப் பிரிவின் ஊடுருவல் வங்களாதேஷ் எல்லையூடாகவே நிகழ்கிறது என நம்பப்படுகிறது. வர்த்தக பொருளாதார ஒத்துழைப்பு நிலவியபோதும் எல்லாக் காலத்திலும் சமநிலையான வர்த்தக உறவு நிலவுவதில்லை. இயற்கை எரிவாயுவே இருநாட்டு வர்த்தகத்திலும் இடம்பிடித்துள்ள பிரதான அம்சமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னாசியாவுக்கு வெளியே இருந்து ஏற்படும் சவால்கள்

இரண்டு பிரதான சவால்கள் வெளிப்படையாக எதிர்கொள் ளப்படுகின்றது.

(1) உலகமயப்படுத்தல் என்ற அமெரிக்க ஆதிக்கம்

(2) பயங்கரவாதம் என்ற போர்வையில் எழுந்துள்ள ஆதிக்கம்

உலகமயப்படுத்தல் என்பது மிகத்தீவிரமாக ஒவ்வொரு தென்னாசிய மக்களையும் சென்றடையும் வல்லமையைக் கடந்த இரண்டு தசாப் தங்களில் எட்டியுள்ளது. விழுமியமற்ற இறையாண்மை இல்லாத சுயசார்புப் பொருளாதார வலுவற்ற சமூகமாக மாறுவதில் உலகமய வாக்கம் வெற்றியை எட்டியுள்ளது. ஆனால் அத்தகைய அடைவுகள் தென்னாசிய நாடுகளிலுள்ள உயர்வர்க்க மிதவாத ஆட்சி அதிகார சக்திகளுக்கோ, தொழில்நுட்ப, விஞ்ஞான வளர்ச்சியை எட்டிய பிரஜைகளுக்கோ பாதிப்பு எதனையும் நிகழ்த்தவில்லை. அவ்வாறே பொருளாதார விருத்தியை நோக்கிய இந்தியாவுக்கு இலாபகரமான விளைவாகவே உலகமயமாக்கம் உள்ளது. இந்தியாவிலும் வறிய பின்தங்கிய கிராம வாழ்வைக் கொண்டுள்ள மக்களையே அதிகம் பாதித்துள்ளது.

உலகமயப்படுத்தலில் பொருளுக்கு பதில் சேவைத்துறையின் பங்கு பொருளாதாரத்தில் அதிகரித்துள்ளது. தென்னாசியாவுக்கு சந்தையாக இந்தியாவே சேவைத்துறையில் மாறியதுடன் முன்னோ டியாக திகழ்கிறது. தகவல் தொழில்நுட்பமே (IT) சேவைத்துறை யிலும் முதல்நிலை வளமாக உள்ளது. உலக சந்தையில் கணனி மென்பொருட்களில் இந்தியா ஆண்டுக்கு 20-25 சதவீத பங்கினை கொண்டிருக்கிறது. இதில் *Infosys, Tes, Wipro* ஆகிய கம்பனிகள் பிரபல்யமாக உலக மட்டத்தில் இடம்வகிப்பதோடு 40,000 மக்கள் இதில் வேலைவாய்ப்பினை பெற்று வருகின்றனர். உலக சந்தையில் 18.5 சதவீதத்தை இந்திய கணனி உற்பத்தி கைப்பற்றியுள்ளன. இதனால் இந்திய பொருளாதாரத்துக்கு கிடைத்த வருமானம் மிகமிக அதிகமானது. 2000ம் ஆண்டில் 50பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் 2008ல் 1000 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித் துள்ளது. தற்போது அதை எட்டிவிட்டது 2007) உலக வங்கியின் கணிப்பின்படி இந்தியா 2020ல் நான்காவது பாரிய பொருளாதார சக்தியாக விளங்கும் என்பதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணித்தியாலத்திற்கு மென்கணனி உற்பத்தியில் இந்தியா எட்டினை உற்பத்தி செய்கிறது. இந்தியா ஆண்டுக்கு 120,000 பட்டதாரிகளை கணினி தொழில்நுட்பத்தில் உருவாக்குகின்றது. ஜேர்மனி 25000, சீனா 250000 பட்டதாரிகளை உருவாக்குகின்றது. 2008இல் சீனாவில் 2.2 மில்லியன் தகவல் தொழில்நுட்பத்தில் வேலைவாய்ப்பினை பெறுவார்கள் என *Ckinsey* அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொழில்நுட்பப் புரட்சியில் இன்னோர் மைல்கல்லாக இந்திய அமெரிக்க அணுவாயுத உடன்பாடு அமையவுள்ளது. சிவில் சமூகத் தின் பாவனைக்கு உதவும் வகையில் அணுவாயுத தொழில் நுட் பத்தை பயன்படுத்த அமெரிக்கா முன்வந்துள்ளது. 2005 டிசெம்பரில் வில்லியம் புஷ் ஒப்பமிட்ட இவ்வுடன்படிக்கை அமெரிக்க காங்கிரஸினால் ஒப்புதலளிக்கப்பட்டு அமுலுக்கு தயாராக உள்ளது. இதில் இந்தியா அடையவுள்ள இலாபங்கள் அதிகமாகவுள்ளது.

(1) சக்திவளத்தினைப் பெறுவதற்கு உதவக்கூடியது 2014இல் இந்தியாவுக்கு 4000அனு மின்சக்தி அவசியமானது.

(2) பொருளாதார உற்பத்திகளிற்கும் வாய்ப்புகளிற்கும் 90சதவீத மான பாதுகாப்பினை தரவல்லது.

(3) சீனாவை எதிர்கொள்ளும் வலுவை இந்தியா பெற்றுக்கொள்ளும் என கருதப்படுகின்றது.

(4) மருத்துவம், விண்வெளித் தொழில்நுட்பம், தகவல் தொழில் நுட்பம் என்பனவற்றுக்கு பெரும் பங்காற்றக்கூடியது.

ஆனால், சாமுவேல் ஹன்ரிங்டன் குறிப்பிடுவது போல் "இது ஒரு சமயோசிதமான ஆரம்பம் தான். ஆனால் இதன் பொதுவிருப்ப மானது சீனாவுக்கு எதிராக இந்தியாவை நிறுத்துவதற்கான ஏற்பாடு என்பதுடன் பாரிய முரண்பாடு எதிர்காலத்தில் ஏற்படக்கூடியதாக வுள்ளது. தென்னாசியாவுக்குள் அமெரிக்காவுக்கு சிறந்த சேவகனாக இந்தியா விளங்குகிறது" என்றார். இந்தியா போன்று வேறு எந்த தென்னாசிய நாடும் பொருளாதாரத்தில் பாரிய பங்காற்றவில்லை. இந்திய தகவல் தொழில்நுட்பத்திற்கு சந்தையாக மட்டுமே தென்னாசிய நாடுகள் விளங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதம் இன்னோர் அடிப்படைப் பிரச்சினையாக உள்ளது. 9/11 தாக்குதலுக்கு பின்பாக உலகத்தில் இஸ்லாமிய தீவிரவாதம் வெகுவேகமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் அதனுடன் ஒத்துழைக்கும் நாடுகளையும் அழிவுக்குள்ளாக்கி வருகிறது. இந்தியாவின் ஸ்திரத்தை குலைப்பதற்கு பல பிரயத்தனத்தில் இஸ்லாமிய தீவிரவாதம் ஈடுபட்டு வருகின்றது. இலங்கையிலும் கிழக்கு மாகாணத்தில் இதன் செல்வாக்கு வளர்வதாகவும் மூதூர் மீதான விடுதலைப்புலிகளின் தாக்குதலின் இலக்கு அதுவென்றும் தினமணி தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டிருந்தது. அது தற்போது மீளவும் வளர்ந்து வருவதாகவும் இந்தியாவுக்குள் அது ஊடுருவ வாய்ப்பு இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

தென்னாசியாவை கற்றல் என்பது பரந்துபட்ட பரப்பை புரிந்து கொள்வதன் வாயிலாக சாத்தியப்படுவதாகும். புராதன வரலாற்றில் இருந்து நவீன தொழில்நுட்ப யுகம் வரையும் ஆராய்தல் அவசியமானது. அரசியலின் ஆணிவேரை தென்னாசிய மதப்பிரிவுகளிலிருந்தும், அதன் பரவலாகிய மாதிரியிலிருந்துமே புரிந்துகொள்ளுதல் வேண்டும். இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவ மதத்தின் வேர்களிலேயே தென்னாசிய அரசியல் சித்தாந்தம் உருவெடுத்தது. இத்தகைய புரிதலின் மூலமே தென்னாசிய நாடுகளின் சவாலை விளங்கிக்கொள்ள முடியும். (அரசறிவியலாளன் இதழ் 02 2007)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Indian Software and Serviecs Sector

Knowledge workers.

| Year | Percentag(1000%) |
|---|---|
| 1997 | 200 |
| 2000 | 300 |
| 2001 | 400 |
| 2002 | 500 |
| 2003 | 600 |
| 2004 | 800 |
| 2005 | 900 |

Indian Software and Services Exports

| Year | Exports (%) |
|---|---|
| 2000 | 5.0 |
| 2001 | 7.0 |
| 2002 | 9.0 |
| 2003 | 10.0 |
| 2004 | 14.0 |
| 2005 | 16.0 |
| 2006 | 20.0 |
| 2007 | 24.0 |
| 2008 | 35.0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Source: India Quatery VOL. LXII No.03 July September 2006.

Output and Employment Shares in Selected Developed Countries (2002)

| | Shares in Output (%) | | | Shares in Empioyment (%) | | |
|---|---|---|---|---|---|---|
| **Country** | **Agriculture** | **Industry** | **Services** | **Agriculture** | **Industry** | **Services** |
| United Kingdom | 1 | 26 | 73 | 1 | 25 | 74 |
| United States | 2 | 23 | 75 | 2 | 24 | 74 |
| France | 2 | 22 | 76 | 3 | 25 | 72 |
| Japan | 1 | 31 | 68 | 5 | 31 | 64 |
| Germany | 1 | 30 | 69 | 3 | 33 | 64 |
| Italy | 3 | 29 | 69 | 5 | 32 | 63 |
| Australia | 4 | 26 | 69 | 5 | 21 | 74 |

**Source :- The Indiun Economic Journal – Vol.54, Number, April – June 2006**

Changes is Sectoral Shares (%) in UDP in Some Asian Countries (1960, 2002)

| | **Agriculture** | | **Industry** | | **Services** | |
|---|---|---|---|---|---|---|
| **Country** | **1960** | **2002** | **1960** | **2002** | **1960** | **2002** |
| China Indonesia | 30 (1980) | 15 | 49 | 51 | 21 | 34 |
| | 50 | 18 | 25 | 45 | 25 | 38 |
| Thailand | 40 | 09 | 19 | 43 | 41 | 48 |
| Malasia | 36 | 09 | 18 | 47 | 46 | 44 |
| Philippins | 26 | 14 | 28 | 33 | 46 | 53 |
| Republic of Koria | 34 | 04 | 20 | 41 | 43 | 55 |
| Pakistan | 46 | 23 | 16 | 23 | 38 | 54 |
| India | 55 | 24 | 16 | 25 | 29 | 51 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Indo – Sri Lankan Bilateral Trade in us $ Millions

| Year | Exports | Imports | Total |
|---|---|---|---|
| 1999 | 512 | 49 | 561 |
| 2000 | 600 | 58 | 658 |

(Post FTA – Free Trade Agreements)

| | | | |
|---|---|---|---|
| 2001 | 602 | 72 | 674 |
| 2002 | 835 | 171 | 1006 |
| 2003 | 1093 | 245 | 1338 |
| 2005 | 1350 | 382 | 1732 |

## Bibliography


Abdul Natey; IBSA forum, The Rise of New Non – Alignment, Vol.LXI No 1,

January – March 2005, India Quarterly: New Delhi.

B.C. Upreti; Contemporary South Asia Kalinga Publication Delhi- 2004

Farzana Begum; Growing mutuality in India – Sri Lanka Relations, Ibid

Hemavathi Sekar; Globalization of Service Activities: Opportunities and Challenges for India, Vol. LXII No.03, July – September India Quarterly: New Delhi.

Nalini Kantha; Dynamics of India's Security and Foreign Policy; Responding to Challenges of South Asia; Vol. LXI No.4, October – December 2005 India Quarterly, New Delhi

P.M. Kamath; Civil Nuclear Deal: Turning Point in Indous Relation Ibid.

Rudra Prakash Pradhan; Rural Poverty Alleviation India's Experiences and Needed Strategy; Ibid




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே.ரீ.கணேசலிங்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அரசறிவியல் துறையில் முதுநிலை விரிவுரையாளராக உள்ளார். இவர் கற்றல் -கற்பித்தல் செயற்பாட்டில் மட்டுமன்றி, ஆய்வுக்கலாசாரத்திலும் முழுமையான ஈடுபாடு கொண்டவர். இதற்கான தகுதியை ஆளுமையை அறிவை விருத்தியாக்குவதில் தீவிர ஈடுபாடு கொண்டவர். இவர் எண்பதுகளுக்குப் பின்னர் உருவான புதிய தலைமுறைக் குழாமைச் சார்ந்தவர். இதனால் சமூகப் பொறுப்பு, அரசியல் நிலைப்பாடு, கருத்துநிலைத்தெளிவு, பன்முகத் தேடல்... போன்ற உயரிய பண்புகளை உள்வாங்கும் திறன் கொண்டவர். இதற்கான மனப்பாங்கு, ஆளுமை விகசிப்பு, ஆய்வு நோக்கு போன்றவை இவரது பலமான அம்சங்களாகும். தமிழில் அரசியல் கலாசாரம் பற்றிய சிந்தனைக்கும் ஆய்வுக்கும் தேடலுக்கும் புதுக்களங்களை அடையாளங் காட்டுவதில் முனைப்புடன் உழைத்து வருபவர்.

ISBN 978-955-1857-74-5

9 789551 857745

சேமமடு பதிப்பகம்

விலை: 200.00

CBCN:2010-05-02-075

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org